REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ThinakaranLk / ThinakaranLK

# தினகரன்

2024 பெப்ரவரி 16 வெள்ளிக்கிழமை
THINAKARAN

வரு. 92 இல. 41 | Friday 16, February, 2024 | 20பக்கங்கள் | 50/-

## பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில்,

இலங்கை பாடசாலைகளின் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று (16) வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைவதாக அறிவித்துள்ளது.

06

## அஸ்வெசும: இரண்டாம் கட்டம் நிறைவில் 24 இலட்சம் குடும்பங்கள் பயனடையும்

### விண்ணப்பங்கள் நேற்று முதல் கையேற்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அஸ்வெசும இரண்டாம் கட்டம் நிறைவுறுகையில் 24 இலட்சம் குடும்பங்கள் நன்மையடையுமென அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு சபையின் தலைவர் ஜயந்த விஜயரத்ன தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவை அனுமதி

06

## அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம்: முதலாம் கட்டம் ஜனாதிபதியால் கையளிப்பு



- மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் திட்டமும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.
- வட. மத்திய மாகாணத்தை வலுசக்தி மையமாக மாற்றுவதில் கவனம் – ஜனாதிபதி

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் முதலாம் கட்டம் நேற்று (15) ஜனாதிபதியால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

நீண்டகாலமாக சிறுநீரக நோயால் அவதியுறும் மதவச்சி, பதவிய, கெபித்திகொல்லாவ, ஹொரவபொத்தான, கஹட்டகஸ்திகிலிய பிரதேச மக்களுக்கு தூய குடிநீர் உரிமையை வழங்கும் நோக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 11,515 மில்லியன் ரூபாய் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டம், அநுராதபுரம் மஹா கனதராவ குளத்தை பிரதான

06

## பஸ்வண்டிகளை திருத்தி மீள சேவையில் ஈடுபடுத்தும் திட்டத்தில் பாரிய மோசடிகள்

### அம்பாறை டிப்போவில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரிக்குமாறு இ.போ.ச தலைவருக்கு அமைச்சர் பந்துல குணவர்தன உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளை திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் திட்டத்தில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட பஸ்வண்டிக்குப் பதிலாக, வேறொரு பஸ்வண்டியின் இலக்கத் தகட்டைப் பொருத்தி பஸ்ஸை சேவையில் ஈடுபத்தியது தொடர்பிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இலக்கத் தகடுகளை பொருத்திய பஸ்வண்டிகள் திருத்தி அமைக்கப்பட்டதாக காட்டி, பாரிய நிதி மோசடிகளும் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. இதுகுறித்து விசாரணைகளை ஆரம்பித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி. அல்விசுக்கு போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

400 பஸ் வண்டிகளை திருத்தும் வேலைத் திட்டத்தின் கீழ், இரண்டாம் கட்டமாக 200 பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் வைபவம் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோரின் தலைமையில் கடந்த (09) இடம்பெற்றுள்ளது. இதன் போதே இம் முறைகேடுகள் இனங்காணப்பட்டன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பந்துல குணவர்தன இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஜெய்கா நிறுவனத் தலைவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) தலைவர் கலாநிதி தனக்கா அகிஹிக்கோ நேற்று முன்தினம் (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். ஜனாதிபதி அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப

06

## விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த 2022 ஆம் ஆண்டில் சுமார் 50,000 விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## இஸ்ரேல், இலங்கையிடையே நேரடி விமான சேவைகள்

### ஒப்பந்தம் கைச்சாத்தானதாக அமைச்சர் தெரிவிப்பு



இஸ்ரேல், இலங்கைக்கிடையிலான நேரடி விமான சேவைக்கான ஒப்பந்தம் நேற்று (15) முற்பகல் கைச்சாத்திடப்பட்டதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஏற்படும் தாமதங்களைத் தடுப்பது , இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார். இதில் கருத்துரைத்த அமைச்சர்:

கொள்கலன் கப்பல் போக்குவரத்து சுமார் 32 வீத வளர்ச்சி கண்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவை ஒப்பந்தம் நேற்று காலை கைச்சாத்திடப்பட்டது. இஸ்ரேல் போக்குவரத்து அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை, விமான சேவைகள் அமைச்சுக்கிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதன்படி,

06

## தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு இரு வாரங்கள் இடைக்காலத் தடை

### இம்மாதம் 29இல், மீண்டும் விசாரணைகள்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாநாடு எதிர்வரும் (19) திங்கட்கிழமை நடைபெறவிருந்தது. இந்நிலையில், இரண்டு வாரங்களுக்கு இந்த மாநாட்டை நடத்த வேண்டாமென திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் நேற்று (15) இடைக்கால தடை

06

## மின்சார கட்டணத் திருத்தம் மார்ச்சில் நடைமுறையாகும்

### மக்கள் கருத்தறியும் பணிகள் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நடைமுறையில் உள்ள மின்சார கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் செயற்பாடு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான செயற்பாடுகள்

06

## சாந்தன் நாடு திரும்ப அரசாங்கம் அனுமதி

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் ஒருவரான சாந்தன் எனப்படும் சுதந்திரராஜா நாடு திரும்புவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

32 வருடங்கள் சிறையிலிருந்த இவர், கருணை மனு அடிப்படையில் விடுதலையாகியிருந்தார்.

06

## பேச்சுவார்த்தைக்கு இணங்கியதால் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

### சுகாதார அமைச்சருடன் திங்களன்று சந்திப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் கடந்த இரு தினங்களாக மேற்கொண்ட பணி பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை (19) பேச்சுவார்த்தை நடத்துவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்ததால்,

06

Ministry of Health

## 03

**பொதுஜன ஐக்கிய முன்னணி**



**தலைவர் பதவியை ஏற்க இன்னும் தீர்மானிக்கவில்லை**

## அமரர் விஜயகுமாரதுங்கவின் 36ஆவது நினைவு தினம் இன்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மனிதநேயக் கலைஞர் அமரர் விஜயகுமாரதுங்கவின் 36 ஆவது நினைவு தினம் இன்று (16) பிற்பகல் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தேசிய மக்கள் சகோதரத்துவ மன்றத்தின் முக்கியஸ்தர் மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் தெரிவித்துள்ளார்.

அமரர் விஜயகுமாரதுங்க மற்றும் புவக்தரமுல்லே பேமாலோக தேரர் உள்ளிட்ட மரணமடைந்துள்ள

06

## தப்பிச்சென்ற குற்றவாளிகளுக்கு எதிராக 42 சிவப்பு எச்சரிக்கைகள்

### இன்ரபோலின் உதவியுடன் நாட்டுக்கு அழைத்துவரப்படுவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப்பொருள் குற்றச் செயல்கள் தொடர்பில் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள பாதாளக் கோஷ்டி மற்றும் குற்றவாளிகள் சம்பந்தமாக 42 சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக

06

## இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானதல்ல



இணையவழி பாதுகாப்பு சட்டம் அரசியலமைப்பிற்கு முரணாக நிறைவேற்றப்படவில்லை என, ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

## சிறுவர் துஷ்பிரயோகங்கள்; 2023 இல், 10,000 முறைப்பாடுகள்

### சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்த நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் கடந்த வருடத்தில், சுமார் 10 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க இது தொடர்பில் தெரிவிக்கையில்,

06

## வெளிநாட்டினர் 186 பேரை நாடு கடத்தும் மாலைதீவு

### 25 இலங்கையர்களுக்கும் நடவடிக்கை




சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 25 இலங்கையர்கள் உட்பட 186 பேரை, நாடு கடத்துவதற்கு மாலைதீவு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வீசா மீறல் மற்றும் போதைப்

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்





# விஜய படுகொலைக்கு இப்போதாவது மக்களிடம் மன்னிப்புக் கேளுங்கள்!

விஜயகுமாரதுங்கவின் கொலையை, அக்கொலைக்கான கொலையாளிகளை முழுநாடும் அறிந்திருந்தாலும், கொலைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களான ஜே.வி.பியினர் எதுவும் பேசவில்லை. ஏனையவர்களின் 'பைல்' தொகையை காட்சிப்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுபவர்கள், தங்களைப் பற்றிய பைல்களைப் பற்றி கதைப்பதே இல்லை.

மற்றவர்களின் அரசியல் உரிமைகளுக்காக தோட்டாவைப் பயன்படுத்தியவர்கள், தேசத்திடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய தருணம் தற்போது தோன்றியுள்ளது. மன்னிப்புக் கேட்கப்பட வேண்டியவர்களில் விஜயகுமாரதுங்க முதலிடத்தில் இருக்க வேண்டும்.

இன்றைக்கு முப்பத்தாறு வருடங்களுக்கு முன்னர் விஜயகுமாரதுங்கவை கொன்றவர்கள் மற்றவர்களின் கோப்புக் கதைகளைச் சொல்வதற்கு முன்னர், தங்களது இரத்தம் தோய்ந்த கடந்த காலத்தைப் பற்றி வாக்குமூலம் அளிக்க வேண்டும். அதனை நினைவூட்டும் விதமாக, இன்று விஜய கொல்லப்பட்டு முப்பத்தாறு வருடங்கள் நிறைவான நிலையில், அந்தக் கொலையைப் பற்றிய சிறு நினைவூட்டலைப் பதிவு செய்வோம்.

எண்பத்தாறிலிருந்து எண்பத்தேழாம் ஆண்டு வரையான காலம் நகர்ந்து கொண்டிருந்தது. பீதி, வாசலைத் தாண்டி, வரவேற்பறையின் நடுப்பகுதி வரை வந்துவிட்டது.

அவ்வேளையில், ஜே.வி.பி அதன் கீழான அரசியலின் இன்றியமையாத அங்கமாக இருந்த அதன் ஆயுதப்பிரிவை பலப்படுத்தியது.

விஜயவை நோக்கி மிரட்டல்கள் வந்தன. இதுகுறித்து மக்கள் கட்சியில் விவாதம் நடந்தது. ஜே.வி.பியின் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் சவாலை வெற்றிகொள்ள மக்கள் கட்சி புதிய உபாயம் ஒன்றைப் பின்பற்றியது. விஜயவின் உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்காக அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்ளுமாறு சந்திரிகா குமாரதுங்க கட்சிக்கு யோசனை ஒன்றை முன்வைத்தார். விஜயின் மனதை மேலும் காயப்படுத்தும் சம்பவமாக நந்தன மாரசிங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.

விஜயகுமாரதுங்கவின் அரசியலில் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்ட நந்தன, மின்னேரிய தொகுதியில் விஜய போட்டியிடும் சந்தர்ப்பத்தில் விஜயவின் உயிரைப் பாதுகாப்பதற்காக நந்தன விரிவான பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்கியிருந்தார்.

நந்தனவின் இறுதி ஊர்வலத்தில் விஜய கலந்து கொண்டார். நந்தன போன்றவர்களைக் கொன்று செய்யக்கூடிய புரட்சி எதற்கு? புரட்சி என்றால் என்ன?

**இறுதிச் சடங்குகளின் போது விஜய இவ்வாறு வினவினார். ஜே.வி.பியினால் மக்கள் கட்சி தடை செய்யப்பட்டது.**

நாடு பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியது போல் தெரிந்தது. இந்திய_ இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் மென்மேலும் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுமையை ஜே.வி.பியினர் தமது தோளில் ஏற்றுக்கொண்டனர்.

**மூன்றாவது எதிரி இராணுவம்:**

ஜே.வி.பி தற்போது மக்கள் கட்சி உறுப்பினர்களுக்கு மரணசாசனம் எழுதிக் கொண்டிருந்தது. ஜனவரி 25 அன்று தேசபக்தி மக்கள் இயக்கத்தினர் வெளியிட்ட அறிக்கையில், இடதுசாரிக் கட்சிகளை 'மூன்றாவது எதிரி இராணுவம்' என்று பெயரிட்டனர். இந்த எதிரிப்படைக்கு தலைமை வகித்தவர் விஜய. அவரது உயிருக்கு தெளிவான ஆபத்து இருப்பதை பாதுகாப்பு மற்றும் அரசியல் துறையினர் ஏற்கனவே உணர்ந்திருந்தனர்.

பெப்ரவரி 10ஆம் திகதி மக்கள் கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் எம்.சி.எச். அக்ரம் ஆயுதமேந்திய தேசபக்தி மக்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெப்ரவரி 11 ஆம் திகதி, கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான காமினி மெதகெதர பொலன்னறுவையில் படுகொலை செய்யப்பட்டார். அவர் ஒரு வழக்கறிஞர் மற்றும் ஆங்கில ஆசிரியராகவும் இருந்தார். காமினி பொலன்னறுவையில் இருந்தபோது, அவரது சகோதரர் அனுர தனது குடும்பம் மற்றும் பெற்றோருடன் ரத்தோலுகம வீட்டுத் திட்டத்தில் வசித்து வந்தார. இதன் காரணமாக, காமினியின் இறுதிச் சடங்குகள் ரத்தோலுகமவில் நடத்தப்பட்டன. மேலும் பெப்ரவரி 15 அன்று நடைபெற்ற இறுதிச் சடங்கில் விஜயவும் பங்கேற்றார்.

**ஐக்கிய சோசலிச முன்னணிக்கு அனைத்தும் தயார்:**

மறுநாள் விடிந்தது. பெப்ரவரி 16 ஆம் திகதி விஜயவிற்கு வழமை போன்று பரபரப்பான நாளாக அமைந்தது. ஐக்கிய சோசலிச முன்னணியை உருவாக்க ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் இடதுசாரி கட்சிகளும் செயற்பட்டுக் கொண்டிருந்தன. பெப்ரவரி 21 ஆம் திகதி சுகததாச மைதானத்தில் ஆரம்பிக்க அனைத்தும் தயாராக இருந்தது. அதிகாலை 5.30 மணியளவில் ஜீவன் குமாரதுங்க விஜயவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 21ஆம் திகதி கட்சி மாநாட்டை ஏற்பாடு செய்வது குறித்து கலந்துரையாட விஜயவின் வருகை அவசியம் எனத் தெரிவித்தார்.

விஜய தனியாக தனது வானை செலுத்திக்கொண்டு காலை 6:30 மணியளவில் கொழும்பு 10, வஜிரஞான மாவத்தையில் உள்ள மக்கள் கட்சியின் தலைமையகத்தை அடைந்தார்.

சமீபத்தில் சிலாபம் பகுதியில் இருந்து இணைந்த ஆதரவாளர்கள் குழுவை சந்திப்பதற்காக விஜய சிலாபத்துக்கு செல்லவுள்ளதாக கட்சித் தலைமையகத்தில் இருந்த வை. பிக்கு தெரியவந்தது. ஆயுதம் ஏந்திய குழுவினர் விஜய மீது இலக்கு வைத்திருப்பதாக அறிந்திருந்த பி. டி சில்வா விஜயவுடன் செல்ல தேவபண்டார சேனாரத்னவை ஏற்பாடு செய்திருந்தார்.

சிலாபம் பயணத்தை முடித்துக் கொண்டு விஜய நேரடியாக பொல்ஹேன்கொடவில் உள்ள தனது வீட்டிற்கு வந்தார். அவர் வேறொரு பயணத்திற்கு புறப்படத் தயாராகுவதை வீட்டில் உள்ள வேலையாட்கள் பார்த்தார்கள்.

**அமெரிக்கத் தூதரகத்தில் மதிய உணவு:**

அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவருடன் மதிய உணவை உண்ண விஜய் முன்கூட்டியே தயாராகியிருந்தார். அதற்குத் தயாரான விஜய வீட்டை விட்டு வெளியே வரத் தயாரானார். மேல் தளத்தில் இருந்து கீழே வந்த விஜய், தனது இரண்டு குழந்தைகளையும், மனைவி சந்திரிகாவையும், அங்குள்ள வீட்டு வேலையாட்களையும் பார்த்தார்.

விஜயவை சந்திப்பதற்காக மக்கள் கட்சியின் ஆதரவாளரான உபாலி இலங்கரத்னவும் நம்பிக்கை நிறைந்த கண்களுடன் கீழே காத்திருந்தார். விஜய மூலம் உபாலிக்கு வெளிநாட்டு தொழில் கிடைத்திருந்தது. அதனைத் தெரிவித்து வெளிநாடு செல்லவே உபாலி காத்திருந்தார். விஜய உபாலியிடம் "வேலை முடிந்து எப்போது இலங்கைக்குத் திரும்புவீர்கள்?" என்று கேட்டார்.

"மூன்று வருடங்களில் இலங்கை திரும்புவேன்" என்று உபாலி குறிப்பிட்டதும், விஜய," உபாலி, மூன்று வருடங்களில் நீங்கள் இலங்கைக்கு வரும் போது,நாங்கள்இறந்த இடங்களில் மரங்களும் செடிகளும் முளைத்து இருக்கும்" என்று கூறியபடி தனது மகள் வரைந்திருந்த சித்திரத்தைப் பார்த்தபடி வெளியே வந்தார்.

இரண்டு குழந்தைகளையும் அருகில் இருந்த விஜயவின் தாயாரின் வீட்டில் இறக்கி விடுவது தான் விஜயவின் நோக்கமாக இருந்தது. விஜய வாசலுக்கு வந்து ரெக்ஸி சாரதி ஹேமபால பெர்னாண்டோ மற்றும் பாதுகாவலர் பத்திராஜா இலங்கரத்னவுடன் பேச ஆரம்பித்தார்.

பக்கத்தில் அமைந்திருந்த நுழைவாயிலில் இருந்து விஜயவுக்குச் சொந்தமான 27 ஸ்ரீ 7227 இலக்க டட்சன் பிக்கப் நகர்ந்து கொண்டிருந்தது. குறுக்குப் பாதை வழியாக பிரதான வீதிக்கு வாகனத்தை தயாரத்ன செலுத்திச் சென்றார்.வேலை முடித்து வெளியேறிக் கொண்டிருந்த விஜயவின் பாதுகாவலர்களில் ஒருவரான லலித் மற்றும் தயாராகிக் கொண்டிருந்த நவ பெரமுன மாநாட்டின் கலை வடிவமைப்பில் பங்களித்த ரத்கம உபாலியும் வாகனத்திற்குள் இருந்தார்கள்.

விஜய பிரதான வீதிக்கு அருகில் கூட்டத்தினருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, வாகனத்தில் பயணித்தவர்களும் வாகனத்தை நிறுத்திவிட்டு, அதில் இருந்து இறங்கி, விஜயிடம் பேசும் நோக்கத்தில் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

வாகனத்தில் இருந்த சாரதி தயாரத்ன, ஹெல்மெட் அணியாத இருவர் சீ.டி 200 ரக சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் பொல்ஹேன்கொட பகுதியிலிருந்து விஜயவின் வீட்டை நோக்கி வருவதைக் கண்டார்.

**கொலையாளி பாய்ந்து பாய்ந்து முகத்தில் சுட்டான்:**

பெப்ரவரி 16 அன்று விடுமுறை நாள். பொல்ஹேன்கொட வீதியில் வழமையான போக்குவரத்து நெரிசல்கள் அப்போது இல்லை. அடையாளம் தெரியாத மோட்டார் பைக் விஜயவை நோக்கித் திரும்பியதும், பின் இருக்கையில் இருந்தவர் பைக்கில் இருந்தவாறு விஜயவை நோக்கி சரமாரியாகச் சுட்டார்.

நகர்ந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்து விஜயை நோக்கி தொடர்ந்து சுட்டார். விஜயவின் உடலின் பின்பகுதியில் தோட்டாக்கள் தாக்க ஆரம்பித்தன. எதிர்பாராது தோட்டா மழை பொழிந்ததால் விஜயகுமாரதுங்க முகம்குப்புற விழுந்தார். கொலையாளி கீழே விழுந்த விஜயவின் அருகில் வந்து ஒரு நாட்டையே வசீகரித்த விஜயவின் முகத்தில் சுட ஆரம்பித்தான்.

கொலையாளி விஜயவின் முகத்தை நெருங்கி சுட ஆரம்பித்தான். துப்பாக்கிச் சூடு நடந்த அதே நேரத்தில், விஜயவின் உடலில் இருந்து பீறிட்ட இரத்தம் கொலையாளியின் துப்பாக்கி முனையில் தெறித்தது. விஜயின் தலை மற்றும் முகத்தில் இருந்து இரத்தம் வடிய ஆரம்பித்தது. அருகில் இருந்த ரத்கம உபாலியும் சுடப்பட்டார். சாரதி இருக்கையில் அமர்ந்திருந்த தயாரத்ன இதையெல்லாம் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். கண் இமைக்கும் நேரத்தில், அவர் அமர்திருந்த பிக்அப் மீதும் துப்பாக்கிச் சூடு தொடங்கியது. இந்தத் தாக்குதல் வாகனத்தைத் துளைத்தாலும் தயாரத்னவிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

கொலையாளி தனது தாக்குதலை முடித்துவிட்டு, விஜயவின் அருகில் கிடந்த ஆவணங்களைக் கொண்ட கோப்பை பரிசோதித்தான். பின்னர் பிரதான வீதியை நோக்கி நடந்து சென்று திரும்பி மோட்டார் சைக்கிளில் தன்னுடன் வந்தவருடன் ஏறிக்கொண்டார்.

வாகன நெரிசல் காரணமாக நாரஹேன்பிட்டியவில் இருந்து பொல்ஹேன்கொட நோக்கி பயணித்த பஸ் வண்டிக்கு இடையூறு ஏற்பட்டது. பஸ் வண்டியின் ஒரு ஓரத்தில் இருந்தவர்கள் தங்கள் வாழ்நாளில் மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் நினைவில் நிற்கும் காட்சியைக் கண்டனர். கொலையாளிகள் தாங்கள் இடைமறித்த பஸ் வண்டிக்கு அருகே மீண்டும் இறங்கினார்கள்.

கொலையாளிகள் கார்ச்சாரதியிடம் சென்று அவரையும், சம்பவத்தை நேரில் பார்த்த முன்வரிசையில் அமர்ந்திருந்த அனைவரையும் சம்பவம் குறித்து எதையும் வெளியில் கூற வேண்டாம் என மிரட்டினார்கள். பஸ் வண்டியின் சாரதி இருக்கைக்கு அருகில் அமர்ந்திருந்த நிஹால் கொடித்துவக்கு என்பவர் துப்பாக்கிச் சூடு சம்பவத்தை தெளிவாகக் கண்டதுடன், கொலையாளியும் மற்றும் அவனது சகாவும் அச்சுறுத்தும் வகையில் பஸ் வண்டியை நெருங்கிய போது அவர்களின் முகங்கள் தெளிவாகத் தெரிந்தன.

மோட்டார்சைக்கிளில் வந்த கொலையாளிகள் பொல்ஹேன்கொட சந்தியை நோக்கி தப்பியோடிய போது நேரில் பார்த்தவர்களை பயமுறுத்தவும், அவர்களைப் பின்தொடர்வதைத் தடுக்கவும் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 'கெடபதக ஜாயா' திரைப்படத்தில் அசிட் வீசி விஜயவின் முகம் அழிந்தது. அவரது முகம் சினிமா திரைக்கு வெளியே குண்டுமழையால் அவ்வாறு ஆகும் என்பதை யாரும் நம்பவில்லை.

**தேசபக்தி மக்கள் இயக்கம் மரணத்துக்கு பொறுப்பை ஏற்றுக் கொண்டது: பிபிசி கூறுகிறது...**

இலத்திரனியல் ஊடகங்களில் அரசுக்கு ஏகபோக உரிமை இருந்ததால், நடுநிலையான செய்திகளுக்கு அப்போது தனியாரால் நடத்தப்படும் செய்தித்தாள்களில் மட்டுமே இடம் கிடைத்தது, அரசு விரும்பும் செய்திகளை மட்டுமே அரசு கொடுத்ததால் மக்கள் ஒருதலைப் பட்சமான செய்திகளால் சலிப்படைந்தனர்.

இதன் காரணமாக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்து வதந்திகளின் வலைப்பின்னல் ஒன்று எழுந்து நாடு முழுவதும் பரவியது. விஜய சுட்டுக்கொல்லப்பட்டதாக வாய்வழியாக பலமுறை செய்தி பரப்பப்பட்டது. விஜய உண்மையில் சுடப்பட்ட நாளில், வதந்தி அலை மீண்டும் உயிர் பெற்றது. விஜய சுடப்பட்ட சில நிமிடங்களிலேயே வதந்திகள் மூலம் தகவல் அறிந்த திரைப்பட நடிகர்கள் மற்றும் ரசிகர்கள் கொழும்பு பொது வைத்தியசாலையை முற்றுகையிட்டனர். சிலர் மருத்துவமனையின் சுவரில் இருந்து குதித்து விஜயவின் உயிரிழந்த உடலைப் பார்க்க முயன்றனர். இதன்காரணமாக பொரளை, புஞ்சி பொரளை பிரதேசம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

விஜயவின் மரணச் செய்தி கேட்டதிலிருந்தே பெரும் சனக் கூட்டத்தால் ரேமண்ட் மலர்ச்சாலையும், பொல்ஹேன்கொட வீடும் நிரம்பத் தொடங்கின. பெப்ரவரி 17ஆம் திகதி விஜயவின் உடல் பொல்ஹேன்கொட இல்லத்தில் வைக்கப்பட்ட நிலையில், கொழும்பு இன்டர் காண்டினென்டல் ஹோட்டலில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

விஜயவின் கொலைக்கான பொறுப்பை ஜே.வி.பியின் ஆயுதப் பிரிவு ஏற்றுக்கொண்டதாக பி.பி.சி வானொலியின் கொழும்பு செய்தியாளர் ஜோன் ரெடி தெரிவித்துள்ளார். அந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் தொலைபேசியில் தன்னிடம் கூறியதாக ரெடி கூறினார். *(The Island, February 19, 1988, p. 1)*

06ஆம் பக்கம் பார்க்க...

**ஒஸித அத்தநாயக்க**

**"அவர் துரதிர்ஷ்டவசமாக இறந்தாலும், அவரது மறைவுக்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தியமை விஜய மீதான அபிமானத்தையே வெளிப்படுத்தியது. சிலர் விஜயவின் பூதவுடல் தகனம் செய்யும் வரை கண்ணீருடன் நாட்களைக் கழித்தனர். வாழும் விஜயவுக்கு கதவுகளை மூடிய அரச ஊடகங்கள், இறந்த விஜயவுக்கு தாராளமாக கதவைத் திறந்து வைத்தன. விஜயவின் கொலையை ஜே.வி.பிதான் நடத்தியது என்பதை ஊடகங்கள் உறுதிப்படுத்தின"**



விஜய கொலை செய்யப்பட்ட இடம்



பாதி மூடப்பட்ட நிலையில் விஜயவின் பூதவுடல்



கொலையாளி லயனல்



இறுதிக் கிரியை ஏற்பாடுகள்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 16 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மாசி 04
ராகுகாலம் : பகல் : 2.03 - 3.33வரை
சுபநேரம் : காலை : 8.03 - 9.33வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேச போக்குவரத்து நெருக்கடிக்கு விரைவில் தீர்வு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டே பிரதேசத்தில் நிலவும் பாரியபோக்குவரத்து நெருக்கடிக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வுகாணப்படுமென போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஶ்ரீஜெயவர்தனபுர பகுதியில் தற்போது பெரும் வாகன நெரில் ஏற்பட்டு வருகிறது.இதை அவதானிக்கும் பொருட்டு, இராஜகிரி கொட்டுவேகொட மற்றும் புத்கமுவவுக்கிடையிலான குறுகிய பாலம், அதனையண்டிய பிரதேசத்திற்கு அமைச்சர் விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போதே அமைச்சர்,இதனைத் தெரிவித்தார்.



காலையில் அலுவலக நேரத்திலும் மாலையில் அலுவலகங்கள் நிறைவடையும் நேரத்திலும் கொழும்பு நோக்கிச் செல்லும் வாகனங்கள் மற்றும் கொழும்பிலிருந்து வெ ளிச்செல்லும் வாகனங்களால் இப் பகுதியில் பாரிய வாகன நெரிசல்களை எதிர்நோக்க நேர்கிறது. குறுகிய பாலம் காரணமாகவே இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நேர்கிறது. மூன்று மாத காலத்திற்குள் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும்.

அந்த பகுதியில் நிரந்தரமாக பாலத்தை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கும் நிதி ஒதுக்கப்படும்.அதுவரை தற்போது நிலவும் போக்குவரத்து நெரிசல்களை மட்டுப்படுத்தும் வகையில் அரச பொறியியல் மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்திடம் உள்ள இரும்பு உள்ளிட்ட வளங்களை பயன்படுத்தி தற்காலிக பாலமொன்று அமைக்கப்படும். இதனை மூன்று மாதகாலத்திற்குள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# தவக்கால சிந்தனை



## அன்றாட வாழ்வோடிணைந்த நோன்பு

பொதுவாக நோன்பு என்பது உணவையும் பானத்தையும் தவிர்ப்பது என்று நாம் புரிந்து கொள்கிறோம். பொதுவாக தவக்காலத்தில் நம்மில் பலர் நோன்பு நோற்கிறோம். ஆயினும் திருஅவை விபூதிப்புதன், பெரியவெள்ளி ஆகிய இரு தினங்களிலேயே நோன்பு நோற்க நம்மை கட்டாயப்படுத்துகிறது.

உண்ணா நோன்பானது நமக்குள் தன்னடக்கத்தை பயிற்றுவித்துக் கொள்ள உதவுவதுடன் கடவுள் மீதான உள்ளார்ந்த பசியினையும் வெளிப்படுத்துகின்றது. உண்ணா நோன்பானது வெறுமனே தனிமைப்படுத்தப்பட்ட சடங்காகவோ அல்லது பயிற்சியாகவோ இல்லாது நமது அன்றாட வாழ்வோடு இணைந்து பரந்துபட்ட செயற்பாடாக இருக்கவேண்டும். நற்செய்தியில் இயேசு தம்மை மணமகனுடன் ஒப்பிட்டு, “மணமகன் தங்களுடன் இருக்கும் வரையில் திருமண விருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா?” என்கிறார். அவரது வாழ்வே ஒரு திருமணக் கொண்டாட்டமாக இருந்ததால் திருமண விருந்தில் யார் உண்ணா நோன்பு இருப்பார்களென்று அவரே கேள்வி எழுப்புகிறார். அவர் அவரது ஞானத்தினூடாக முன்னறிப்பது யாதெனில் காலம் வருகின்றபோது திருஅவையாகிய மணமகள் தனது மணமகனாகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்திற்காக காத்திருக்கும்போது உண்ணா நோன்பினை நோற்பாள் என்கிறார். நாம் இயேசுவிற்காக ஏங்கும்போது எதற்காக பசி, தாகம் கொள்கிறோம்? இறையரசின் மதிப்பீடுகளாகிய நீதி, நேர்மை போன்றவை இன்னும் நம்மை ஈர்க்கின்றனவா? இயேசுவின் வருகைக்காக நாம் காத்திருக்கும்போது எவ்வாறு அவரை உயிர்ப்புடன் வைத்திருப்பது? உண்ணா நோன்பானது நம்மைக் கடவுளுடன் ஆழமான உறவிற்கு ஈர்க்க வேண்டும் காரணம் நாம் கடவுளுக்காக வாழ்வில் ஏங்கும்போது அது நமது நடத்தையில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. எசாயா இறைவாக்கினர் கூறுமாற் போல் “அவர்கள் நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம் போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள், என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள்” (எசாயா 58:2).

இத் தவக்கால நாட்களில் நாம் பயணிக்கின்றபோது, நமது நோன்பு பயிற்சியானது மேலும் அர்த்தமுள்ளதாக அமையட்டும். கடவுள் மீதான நமது ஆசையும், ஆர்வமும் நூறு மடங்கு பெருகட்டும்.

அருட்தந்தை நவாஜி...

# அமெரிக்க பிரதி உதவிச் செயலாளருடன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் திருமதி அஃப்ரின் அக்தார் நேற்று முன்தினம் (14) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சந்திப்பில் கலந்து கொண்டார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. நாட்டின் அரசியல் நிலவரங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தயாரிக்கப்படும் கூட்டணி மற்றும் இரு தரப்பு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கு கடந்த காலங்களில் அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன நன்றி தெரிவித்தார். இச்சந்திப்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெளிவிவகாரச் செயலாளர் திரு.சஜின் வாஸ் குணவர்தன, இலங்கை தொழில் வல்லுநர்கள் அமைப்பின் தலைவரான கலாநிதி சமில லியனகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அரிசி ஆலையாளர்கள்,களஞ்சியசாலை உரிமையாளர்களுக்கு "மடபன" கடன் திட்டம்



சிறு மற்றும் மத்திய தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெற் களஞ்சியசாலை உரிமையாளர்கள், நெல் சேகரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் வகையில், "மடபன" கடன் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதியின் பொதுமக்கள் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். பெரும்போக நெல் கொள்வனவுக்காக இக்கடன் திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

06

## பொதுஜன ஐக்கிய முன்னணி

# தலைவர் பதவியை ஏற்க இன்னும் தீர்மானிக்கவில்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

06

# ஜனாதிபதி சுற்றாடல் விருது – 2024

## பூமியின் பாதுகாப்புக்கு அர்ப்பணித்த உங்களுக்காக

(மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் வெனுர பெர்னாண்டோ அவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் பீ.பி. ஹேமந்த ஜயசிங்க அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மூலம் தொகுக்கப்பட்டது)

“உன்னதமான சேவை ஒன்றின் மூலம் தூய பசுமைச் சுற்றாடல்” என்ற நோக்கை முன்னிறுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபை நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக இலங்கையில் இயங்கும் பிரதான சுற்றாடல் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஒன்றாக செயற்படுகிறது. “சிறந்த ஒருங்கிணைப்பு, ஊக்குவிப்பு, மக்கள் பங்கேற்பு, சட்டத்தை செயற்படுத்தல், சரியான தொழில்நுட்ப தலையீடு மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் மூலம் சுற்றாடலின் தரத்தை பாதுகாக்கும் மற்றும் பராமரிக்கும் தேசத்தின் முன்னோடி” என்பது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பங்களிப்பாகும். 1980 இன் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் மூலம் 1981 ஒகஸ்ட் 12ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிறுவப்பட்ட பின் அன்று தொடக்கம் இன்று வரை வரலாற்றில் இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்புக்காக செய்து வரும் பணிகள் அளப்பரியவை. சமகால தேவைகளை கருத்திற் கொண்டு தேசிய சுற்றாடல் சட்டத்தின் திருத்தத்திற்கமைய தற்போதும் செயற்பட்டு வருவது தொடர்ந்து இலங்கை சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான சட்ட ரீதியான நிலையை வலுவூட்டுவதற்கே. மேலும் தற்கால தேவை அடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் செயற்படுத்தப்படுகின்ற கொள்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் விசேட இணக்கப்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி முறைப்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை செயற்பட்டு வருகிறது.

### நோக்கம்

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பல உபாயமார்க்கங்கள் ஊடாக செயற்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சமூகத்தை மையப்படுத்திய நிகழ்ச்சித்திட்டமொன்றாக “ஜனாதிபதி சுற்றாடல் விருது” நிகழ்ச்சியை அடையாளப்படுத்த முடியும். சுற்றாடல் பாதுகாப்புக்கு பாரிய பங்களிப்பு வழங்கிய கைத்தொழில், வியாபார நிறுவனம் மற்றும் தனி நபர்களை பாராட்டி அரச கௌரவத்தை பெற்றுக்கொடுத்தல், சுற்றாடல் சார்பு செயற்பாடுகளுக்காக சமூகத்தை ஊக்குவித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்திக்கு மக்கள் பங்கேற்பை கட்டியெழுப்புதல் என்ற இலக்குகளை அடையும் நோக்கத்துடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பெரு முயற்சியுடன் “ஜனாதிபதி சுற்றாடல் விருது” நிகழ்ச்சியை நடத்துகிறது. 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் “உலக சுற்றாடல் தினத்தையொட்டி” இடம்பெறும் நிகழ்ச்சித் தொடரின் ஒரு விசேட நிகழ்ச்சியாக இம்முறை “ஜனாதிபதி சுற்றாடல் விருது” ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி சுற்றாடல் விருதின் வரலாறு

“தேசிய பசுமை விருது” என்று 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி 2016ஆம் ஆண்டு தொடக்கம் ஜனாதிபதி சுற்றாடல் விருது” என்ற பெயரில் நடாத்தப்படுகின்றது. சுற்றாடல் மாசுபடுத்தலை மட்டுப்படுத்தி சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்தக் கூடியவாறு பாராட்டுக்குரிய வகையில் தொழில்துறைகள் மற்றும் சேவைகளை நடாத்திச் செல்வதற்கு அவர்களை தூண்டுவது மற்றும் பசுமை தூய சுற்றாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிக்கும் தொழில்துறையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை பாராட்டுக்கு உட்படுத்தும் நோக்குடன் தேசிய பசுமை விருது விழா ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு சாதகமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை சுற்றாடல் பாதுகாப்புக்காக அர்ப்பணித்திருக்கும் இந்த விருது விழா இலங்கை தொழில்துறையாளர்களுக்கு, அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், பாடசாலைகள், ஊடகவியலாளர்கள் என பல்வேறு சமூகக் குழுக்களுக்கு பெரும் கௌரவத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாக வழியமைத்துள்ளது.



அதிகாரசபையின் தலைவர்
வெனுர பெர்னாண்டோ

### போட்டிப் பிரிவுகள்

“ஜனாதிபதி சுற்றாடல் விருது - 2024” நிகழ்ச்சிக்காக தற்போது விண்ணப்பங்கள் ஏற்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. “கைத்தொழில், வியாபாரம் மற்றும் திட்டப் பிரிவுகள்” மற்றும் “நிறுவனங்கள், வெகுசன ஊடகம் மற்றும் சமூகப் பிரிவுகள்” அகிய பிரதான இரு பிரிவுகளின் கீழ் இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதன்படி “கைத்தொழில், வியாபாரம் மற்றும் திட்டப் பிரிவின்” கீழ் 16 உப பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

- திண்மக் கழிவுகளை மீளப் பெறுதல்/ மீள்சுழற்சி/ அகற்றல் அல்லது முறைப்படுத்தும் தொழில்துறை
- இரசாயன உற்பத்தி தொழில்துறை
- வாகன நன்னிலைப்படுத்தல் சேவை நிலையங்கள்
- உணவு உற்பத்தி தொழில்துறை
- ஹோட்டல்
- ஆடை தயாரிப்பு தொழில்துறை
- மருந்து உற்பத்தி மற்றும் அழகுக்கலை உற்பத்தி தொழில்துறை
- மருத்துவ சிகிச்சை நிலையங்கள்
- இறப்பர் சார்ந்த உற்பத்தி தொழில்துறை
- விலங்கு பண்ணைகள்
- தைத்த ஆடைகள் உற்பத்தி தொழில்துறை
- தேயிலை தொழிற்சாலைகள்
- அச்சு செயற்பாடுகள் கொண்ட பொதியிடல் உற்பத்தி தொழில்துறை
- கனிமம் சார்ந்த உற்பத்தி தொழில்துறை
- புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி திட்டங்கள் (சிறிய அளவான நீர் மின்சார திட்டங்கள்/ சூரிய சக்தி மின்சார திட்டங்கள்/ காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள்)
- மாகாண சபை நிறுவனங்களின் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டங்கள்

“நிறுவனங்கள், வெகுசன ஊடகம் மற்றும் சமூகப் பிரிவின்” கீழ் பாராட்டுக்கு உட்படுத்தப்படும் எட்டு உப பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

- பாடசாலை
- சுற்றாடல் சார்புடைய அரச நிறுவனங்கள்
- சுற்றாடல் சார்புடைய தனியார் நிறுவனங்கள்
- சுற்றாடல் பாதுகாப்புக்காக பாரிய பங்களிப்பை வழங்கி இருக்கும் நபர்கள்
- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளில் செயற்படுகின்ற தேசிய அளவிலான அரசு சாரா சுற்றாடல் அமைப்பு
- சுற்றாடல் சார்புடைய புதிய படைப்புகள் (பாடசாலை/ பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனம்/ தொழில் பயிற்சிப் பிரிவு)
- வெகுசன பிரிவு (“தனிநபர்கள்” மற்றும் “பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்” என்ற இரு பிரிவுகள் உள்ளன)

### பாராட்டுகள் மற்றும் விருது விழா

விருது விழாவில் பாராட்டு செயற்பாடுகள் அந்தந்த பிரிவுகள் சார்ந்த நிபுணர்களால் மேற்கொள்ளப்படுவதோடு நிபுணர்கள் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். ஜனாதிபதி சுற்றாடல் விருது, வெள்ளி சுற்றாடல் விருது, வெண்கல



பணிப்பாளர் நாயகம்
பீ.பி. ஹேமந்த ஜயசிங்க

சுற்றாடல் விருது மற்றும் சிறப்புத் தகைமை விருது என விருதுகளை பெறுவதற்கு “ஜனாதிபதி சுற்றாடல் விருது” விழாவில் போட்டியாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இலங்கையில் சுற்றாடலை பாதுகாக்கும் நோக்குடன் நடத்தப்படுகின்ற இந்த விருது நிகழ்வு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த துறைகளுடன் தொடர்புபட்ட தாங்கள் அல்லது தங்களது நிறுவனம் செயற்படுவதாயின் ஜனாதிபதி சுற்றாடல் விருதுபெற விண்ணப்பிக்கும்படி எமது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் அவர்கள் தங்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்கிறார்கள்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.cea.lk இற்குள் பிரவேசித்து அல்லது 0112873447, 0112872278 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அல்லது 0112888999 என்ற அவசர இலக்கத்திற்கு அழைத்து விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் 0706725222 என்ற தொலைபேசி இலக்கத்தில் உதவிப் பணிப்பாளர் கலாநிதி லக்மினி ராதிகா அவர்களை, 0713486339 என்ற தொலைபேசி இலக்கத்தில் சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி அர்ஷா குமாரி அவர்களை அழைத்தும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விருது விழாவுக்காக விண்ணப்பங்களை ஏற்பது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி நிறைவடையும்.

சுற்றாடலை பாதுகாப்பது நம் அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும். நாம் செய்கின்ற அனைத்து செயற்பாடுகளிலும் சுற்றாடல் தொடர்பில் நன்கு சிந்தித்து செயற்படுவதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை தவிர்த்துக்கொள்ள முடியும். ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஒன்றான நாங்கள் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை தணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். அந்த நடவடிக்கைகள் வெற்றி அளிப்பதற்கு பொதுமக்களின் பங்களிப்பு தேவையாகும். நாம் சட்ட ஒழுங்குகளை உருவாக்கும்போது மனிதன் உட்பட சுற்றாடலின் ஒருமிமித்த நன்மைகளை கருத்திற் கொண்டு பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்திய பின்னரே சட்ட ஒழுங்குகளைள அமுல்படுத்துகின்றோம். இவற்றினால் அன்றாட வாழ்க்கை முகளில் ஒரளவுக்கேனும் மாற்றங்களை உருவாக்கி அதற்கிணங்கி செயற்படுவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அதனால் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஒன்றாக செயற்படுகின்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை அல்லது வேறு ஏதேனும் சுற்றாடல் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் சட்ட ஒழுங்குகளில் அவதானம் செலுத்தி அதன்படி செயற்பட்டு சுற்றாடலை பாதுகாப்பதற்கு உங்கள அனைவரதும் பங்களிப்பை பெற்றுத்தரும்படியும் இது நாம் விடும் மூச்சுக்கு இயற்கைக்கு வழங்கும் நன்றிக்கடனாக அமையும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீயான்ஜனீ லொக்குலியன

ஜனாதிபதி சுற்றாடல் விருது
2024

அறிமுகம்

பேண்தகு சுற்றாடல் செயற்பாடுகளை கட்டியெழுப்புவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்குடன் சுற்றுச்சூழலை பேணுதல் மற்றும் பாதுகாப்பிற்காக இலங்கையில் செயற்படும் பிரதானமான ஒழுங்படுத்தல் நிறுவனம் ஒன்றாக உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சுற்றாடல் அமைச்சின் ஆலோசனையின் கீழ் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்படுகின்ற மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி ஒன்றாக “ஜனாதிபதி சுற்றாடல் விருது” நிகழ்ச்சியை அடையாளப்படுத்த முடியும்.

நோக்கம்

- சுற்றாடல் பாதுகாப்புக்கு பாரிய பங்களிப்புச் செய்த கைத்தொழில், வர்த்தகம், நிறுவனம் மற்றும் தனிப்பட்டவர்களை பாராட்டி அரச கௌரவத்தை வழங்கல்.
- சுற்றுச்சூழலுக்கு பொருந்தும் கைத்தொழில், வர்த்தக மற்றும் தொழில் கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்பல்.
- சுற்றுச்சூழலுக்கு பொருந்துகின்ற செயற்படுகளுக்காக சமூகத்தை ஊக்குவித்தல்.
- பேண்தகு அபிவிருத்திக்கு பொதுமக்கள் பங்கேற்பை கட்டியழுப்பல்.

சுற்றாடல் பாதுகாப்பை பேணுவது உங்களது நிறுவனம்/ நீங்கள் செய்த பங்களிப்புக்காக தேசிய விருதை வெல்வதற்கு இன்றே விண்ணப்பியுங்கள்.

விருது விழாவுக்காக விண்ணப்பிக்க வேண்டிய துறைகள்

A. கைத்தொழில், வர்த்தகம் மற்றும் திட்டங்கள் பிரிவு (1-16)
B. நிறுவனங்கள், வெகுசன ஊடகம் மற்றும் சமூக பிரிவு (1-08)

விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

பிரவேசிக்கவும்
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணையதளத்திற்கு - www.cea.lk

அழையுங்கள்
உதவிப் பணிப்பாளர், கலாநிதி லக்ஷ்மினி ராதிகா அவர்கள் - 0706725222
சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி, அர்ஷா குமாரி அவர்கள் - 0713486339
அலுவலகம் - 0112873447, 0112872278 அவசர அழைப்பு - 0112888999

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி
2024 மார்ச் 15

மத்திய சுற்றாடல் அதிகாரசபை,
பரிசர பியச, 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

சுற்றாடல் அமைச்சு

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 04

## குறள் தரும் சிந்தனை



சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

வானமே பொய்த்து விடும்போது, அதன்பின்னர் அந்த வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறவர்களுக்கு விழாக்கள் ஏது? வழிபாடுதான் ஏது?

# பொருளாதார நெருக்கடியின் மீட்சியே இலவச சீருடை வழங்க உதவியுள்ளது

இலங்கை 2022 இல் முகம்கொடுத்த கடுமையான பொருளாதார நெருக்கடியினால் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக கல்வித் துறையில் ஏற்பட்ட சரிவினால் பாடசாலை பாடப்புத்தகங்கள், சீருடைகள் உள்ளிட்டவற்றைக் கூட வழங்க முடியாத நிலைமைக்கு உள்ளாக நேர்ந்திருந்தது.

இதேபோன்ற நிலைமை நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டிருந்தது. அதனால் நாட்டின் அனைத்து மக்களும் பாதிப்புகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகினர். எரிபொருள், எரிவாயு உள்ளிட்டவற்றுக்கு நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை தோற்றம் பெற்றிருந்தது.

நாட்டின் அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியும் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் அதிகரித்துக் காணப்பட்ட சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வரவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாத சூழலில் பதவியில் இருந்த அரசாங்கமும் தானாகவே முன்வந்து பதவி விலகியது.

அதனால் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருந்தனர். அந்தச் சூழலில் நாட்டைப் பொறுப்பெடுக்கவோ பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவோ தலைமை வழங்க எவருமே முன்வராத இக்கட்டான நிலைக்கு நாடு உள்ளானது.

அந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையைத் துணிந்து பொறுப்பெடுத்ததோடு, பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். நாட்டையும் மக்களையும்

பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டதாக அந்தத் திட்டங்கள் அமைந்திருந்ததோடு, அனைத்தும் நடைமுறைச் சாத்தியமானவையாகவும் யதார்த்தபூர்வமானவையாகவும் விளங்கின.

இந்நாட்டின் பாராளுமன்ற அரசியலில் நீண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி, அந்த அனுபவங்கள் மற்றும் பரந்த அறிவின் அடிப்படையில் ஆரம்பித்த இவ்வேலைத்திட்டங்கள் காரணமாக பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின. அதன் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களையும் சலுகைகளையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய சூழல் உருவானது. இப்பின்னணியில் இப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தோற்றும் பெற்றன.

அதேநேரம் இப்பொருளாதார வேலைத்திட்டங்களின் பயனாக பொருளாதார நெருக்கடி காலத்தில் மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் நீங்கலாயின. இன்று நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற்று வருகின்றது. ஆனாலும் அப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் முழுமையாக நீங்கிவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் காணப்படுகின்ற அதேநேரம், மீண்டுமொரு தடவை 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதி போன்றதொரு நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் உறுதியாக உள்ளனர்.

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய இப்பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனாக பாடசாலைச் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்களை உரிய நேரத்தில் அரசினால் வழங்க முடிந்துள்ளது. இதன் நிமித்தம் பில்லியன்கணக்கான ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பாடசாலை சீருடையில் 80 சதவீதம் சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாகும். எஞ்சிய 20 சதவீதம் இலங்கை அரசாங்கத்தின் ஒதுக்கீடாகும். இந்திய கடன் உதவியில் கிடைக்கப்பெற்ற கடதாசியை கொண்டு பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அதன் பயனாக உரிய தினத்தில் பாடப் புத்தங்களையும் மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

மேலும் நவீன உலகிற்கும் சர்வதேச தொழிற்சந்தைக்கும் ஏற்ப கல்வி முறைமையைச் சீரமைக்க வேண்டும். அதற்கான தேவையும் அவசியமும் பரவலாக உணரப்பட்டுள்ளது. அதன் ஊடாக பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுபவர்கள் தொழிலைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படாது.

இவ்வாறான சூழலில் கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, 'உலகிற்கு பொருத்தமான தொழில் படையினை உருவாக்குவதற்கும் நாட்டில் பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கும் கல்வி முறையை உலகிற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைப்பது அவசியம். அதன் ஊடாகவே சர்வதேச சந்தையுடன் போட்டியிடக்கூடிய வாய்ப்பு எமக்கு கிடைக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நவீன யுகத்திற்கு ஏற்ப கல்வி முறைமையில் மறுசீரமைப்பை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார முன்னற்றத்தையும் அடைந்து கொள்ளலாம். அதுவே பொருளாதார நிபுணர்களின கருத்தும் ஆகும்.

ஆகவே நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் பொறுப்பு அதுவே யாகும்.

editor.tkn@lakehouse.lk

# இனிய நந்தவனம் சந்திரசேகரனுக்கும் எழுத்தாளர் நித்தியானந்தனுக்கும் விருதுகள்

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நூலுக்கும், நூலை வெளியிட்ட பதிப்பகத்திற்கும் பரிசும், சான்றிதழும், பொற்கிழியும் வழங்கி கௌரவித்து வருகின்றது.

2020_2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த கட்டுரை நூல் வரிசையில் இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'நுண்ணுயிர் எதிரி' என்ற நூலை எழுதிய கிறிஸ்தவ போதகரும், மனநல ஆலோசகருமான



கு.நிந்தியானந்தன் அவர்களுக்கு சிறந்த நூலுக்கான பரிசுச்சான்றிதழும், ரூ 30,000 பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று பதிப்பாசிரியர் நந்தவனம்

## தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை வழங்கியுள்ள கௌரவம்

சந்திரசேகரனுக்கு ரூ 10,000 பரிசுத் தொகையும் சிறந்த பதிப்பகத்திற்கான சான்றிதழும் வழங்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு கடந்த செவ்வாயன்று தமிழகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா.செல்வராஜ் முன்னிலையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பரிசினை வழங்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந. அருள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறையினால், 2021 இன் சிறந்த ஆய்வுக்கட்டுரை நூலாக 'நுண்ணுயிர் எதிரி கொரோனா_ ஓர் சமூக உளவியல் கண்ணோட்டம்' நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை, கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழக செய்தித்துறை அமைச்சர் வெள்ளக்கோவில் சுவாமிநாதன் பரிசை வழங்கினார். நூலின் பதிப்பாளர் இனிய நந்தவனம் சந்திரசேகரன் அவர்களுக்கும் அந்நிகழ்வில் பரிசு வழங்கப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த உலகறிந்த பிரபல இலக்கியவாதியும், தமிழ்நாட்டில் வசித்து வருபவருமான நந்தவனம் சந்திரசேகரன் மற்றும் சென்னையில் வசித்து வருபவரான கிறிஸ்தவ போதகரும், எழுத்தாளருமான குழந்தைவேலு நித்தியானந்தன் ஆகி



யோருக்கு தமிழ்நாட்டு அரசினால் வழங்கப்பட்டுள்ள இந்த கௌரவம் குறித்து இலக்கியவாதிகள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

திரு. சந்திரசேகரன் தமிழ்நாடு திருச்சியில் 'இனிய நந்தவனம்' என்ற சஞ்சிகையை நடத்தி வருகின்றார். அச்சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் அவராவார். அத்துடன் பதிப்பகம் ஒன்றையும் நடத்தி வருகின்ற சந்திரசேகரன், பல்வேறு நூல்களையும் வெளியிட்டு வருகின்றார். தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற நாடுகள் எங்கும் இலக்கிய அன்பர்களுடன் நெருக்கமாக தொடர்புகளை அவர் பேணி வருகின்றார்.

அதேசமயம் போதகர் கு. நித்தியானந்தன் எழுத்தாளர் மாத்திரமன்றி, தமிழ்நாட்டின் பிரபல மனநல ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார். அவர் இதுவரை பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

# இராணுவத்தினரின் நலனை மேம்படுத்த புதிய திட்டங்கள்

இராணுவத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் படைவீரர்களின் நலனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை உள்ளடக்கிய பல நிகழ்ச்சிகள் கடந்த 14 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றன.

அதன்போது இராணுவ உறுப்பினர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நலன்புரி அறக்கட்டளையில் உறுப்புரிமையைப் பெற்றுள்ள





ஓய்வுபெற்ற அதிகாரிகள், சிப்பாய்களின் திட்டமிடப்பட்ட தீவிர அறுவைச் சிகிச்சைகள் மற்றும் தீவீரமற்ற அறுவைச் சிகிச்சைகள் தொடர்பில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக 'கேஸ்லெஸ் மெடி கிளைம்' எனும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்துடன் தொடர்புடைய சுவாசஹன காப்புறுதி நிதியத்தின் கீழ் வைத்தியசாலைக் கட்டணங்களை நேரடியாகச் செலுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுதல் மற்றும் பரிமாற்றம் இராணுவ தளபதி மற்றும் வைத்தியசாலை பிரதிநிதிகளின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்படி, இத்திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 33 தனியார் வைத்தியசாலை வலையமைப்புகளின் ஊடாக இராணுவ உறுப்பினர்கள் மற்றும் நலன்புரி நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஓய்வுபெற்ற போர்வீரர்களும் இந்த வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் ஆசிரி வைத்தியசாலை ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தேவைப்படும் வீரர்களின் குழந்தைகளுக்காக மாதாந்தம் இரண்டு இருதய அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தது,

மேலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்து விளங்கிய படையினரின் 635 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டதுடன், போர்வீரர்களின் மகன்மார் மற்றும் மகள்மாரின் கல்வியை இலகுபடுத்தும் வகையில் பெறுமதியான 'கற்றல் நண்பன்'(Study Budy) எனும் 300 இணைய விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டன.

# நடுவர்களின் பாரபட்சம் காரணமாக தவறிப் போகும் மாணவர் திறமை

மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில், அவர்களின் கலையாற்றலை வெளிப்படுத்துவதில் போட்டிகள் முக்கியமானவை. போட்டிகளில் பங்கு கொள்ளும் எல்லோருமே வெற்றி பெற வேண்டுமென்ற முனைப்புடனேயே பங்கேற்கின்றனர். அதனால் நடுவர்களின் முடிவினை ஏற்றுக் கொண்டு திருப்திப்படுகின்றவர்கள் குறைவு என்றே சொல்லலாம்.

போட்டியொன்றினை நடத்தி முடிப்பதிலும் பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்வதிலும் நடுவர் பணி ஈடு இணையற்றது. அப்பணிக்காகக் கொடுக்கப்படும் சிறியதொரு கொடுப்பனவையும் கவனத்தில் கொள்ளாமல் தமது நேர மற்றும் பண விரயங்களை மேற்கொண்டு நடுவர் பணிக்காக பங்கேற்கும் இத்தகையோரின் பணிக்கு நிகரில்லையென்றே குறிப்பிடலாம்.

நூறு வீதமான நேர்மையுடன் நடுவர் பணி செய்வது கடினம்.

உறவுமுறை,பாடசாலை, பிரதேசம், இனம் முதலிய பல காரணங்களால் திறமையற்றவர்களை முன்தள்ளி விடும் நேர்மையற்ற நடுவர் பணியினால் பாடசாலையோ, வலயமோ, மாகாணமோ தமது இலக்கை எட்ட முடியாமல் போகின்றது.

நடுவர் என்பது 'பணி' என்றே அழைக்கப்படுகின்றது. பணி என்பது பிரதிபலனற்ற நேர்மையான கைங்கரியத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஒரு போட்டிக்காக நடுவர் பணிக்கு அழைக்கப்படுகின்றவர்கள் துறைசார்ந்தவர்களாகவே உள்ளனர். அவர்களில் பலர் ஆசிரியர்களாகவும் எழுத்தாளர்களாகவுமே அமைகின்றனர். சமூகத்தை வழிநடத்தும் பொறுப்புமிக்க இவர்களில் ஒருசாரார் மேற்கொள்ளும் செயற்பாடுகளால் நேர்மையான போட்டிகளை நடத்த முடியாமல் போய் விடுகிறது.

பிழையான தெரிவுகளால் முன்னேறிச் செல்ல வேண்டிவர்கள் இலக்கிழந்து விடுவதுடன் திறமையற்றவர்கள் அடுத்



தடுத்த கட்டங்களை தாண்ட முடியாமல் தோல்விகளைச் சந்தித்துத் திரும்புகின்றனர்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதன் நோக்கம் அத்தீர்ப்பில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை என்பதே. ஆனால் இவ்வசனத்தை சாதகமாக்கிச் செயற்படுகின்ற நடுவர் தீர்ப்புக்களால் மாணவர் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். எதிர்பார்ப்புமிக்க மாணவர்கள் தங்களுக்கான நிலை இழக்கப்படும் போது மனம் உடைந்து விடுகின்றனர். இதனால் எத்தனையோ திறமையான மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதில் இருந்து தவிர்ந்து விடுகின்றனர்.

"வேதாளம் சேருமே, வெள்ளருக்கே பூக்குமே, பாதாள மூலி படருமே, மூதேவி சென்றிருந்து வாழ்வாளே சேடன் குடி புகுமே மன்றோரஞ் சொன்னார் மனை" என்ற ஔவையாரின் பாடல் வரிகள் பக்கச்சார்பான நடுவம் பற்றியதான எச்சரிக்கையாகவே இருந்து வருகின்றது.

நடுவர் பணி மகத்தானது. புனிதமானது. அப்பணியின் தத்ரூபத்தை விளங்கி அதனை நிறைவேற்றுவதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மனம் திருப்தியடைக்கூடிய அறுவடை

ஜெஸ்மி எம்.மூஸா
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# சம்புநகர் அல்- மினா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா

அட்டாளைச்சேனை சம்புநகர் அக்/ அல் மினா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் மாணவர் மன்றக் கூட்டமும் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் மாஸ்டர் கவுன்சிலர் எம்.ஏ.தாஹிர், இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஏ.பீ.கமால்தீன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், பாடசாலையின் மேம்பாட்டு உத்தியோகத்தரும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான மௌலவி என்.ரீ.நஸீர் கௌரவ அதிதியாகவும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் ஏ.எல்.எம்.அர்சாத், பாடசாலையின் கட்டாயக் கல்வி குழுவின் உறுப்பினர்களான எம்.ஏ.அசாட் அபூபக்கர், ஏ.எச்.நியாஸ் அதிதிகளாகவும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கிண்





ணங்கள் வழங்கினர். இந்நிகழ்வில் உதவி அதிபர் எம்.ஐ.ஹாசீம், வலயத் தலைவர் எம்.எச்.அப்துல் ஹை, ஆசிரியர்களான ஏ.பீ.தாஹிர், என்.ரீ.அஹ்சான்,ஏ.சீ.எம். பாயிஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜீ.ஹம்சார் உட்பட பிரமுகர்கள், எஸ்.டி.ஈ.சீ. உறுப்பினர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ.எம்.அறூஸ் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# ஷஃபான் ரமழானுக்கான பாலம்



ரமழான் மாதம் என்பது ஓர் அறுவடைக் காலமாகும். விவசாயி தனது விளைச்சலை அறுவடை செய்யும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது போன்று நன்மைகளை அறுவடை செய்வதற்காக அன்று ஸஹாபாக்கள் ரமழானுக்காக காத்திருப்பார்கள்.

ரமழானில் செய்யப்படும் முக்கியமான அறுவடை தக்வாவை அடைந்து கொள்வதாகும்.

ரமழானில் நோன்பை விதியாக்கும் பொழுதே, இதன் மூலம் நீங்கள் தக்வா உள்ளவர்களாகலாம் என அல்லாஹுத்தஆலா குறிப்பிடுகின்றான். ரமழான் என்பது மனிதர்களுக்கு வழிகாட்டியாக அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதமாகும். அது தக்வா உள்ளவர்களுக்கே நேர்வழியைக் காட்டும் (2:2) என அல்குர்ஆனே குறிப்பிடுகிறது. ஆகவே அல்குர்ஆனின் மூலம் நேர்வழி பெற வேண்டுமென்றால் முதலில் தன்னை தக்வா உள்ளவனாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

தக்வா உள்ளவனாக மாறுவது எப்படி என்பதையும் அல்குர்ஆனே குறிப்பிட்டிருக்கிறது. உங்களுக்கு முன்பிருந்தவர்கள் போலவே உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்படுகிறது. அதன் மூலம் நீங்கள் தக்வா உள்ளவர்களாகலாம் என்று அல்குர்ஆன் ரமழான் நோன்பை தக்வாவை அடைந்து கொள்வதற்கான வழியாகக் காட்டித் தருகிறது. பின்னர் 'அல் ஆகிபது லில் முத்தகீன்' என இறுதி வெற்றி தக்வா உள்ளவர்களுக்கே எனவும் கூறுகிறது.

இந்த வகையில் மனிதனுக்கு நேர்வழி காட்டுவதற்காக அல்குர்ஆன் அருளப்பட்டது என்பதையும் அல்குர்ஆன் தக்வா உள்ளவர்களுக்கு நேர்வழி காட்டும் என்பதையும் தக்வா உள்ளவர்களுக்கு இறுதி வெற்றி கிடைக்கும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒவ்வொரு நாளும் கடமையான ஐந்து நேரத் தொழுகையிலும் கடமையான ஸூரதுல் பாத்திஹாவை ஓதி 17 தடவைகள் 'எங்களுக்கு நேர்வழி காட்டுவாயாக' என்று அல்லாஹுத்தஆலாவிடம் கேட்கின்றோம். அந்த நேர்வழி கிடைப்பதற்கு நிபந்தனையாகவுள்ள தக்வா உள்ளவர்களாக மாறுவதற்கான ரமழானை அடைந்து கொள்கிறோம் என்பதுவே நமக்குப் பெரும் பேறாக அமைகிறது. இதன் மூலம் ஸஹாபாக்களின் எதிர்பார்ப்பின் பின்னாலுள்ள நியாயத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ரமழானுக்கு முந்திய மாதமான ஷஃபான் இதனாலேயே சிறப்புப் பெறுகிறது. ஷஃபான் என்பது எம்மை நேர்வழியில் செலுத்துவாயாக என்று ஒவ்வொரு நாளும் கேட்ட துஆவை அடைந்து கொள்வதற்குத் தயாராகும் காலமாகும். ஒரு மனிதனுக்கு உலகில் கிடைக்கக் கூடிய ஆகக் கூடிய பெரும் பேறு அவனுக்கு நேர்வழி கிடைப்பதாகும். இந்த உச்சபட்ச அடைவை அடைந்து கொள்வதற்கு அவன் தன்னை எப்படியெல்லாம் தயார்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது? அதற்கான களம் தான் ஷஃபான்.

நபி (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதத்தில் போல வேறெந்த மாதங்களிலும் அதிகமாக நோன்பிருந்ததில்லை என ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்கள். நபியவர்கள் ரமழானுக்கு முன்பே நோன்பிருந்து அதற்காக தன்னைத் தயார்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. ரஜபுக்கும் ரமழானுக்கும் இடையில் மக்கள் மறந்து போகும் மாதமாக ஷஃபான் இருக்கிறது என நபியவர்கள் கூறினார்கள்.

இந்த வகையில் ரமழானை அடைந்து கொள்வதற்கென ஷஃபானில் தம்மைத் தயார்படுத்திக் கொள்வது முக்கியமாகிறது. ஷஃபானில் அதிக நோன்பு நோற்று தம்மை நோன்புக்காகப் பழக்கப்படுத்திக் கொள்வது நபிவழியாகும். குறைந்த பட்சம் ஷஃபானில் குறிக்கப்பட்ட தினங்களிலாவது நோன்பு நோற்பது ரமழானை அடைந்து கொள்வதற்கு உதவியாக அமையும். ஷஃபானின் முதல் அரைப்பகுதி மக்களுக்கு மறக்கடிக்கப்பட்டாலும் அடுத்த அரைப்பகுதியில் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்கு மக்கள் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஷஃபானின் 15 ஆம் நாள் பள்ளிவாசலில் ஒன்று கூடி அல்குர்ஆனின் சில பகுதிகளை ஓதி அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு தம்மை தயார்படுத்திக் கொள்கிறார்கள். அன்றுடன் தங்களது தொழுகைகளைச் சீர்படுத்தி பள்ளிவாசலுடனான தமது தொடர்புகளையும் அதிகரித்துக் கொள்கிறார்கள்.

அதேபோன்று ரமழானில் நோன்பு நோற்று தக்வா உள்ளவர்களாக மாறி அல்குர்ஆனின் மூலம் நேர்வழி பெற்றவர்களாக விரும்புவர்கள் தம்மை ரமழானிலே முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்காக தங்களது வேலைகளையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். அதற்காக குடும்பத்துடன் அமர்ந்து திட்டமிடும் காலமாகவும் ஷஃபான் அமைய முடியும்.

சுவர்க்கத்துக் கன்னிகளாகும் பெண்களின் நேரம் ரமழானில் பெரும்பாலும் உணவு சமைப்பதிலேயே கழிகிறது. குறிப்பாக துஆக்கள் அங்கீகரிக்கப்படும் இப்தாருடைய நேரமும் ஸஹருடைய நேரமும் அவர்களுக்கு சமையல் வேலைகளிலேயே கழிந்து விடுகின்றன. இதற்கு குடும்பத்தில் உள்ளவர்கள் எப்படி ஒத்துழைக்கலாம் என்பதையும் இந்த ஷஃபானிலேயே திட்டமிட்டுக் கொள்ளலாம்.

ரமழான் என்பது நன்மைகளைக் கொள்ளையடிக்கும் மாதமாகும். இம்மாதத்தில் செய்கின்ற ஒவ்வொரு உபரியான நற்செயல்களுக்கும் ஒரு பர்ளுடைய நன்மை கிடைக்கிறது. அதிகமாகக் குர்ஆனை ஓதுவதனூடாக, அதனை மனனமிடுவதனூடாக எமது நன்மைகளை அதிகரித்துக் கொள்ளலாம். எத்தனை முறை அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பது, எத்தனை ஸூராக்களை மனனமிடுவது போன்றவற்றை இப்பொழுதே திட்டமிட்டு அதற்கிசைந்தவாறு தனது நேரசூசியையும் தனது இருப்பிடத்தையும் அமைத்துக் கொள்ளலாம். குடும்ப அங்கத்தவர்களிடையே போட்டியாகவும் இதனை அமைத்துக்கொள்ளலாம்.

பயணங்கள் செல்வதில் அமல்கள் செய்வதற்கான நேரம் வீணடிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் முக்கியமல்லாத பயணங்களை தவிர்க்க முயற்சிக்க வேண்டும். தூர இடங்களில் உள்ள உறவினரைத் தரிசித்தல் போன்ற பிரயாணங்களை ஷஃபானிலேயே முடித்துக் கொள்ளலாம். பெருநாள் உடுப்பு வாங்குவதற்கான நேரம் ரமழானுடைய காலத்தில் இருந்து கழிவதில் இருந்தும் காத்துக் கொள்ளவும் முடியும்.

ரமழான் ஸதகாவுடைய மாதம். நபியவர்கள் காற்றை விட வேகமாக இம்மாதத்தில் ஸதகா கொடுப்பதில் முந்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் ரமழானில் ஸதகா செய்வதற்காக தன்னைத் தயார்படுத்திக் கொள்ளலாம். அதேபோல ரமழானின் ஒரு மாத காலத்தையும் அடைந்து கொள்வதற்கு தேகாரோக்கியம் மிகவும் முக்கியமானது. அதனால் உடல் ரீதியாகவும் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

ரமழான் நேர்வழியில் மனிதனைச் செலுத்தும் மாதம். எனவே அதனை அடைந்து கொள்வதற்காக அல்லாஹ்விடம் அதிகமதிகம் துஆ செய்ய வேண்டும். ஒருவரது பாவங்கள் அவரை நன்மையின் பால் ஈடுபடுவதில் இருந்தும் தடுத்து விடலாம். அதனால் ஷஃபானில் அதிகமதிகம் தௌபா செய்து பாவங்களில் இருந்து மீண்டு விட வேண்டும்.

ரமழான் துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மாதம். அல்லாஹுத்தஆலா இம்மாதத்திலே மனிதர்களின் பாவங்களை மன்னிக்கிறான். குறிப்பாக லைலத்துல் கத்ரிலே பாவங்களால் நரகத்துக்கென எழுதப்பட்டவர்களைக் கூட மன்னித்து விடுகிறான். ஆனால் உறவுகளைத் துண்டித்துக் கொண்டவர்களைத் தவிர. அவர்கள் தௌபாக் கேட்டாலும் அது அவர்களுடைய தலைக்கு மேல் உயர மாட்டாது,

எனவே தூரமாகிப் போயுள்ள உறவுகளிடம், குறிப்பாக இரத்த உறவுகளிடம் சென்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு ரமழானில் தனது நற்செயல்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவும் ஷஃபானைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தான் முஸ்லிமாகி விட்டோம் என்பது மட்டுமே ஒருவர் நேர்வழி பெற்றுவிட்டார் என்பதற்கான அடையாளமாகிவிடாது. அதனால் தான் ஒவ்வொரு நாளும் 17 தடவைகள் நேர்வழியைக் கேட்டு துஆ செய்வது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத் தான் ஒவ்வொரு வருடமும் ரமழான் வந்து நம்மை தக்வா உள்ளவர்களாக மாற்றுகிறது. யா அல்லாஹ், எங்களுக்கு நேர்வழி கிடைத்த பின் அதிலிருந்து எம்மைச் சறுக்கச் செய்து விடாதே என்று துஆ செய்யுமாறு அல்லாஹுத்தஆலாவே அல்குர்ஆனில் வழிகாட்டியிருக்கையில், அந்த நேர்வழியைப் பெறுவதற்கான தக்வா உடையவர்களாக எம்மை மாற்றிக்கொள்ள ரமழானைப் பயன்படுத்துவதற்கு ஷஃபானை பாலமாக அமைத்துக் கொள்வோம்.

**பியாஸ் முஹம்மத்...**

**ஆலமுல் இஸ்லாம்**

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# தீர்ப்பு நாளின் அதிபதி



இஸ்லாத்தின் முக்கிய அடிப்படைகளில் ஒன்றாக மறுமை நாள், மறு உலக வாழ்வு உள்ளது. தற்போது நாம் வாழும் இந்த உலக வாழ்க்கை நிரந்தரம் அற்றது. இந்த உலக வாழ்வில் நாம் செய்யும் நற்செயல்கள், நன்மை தீமைகளுக்கு ஏற்ப நமது மறுமை வாழ்வு அமையும். இதனை அல் குர்ஆனும், நபிமொழிகளும் விளக்குகின்றன. இந்த உலக வாழ்வில் அவன் சம்பாதித்த செல்வம், அவன் சுற்றம், மனைவிமக்கள் என எதுவும் மறுமைநாளில் பயன்படாது. அவன் செய்த நற்செயல்கள் மட்டுமே அவனுக்கு அப்போது துணை நிற்கும் என்று அல் குர்ஆன் குறிப்பிடுகிறது.

இதுகுறித்து அல் குர்ஆன், "அல்லாஹ்வே நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதியும் ஆவான்". (1:4) என்றுள்ளது.

"ஒவ்வோர் ஆத்மாவும், தான் செய்த நன்மைகளும், இன்னும், தான் செய்த தீமைகளும் அந்த(த் தீர்ப்பு) நாளில் தன் முன் கொண்டு வரப்பட்டதும், அது தான் செய்த தீமைக்கும் தனக்கும் இடையே வெகுதூரம் இருக்க வேண்டுமே என்று விரும்பும். அல்லாஹ் தன்னைப்பற்றி நினைவு கூருமாறு உங்களை எச்சரிக்கின்றான். இன்னும் அல்லாஹ் தன் அடியார்கள் மீது கருணை உடையோனாக இருக்கின்றான்". (3:30).

"புண்ணியம் என்பது உங்கள் முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை. புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல், தன் பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக, பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகள், கடனாளிகள் போன்றோரின் மீட்புக்காகவும் செலவு செய்தல், இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஸக்காத் கொடுத்து வருதல், இவையே புண்ணியமாகும். இன்னும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும், வறுமை, இழப்பு போன்ற துன்பத்திலும், நோய் நொடிகள் போன்றவற்றின் கஷ்டத்திலும், யுத்த சமயத்திலும் உறுதியுடனும், பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள், இன்னும் அவர்கள் தாம் பயபக்தியுடையவர்கள்". (2:177).

"யார் என்னுடைய (அல்லாஹ்வின்) உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும். (20:124).

அல்லாஹ் அளிக்கும் தீர்ப்பில் இருந்து யாரும் தப்பிக்கவே முடியாது. எனவே தான் மறு உலகம் இருக்கிறது என்பதிலும், அந்த மறுமை நாளில் நமது செயல்கள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்படும் என்பதிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இந்த நம்பிக்கை வந்தால் உலக வாழ்வில் எந்த தவறு செய்ய மனிதன் விரும்ப மாட்டான். இறைவன் வகுத்த வழியில் தனது வாழ்வை நடத்த முயற்சி செய்வான்.

மறு உலக வாழ்வு பற்றிய நம்பிக்கை தான் இஸ்லாத்தின் ஆணிவேராகவும், அஸ்திவாரமாகவும் அமைந்துள்ளது. அந்த நம்பிக்கை எவ்வளவு ஆழமாக மனித உள்ளத்தில் பதிந்திருக்கின்றதோ, அதற்கேற்ப ஒருவனது செயல்களில் மாற்றங்கள் நிகழும். இதனால் தான், தன் அல் குர்ஆன் நெடுகிலும் அந்த நாளைக் குறிப்பிடுகின்றான் அல்லாஹ். அதைப் பற்றி திருக்குர்ஆனில், "நம்பிக்கை கொண்டோரே! பேரங்களும், நட்புறவுகளும், பரிந்துரைகளும் இல்லாத அந்த இறுதித்தீர்ப்பு நாள் வருவதற்கு முன்னர், நாம் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து நல்வழிகளில் செலவு செய்யுங்கள்". (2:254)

"ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆக வேண்டும். அன்றியும் இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்கள் செய்கைகளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல அற்ப இன்பப்பொருளேயன்றி வேறில்லை". (3:185)

உலக வாழ்வு ஏற்றத்தாழ்வு நிறைந்தது. கடினமாகவும், உண்மையாகவும் உழைப்பவன் குறைந்த ஊதியம் பெற்று கஷ்டப்படுவான். அடாவடித்தனம் செய்து வாழ்பவன் போற்றப்படுபவனாக இருப்பான். நல்ல நடத்தை உள்ளவன் தூற்றப்படுபவனாக, கெட்ட செயல்கள் செய்பவன் உயர்ந்தவனாக கருதப்படுவான்.

தகுதியுள்ளவன் தரக்குறைவாகவும், தகுதியற்றவன் உயர்ந்தவனாகவும் வாழ்வான். கல்வி அறிவு இல்லாதவன் கண்ணியப்படுத்தப்படுபவன் ஆகவும், கல்வி அறிவில் சிறந்தவன் ஒதுக்கப்படுபவன் ஆகவும் இருப்பான். சுருக்கமாக சொல்வது என்றால் 'நல்லதுக்கு காலம் இல்லை' என்று நினைக்கும் அளவுக்கு உலக வாழ்க்கை காணப்படும்.

இதற்கெல்லாம் நீதி கிடைக்க வேண்டும் என்றால் மறு உலகம் இருக்க வேண்டும். அதை ஒரு அதிபதி ஆட்சி செய்ய வேண்டும். அவன் நேர்மையானவனாக இருக்க வேண்டும். எது நீதியோ அதை நிலைநாட்டுபவனாக இருக்க வேண்டும்.

அத்தகைய நீதிபதியாகத்தான் அல்லாஹ் இருக்கின்றான். தீர்ப்பு நாளின் அதிபதியாக இருக்கும் அவன் தன் அடியார்களின் பாவங்களை மன்னிக்கக்கூடியவன். மனம் திருந்தி பாவ மன்னிப்பு கேட்டு, மீண்டும் பாவங்களை செய்யாமல் வாழ்ந்து, நற்செயல்களை அதிகம் செய்தால் தீர்ப்பு நாளில் இறைவனின் தண்டனையில் இருந்து நாம் தப்பிக்க முடியும். நரக நெருப்பில் இருந்து விடுதலை பெற இயலும்.

எனவே புனிதமான சொர்க்கத்திற்கு சொந்தக்காரர்களாக வாழக்கூடிய நல்ல பாக்கியத்தை நமக்கும், உலக மக்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் தந்தருளட்டும்.

**அபூ முஷீரா...**

# மனைவியை நேசிப்போம்!

எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ் அளப்பரிய சக்தி மிகுந்தவன். அவன் நினைத்தால் எந்த ஒரு உயிரினத்தையும் படைக்கும் வல்லமை உள்ளவன். அவன் 'ஆகுக' என்று சொன்னால் போதும், அவன் நினைத்த உயிரினம் படைக்கப்பட்டு விடும். அத்தனை வல்லமை மிக்க அல்லாஹ் படைத்தவற்றில் மிகவும் சிறப்பு மிக்க படைப்பு தான் மனிதன்.

இது குறித்து அல் குர்ஆன், "மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் வெளிப்படுத்தி உலகில் பரவச்செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் தமக்குரிய உரிமைகளைக் கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் உங்கள் இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்". ( (4:1) என்று குறிப்பிட்டுள்ளது.



அதேநேரம் மனிதனுக்கு வாழ்க்கை துணையாக படைக்கப்பட்ட அவனது மனைவி குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான், "நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன". (30:21).

"உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவார்கள். எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளைநிலங்களுக்குச் செல்லுங்கள். உங்கள் ஆத்மாக்களுக்காக முன்கூட்டியே நற்கருமங்களின் பலனை அனுப்புங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மறுமையில் அவனை சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக! (2:223).

இறைவன் கூறிய இந்த வழியிலேயே நபி(ஸல்) அவர்களின் மண வாழ்க்கையும் அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்கள் பல திருமணங்களை செய்துள்ளார்கள். எந்த நிலையிலும் அவர்கள் தங்கள் மனைவிகளில் யாரையும் புறக்கணிக்கவில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்தினார்கள். அவர்களுக்குரிய மரியாதையை அளித்தார்கள்.

அஸ்வத் பின் யஸீத் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளதாவது, "தம் வீட்டாரிடம் இருக்கும்போது நபி (ஸல்) அவர்கள் என்ன செய்வார்கள்?" என்று நான் ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்டேன். அவர்கள், "தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளை நபி (ஸல்) அவர்கள் செய்து வந்தார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் தொழுகைக்காக எழுந்து சென்று விடுவார்கள்" என்று பதிலளித்தார்கள். (ஆதாரம்: புகாரி)

இதுதான் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. தன்னுடைய மனைவியருடன் அன்போடும், அவர்களுடைய வேலைகளில் தானும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். தன்னால் இயன்ற அளவிற்கு மனைவிக்கு உதவி புரிபவர்களாக இருந்தார்கள். மனைவிக்கு எந்த சிரமத்தையும் கொடுக்க மாட்டார்கள். மனைவியோடு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். எந்த நிலையிலும் எந்த விதத் தவறான பேச்சையும் பேசமாட்டார்கள்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் மனைவியரிடம் தான் ஒரு நபி என்ற மமதையோடு நடந்து கொள்ளமாட்டார்கள். நான் உங்களில் ஒரு மனிதர் என்ற எண்ணத்தில் தான் நடந்து கொள்வார்கள். தன்னுடைய மனைவிமாரோடு விளையாட்டாக சில நேரங்களில் நடந்து கொள்வார்கள். மனைவிமார்களை சிரிக்க வைப்பார்கள். அன்போடும் பாசத்தோடும் நடந்து கொள்வார்கள். மனைவிமார்களை சந்தோசமாக வைத்துக் கொள்வார்கள். மனைவியின் ஆசையை நிறைவேற்றி வைப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் தன்னைச் சுற்றி இருப்பவர்களையும், அதிலும் குறிப்பாக மனைவிமார்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்கள். நபி (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கையில் மனைவியருடன் அன்பும் இரக்கமும் ஏராளமாக இருந்தது.

இது குறித்து ஆயிஷா (ரழி) அவர்கள், என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உன்னுடைய கோபத்தையும், உன்னுடைய திருப்தியையும் நான் நன்றாக அறிவேன்" என்று கூறினார்கள். அதற்கு நான், "அதை எவ்வாறு தாங்கள் அறிந்துகொள்வீர்கள்? அல்லாஹ்வின் தூதரே!" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "நீ திருப்தியுடன் இருக்கும்போது பேசினால், 'ஆம். முஹம்மதுடைய அதிபதி மீது சத்தியமாக' என்று கூறுவாய். நீ கோபமாய் இருக்கும் போது பேசினால், 'இல்லை. இப்ராஹீம் (அலை) அவர்களுடைய அதிபதி மீது சத்தியமாக' என்று கூறுவாய்" என்று சொன்னார்கள். நான், "ஆம் உண்மை தான். நான் தங்களது பெயரைத்தான் கோபித்துக் கொள்வேன் தங்கள் மீதன்று" என்று கூறினேன். (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய மனைவியான ஆயிஷா (ரழி) அவர்களின் ஒவ்வொரு அசைவையும் பேச்சையும் கூர்ந்து கவனித்து எப்படி புரிந்து வைத்துள்ளார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஆகவே திருக்குர்ஆன் கூறிய வழியிலும், நபிகள் வாழ்ந்து காட்டிய பாதையிலும் மனைவியையும், குடும்பத்தையும் நேசித்து வாழ்வோம்.

**மின்ஸார் இப்றாஹீம்...**



## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்

# ஆலய மாசி மஹோற்சவ விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆராய்வு



*(ஸாதிக் ஷிஹான்)*

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசி மஹோற்சவத்தை முன்னிட்டு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனுக்கும் தேவஸ்தான அறங்காவலர் சபையினருக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அங்கு விசேட பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சருக்கும் தேவஸ்தான அறங்காவலர் சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இம்முறை நடைபெறவுள்ள மஹோற்சவத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என ஏற்பாட்டுக் குழுவினரால் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே எவ்வித தடைகளும் இன்றி பக்தர்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக இராணுவம், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு...

புதிய கல்வி ஆண்டிற்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (19) ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், சனி (17) மற்றும் ஞாயிறு (18) தினங்கள் மூன்றாம் தவணைக்கான விடுமுறையில் இணைக்கப்பட்டுள்ளது.

## விவாகரத்து வழக்குகளின்...

நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களுக்கு இணங்க 48,391 விவாகரத்து வழக்குகள் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரை நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## மின்சார கட்டணத் திருத்தம்...

நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மின்சார சபையினால் முன்மொழியப்பட்டுள்ள மின்கட்டண திருத்தம் மற்றும் மின்சார சபையின் அண்மைக் கால நிதி நிலைமை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, நடைமுறையிலுள்ள மின்சார கட்டணத்தை 20 முதல் 25 வீதம் வரை குறைக்க முடியும் என பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஊழியர் சங்கம் தெரிவித்திருந்தது. அந்த வகையில் மக்களின் கருத்துக்களை கேட்டறியும் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

## சாந்தன் நாடு திரும்ப...

இதையடுத்து, சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகரகம் சாந்தனுக்கு இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்கு மட்டும் தற்காலிக கடவுச்சீட்டை வழங்கியுள்ளது.சாந்தனுக்கான பயண ஏற்பாடுகளை இலங்கைத் துணைத்தூதரகம் செய்துள்ளதாக சென்னை மேல் நீதிமன்றத்தில் தமிழக அரசு கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

## அமரர் விஜயகுமாரதுங்கவின்...

நூற்றுக்கு அதிகமானோரை நினைவுகூர்ந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பொன்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

## அஸ்வெசும: இரண்டாம் கட்டம் நிறைவில்...

கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர், அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நேற்று முதல் எதிர்வரும் மார்ச் (15) வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

தகைமையுள்ள அனைவருக்கும் அஸ்வெசும கொடுப்பனவு எந்தவித அழுத்தங்களுமின்றி வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அஸ்வெசும முதற்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத குடும்பங்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாதவர்களுக்கும் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்கவுள்ளன. முடிந்தவரை உண்மையான மற்றும் தெளிவான தகவல்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் நன்மைகளை வழங்கும் செயல்முறையை துரிதப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். விண்ணப்பத்தில் கண்டிப்பாக அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். தேசிய அடையாள அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக அடையாள அட்டைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம், ஆட்பதிவுத் திணைக்களத்தால் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அஸ்வெசுமவின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். www.wbb.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய முடியும். இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியாதவர்கள் மாதிரி விண்ணப்பங்களை பிரதேச செயலகங்கள் அல்லது சிவில் அமைப்புகளின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களை எக்காரணம் கொண்டும் பணம் செலுத்தி வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. முதற்கட்டமாக விண்ணப்பித்து அஸ்வெசும நன்மைகளைப் பெறத் தகுதி பெறாதவர்களும், மேன்முறையீட்டு விசாரணையில் பங்கேற்காதவர்களும் தங்களின் தகவல்களை மீள சான்றுப்படுத்த வாய்ப்பு வழங்கப்படும்.

## தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு...

விதித்துள்ளது. திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்று (15) இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் இடைக்கால தடையுத்தரவை திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளது.

இவ்வழக்கில், மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தன் ஆகியோர் ஆஜராகினர்.

கடந்த 21 மற்றும் 27ம் திகதிகளில் நடை பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டம் மற்றும்

செயற்குழுக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானதும், செல்லுபடியற்றது எனவும் நீதிமன்றத்தில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இதனால்,இக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானதும், செல்லுபடியற்றது எனவும் மன்றில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. தமிழரசு கட்சியின் யாப்பு விதி அனுமதிக்கும் தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் கூட்டங்களில் பங்குபற்றி, வாக்களித்ததால், இக்கூட்டம் சட்டமுரனானது எனவும் இதன் போது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. இவ்வாதங்களை கருத்திற்கொண்ட நீதிமன்றம் மாநாட்டை நடத்துவதற்கு இரு வாரங்களுக்கு இடைக்காலை தடை உத்தரவு விதித்துள்ளது.இவ்வழக்கு மீண்டும் இம்மாதம் (29) நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பஸ் வண்டிகளை திருத்தி...

இங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் இந்த விவகாரம் தொடர்பில் தினகரனுக்குத் தெரிவிக்கையில்,.

அம்பாறை டிப்போவுக்குச் சொந்தமான NB 5430 இலக்கம் கொண்ட பஸ் வண்டி பழுதடைந்த பஸ் வண்டிகளை மீள திருத்தும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்ததுடன் அந்த பஸ் வண்டியை உரிய தினத்தில் திருத்தமுடியாத காரணத்தால் அச்சமயம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த NB 5432 ஆம் இலக்க பஸ்ஸின் இலக்கத்தகட்டை அகற்றி போலியாக அதற்கு NB 5430 என்ற இலக்கத்தை பொருத்தி திருத்தப்பட்ட பஸ் போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டே இந்த முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

அதற்கிணங்க அந்த பஸ் வண்டி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோது கடந்த 13 ஆம் திகதி இரவு தனியார் துறையில் தொழில் புரியும் பெண்ணொருவரின் மூலம் தமக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பான தகவல் அறியக்கிடைத்ததாகவும் அந்த முறைகேடு தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு அந்த பெண் தம்மிடம் கேட்டுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க தாம் கடந்த 14 ஆம் திகதி இலங்கைப் போக்குவரத்து சபையின் பிரதான விசாரணைப் பிரிவு முகாமையாளருடன் தொடர்பு கொண்டு மேற்படி சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு அம்பாறை டிப்போவுக்கு அவரை அனுப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க நேற்றுமுன்தினம் மேற்படி பஸ் முறைகேடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நேற்று முன்தினமே தாம் அந்த டிப்போவின் பொறியியலாளரை பதவி விலக்கியதாகவும் அத்துடன் மனிதவள முகாமையாளரிடம் அதுதொடர்பில் தெரிவித்து அந்த விசாரணைகள் நேற்றும் இன்றும் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்..

மேற்படி சம்பவம் தொடர்பில் டிப்போவின் முகாமையாளர் பொறியியலாளர், கணக்காளர், களஞ்சியசாலை பொறுப்பாளர் மற்றும் குறித்த பஸ் வண்டியின் இலக்கத் தகட்டை மாற்றும் முறைகேட்டுடன் சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அந்த விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் அவர்களுக் கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்த அவர்,

எவ்வாறாயினும் இவ்வாறு திருத்த வேலைகளுக்காக 450,575 ரூபாவுக்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், உண்மையிலேயே அவ்வாறான உதிரிப்பாகங்கள் அந்த பஸ் வண்டிக்குப் பொருத்தப்பட்டதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதுடன் விசேட கண்காணிப்புக் குழுவொன்றை ஈடுபடுத்தி அந்த உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்த விலைப்பட்டியலுடன் அதனை ஒப்பிட்டுப் பார்க்குமாறும் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் வரை இலங்கைப் போக்குவரத்து சபை டிப்போக்களில் 852 பஸ்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அந்தவகையில் முதல் கட்டத்தின் ஊடாக சேவையிலிருந்து நீக்கபபட்டிருந்த 193 பஸ்வண்டிகள் திருத்தப்பட்டுள்ளன. அதற்காக 193 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்பிச்சென்ற குற்றவாளிகளுக்கு...

பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார். இந்த வகையில் விரைவில் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மேற்படி சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, நேற்று அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகரான குடு சலிந்துவின் உதவியாளரிடம், இலங்கையில் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் விற்பனை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேல், இலங்கையிடையே...

இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் மூலம் பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.பல இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்ய எதிர்பார்த்துள்ளனர்.இவர்களுக்கு இந்த விமான சேவை பயனுள்ளதாக அமையும்.

பலாலி விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இண்டிகோ (Indigo Airlines) விமான சேவை நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மத்தள விமான நிலையம் தொடர்பில் முதலீட்டு விருப்பங்கள் கோரப்பட்டன. இதன்பிரகாரம் ஒரு முதலீட்டாளரை டெண்டர் சபை தெரிவு செய்துள்ளது.

குறித்த முதலீட்டாளருடனான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளது. அடுத்த வாரம் உடன்பாடு எட்டப்படலாம். இதன் மூலம் அந்த விமான நிலையத்தையும் இலாபமீட்டும் வகையில் மாற்ற முடியும். இந்த ஒப்பந்தம் ரஷ்ய மற்றும் இந்திய தனியார் கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

## விஜய படுகொலைக்கு... (02ஆம் பக்கத் தொடர்)

இந்தச் செய்தி அன்றிரவு BBC வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இதுதவிர, விஜயவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள சுயாதீன மாணவர் சங்கம், “ஜே.வி.பி பயங்கரவாதிகள் தங்கள் பயங்கரவாதச் செயலில் இன்னொரு அடியை எடுத்து வைத்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவரைக் கொன்றுள்ளனர்" எனத் தெரிவித்தது.

## அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல்...

நீராதாரமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் ரம்பேவ மற்றும் மதவச்சி பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 75 கிராம சேவைப் பிரிவுகளின் 25,000 குடும்பங்கள் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யவுள்ளன.

இந்நிகழ்வில் உயைாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.வடமத்திய மாகாணத்தை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

அரசாங்கத்திற்காகவோ எதிர்கட்சிக்காகவோ இல்லாது மக்களின் சுபீட்சமான வாழ்விற்காக ஒன்றிணையுமாறு மீண்டும் சகலருக்கும் அழைப்பு விடுக்கிறேன். இந்தப் பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். நாட்டில் இன்னும் அதிகமான வீடுகளுக்கு நீர் வழங்கப்பட வேண்டியுள்ளது. மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க வேண்டும். இப்பிரதேசங்களில் இன்று ஏற்பட்டுள்ள அபிவிருத்தி மலையகத்தில் இல்லை.

அந்தப் பிரச்சினைகளுக்கு நாம் விரைவில் தீர்வு காண வேண்டும். இந்த இரண்டு பணிகளையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இப்போது முன்னெடுத்து வருகிறார்.

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதிகளில் உள்ள மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும். மறுபுறம், விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இத்திட்டத்தை செயல்படுத்தும் போது விவசாயத்திற்கு தேவையான நீருக்கு தட்டுப்பாடு ஏற்படுமா? என்ற சந்தேகம் சிலரிடையே எழுந்துள்ளது. அவ்வாறு நடக்காது. இது தொடர்பில் நாம் உரிய வகையில் கவனம் செலுத்தியுள்ளோம்.

## சிறுவர் துஷ்பிரயோகங்கள்;...

கடந்த வருடம் ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 9,434 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிறுவர்கள் சித்திரவதைக்குள்ளான 2242 முறைப்பாடுகளும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 472 முறைப்பாடுகளும் சிறுவர்களை பாலியல் உபாதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் 404 முறைப்பாடுகளும் பெண் பிள்ளைகளின் துஷ்பிரயோகம் தொடர்பில் 51 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. பொய்களை வெளியிடுவதற்கு சிறுவர்களை உபயோகப்படுத்தியுள்ள சம்பவம் தொடர்பில் ஆறு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பேச்சுவார்த்தைக்கு இணங்கியதால்...

தொழிற்சங்கத்தினர் நேற்று (15) போராட்டத்தை கைவிட்டனர்.சம்பள அதிகரிப்புக்கோரி கடந்த 02 தினங்களாக சுகாதாரத் துறையை சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தன.இதனால்,பாதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ள முப்படையையும் சேர்ந்த 1400 படை வீரர்கள் வைத்தியசாலைகளில் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

டாக்டர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே, இந்த 72 சுகாதார தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தன.

இந்நிலையில்,சுகாதாரத்துறை உள்ளிட்ட சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி அதி விசேட வர்த்தமானி வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

(16.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
கூட்டுத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களின் ஆலோசனைப்படி முதலீடுகளை அதிகமாக்க முற்படுவீர்கள்.

**ரிஷபம் :**
குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற முன்ஏற்பாடுகளை செய்வீர்கள். கடன் சுமை குறைய தொடங்கும்.

**மிதுனம்:**
குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெண்களின் ஊதியம் உயரும்.

**கடகம்:**
குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் தோன்றி மறையும். கலைஞர்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வர்.

**சிம்மம்:**
கலைஞர்கள் பழைய ஒப்பந்தங்களிலேயே வருவாய் ஈட்டுவர். பங்குச் சந்தை லாபம் தருவதாக அமையும்.

**கன்னி:**
குடும்பத்தில் சிறிய கடன் தொல்லை அகலும். குலதெய்வ வழிபாடு செய்ய திட்டமிடுவீர்கள்.

**துலாம்:**
குடும்பம் சீராக நடைபெறும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். இளைஞர்கள் சிலருக்கு பிரபல நிறுவனங்களில் இருந்து புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:**
குடும்பத்தில் பிரச்சினைகள் தலை காட்டினாலும் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கலைஞர்களுக்கு முயற்சிகள் மூலம் வாய்ப்புகள் கிடைத்தாலும் எதிர்பார்க்கும் வருமானம் கிடைக்காது.

**தனுசு:**
புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் தொழில் முன்னேற்றமும் ஏற்படும்.

**மகரம்:**
கூட்டுத் தொழிலில் போட்டியாளர்களை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். குடும்பத்தில் எதிர்பாராத செலவு வந்து அல்லல்படுத்தும்.

**கும்பம்:**
கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற அதிக முயற்சிகளை மேற்கொள்வார்கள். பணப்பற்றா குறையால் கடன் சுமை அதிகரிக்கும்.

**மீனம்:**
போட்டிகளால் தொல்லைகளை சந்திப்பீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும்.

## தலைவர் பதவியை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களுடாக கடந்த சில தினங்களாக ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் பல தகவல் வெளியிடப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு தாம், ஒத்துழைப்பு வழங்குவதாக வெளியிடப்பட்டு வரும் தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதெனவும் அவர் தெரிவித்துள்ளார். எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இதுவரை தாம், தீர்மானிக்கவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## அரிசி ஆலையாளர்கள் ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் இந்த கடன் வசதிகளை வழங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சிறு மற்றும் மத்திய தர அரிசி உற்பத்தி தொழில்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் (14) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தரார்.

இந்த கடன் திட்டத்தின் கீழ், 09 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாவும், நெற் களஞ்சியசாலை உரிமையாளர்களுக்கள் மற்றும் தொகை நெல் சேகரிப்பாளர்கள் ஆகியோருக்கு அதிகபட்சமாக 25 மில்லியன் ரூபா வரையும் கடனாக வழங்கப்படவுள்ளது. கடனை திருப்பிச் செலுத்துவதற்கு 180 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுவதுடன், மொத்த வட்டி வீதமான 15 இல், நான்கு வீதத்தை திறைசேரி குறித்த வங்கிகளுக்கு வழங்கவுள்ளது. இதனால், கடன் பெறுநர்கள் 11 வீத வட்டியை மாத்திரமே வருடாந்த வட்டியாக செலுத்த வசதியளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நல்ல விலையை பெற்றுக்கொடுப்பதும், மக்களுக்கு நியாயமான விலையில் அரிசியை பெற்றுக்கொடுப்பதுமே இக்கடன் திட்டத்தின் நோக்கமாகும் எனவும் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

## வெளிநாட்டினர் 186 பேரை...

பொருள் குற்றங்களில் ஈடுபட்ட குழுவினரையே,மாலைதீவு அரசாங்கம் நாடு கடத்தவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதில், இலங்கையர்கள் 25, பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் 83 பேர்,இந்தியர்கள் 46 மற்றும் நேபாளத்தினர் எட்டுப்பேர் உள்ளடங்குகின்றனர்.

## ஜெய்கா நிறுவனத் தலைவர்...

ஜனாதிபதி எடுத்திருந்த நடவடிக்கைகளை கலாநிதி தனக்கா அகிஹிக்கோ பாராட்டினார்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம், இலகு ரயில் திட்டம் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஜப்பானிய உதவியின் கீழ், நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை துரிதமாக ஆரம்பிப்பது தொடர்பிலும் இதில் கவனம் செலுத்தப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடியில்ஜ ஜப்பானிய அரசாங்கமும் ஜெய்கா நிறுவனமும் வழங்கிய உதவிகளுக்கு இதன்போது ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் விவகார பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இணையவழிப் பாதுகாப்புச் சட்டம்...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் கடந்த மாதம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்ட போது ,இதில் மேற்கொள்ளப்பட வேண்டிய சில திருத்தங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

இத்திருத்தங்கள் அனைத்தும் உள்வாங்கப்பட்டே சட்ட வரைபு தயாரிக்கப்பட்டிருந்தது. குறித்த சட்டம் தயாரிக்கப்படும் போது சில தரப்பினர் திருத்தங்களை முன்வைத்திருந்தனர்.என்றாலும் இறுதி நேரத்தில் அதனை எடுத்துக்கொள்ள முடியவில்லை. உயர் நீதிமன்றம் முன்வைத்திருந்த திருத்தங்களுடன் இச்சட்ட மூலத்தை அனுமதித்த பின்னர், அமைச்சரவையில் திருத்தம் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தில் அதனை சமர்க்க அரசாங்கம் தீர்மானித்தது. இதன் பிரகாரமே, சில திருத்தங்களை மேற்கொள்ள விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த அமைச்சரவையின் போது அந்த திருத்தங்களை முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, சபாநாயகர் கைச்சாத்திட்டத்திலிருந்து இணையவழி பாதுகாப்புச் சட்டம் தற்போது நாட்டில் அமுலில் உள்ளது. இதனால் சமூக வலைத்தளங்களை பயன்படுத்திக்கொண்டு தனிநபர்களை இலக்குவைத்து பொய்ப் பிரசாரங்கள் அவதூறான விடயங்கள் பிரசுரிக்கப்படுமாக இருந்தால், அவர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும்” என ஆசு மாரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

# மாணவர் சமுதாயத்தை கைத்தொழில் துறையில் உள்ளீர்க்கும் திட்டம்

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளை இலக்காகக் கொண்டு, மாணவர் சமுதாயத்தை கைத்தொழில் துறையில் உள்ளீர்க்கும் வேலைத்திட்டத்தில் இரண்டாம் கட்டத்திட்டம் இந்த வருடத்தின் இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

இந்நிலையில், பாடசாலை கைத்தொழில் துறையை 3,000வரை மேம்படுத்த இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கைத்தொழில் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண முன்வைத்த யோசனைக்கமையவே இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

2030ஆம் ஆண்டாகும் போது இலங்கையில் கைத்தொழில் துறையை 10 சதவீதமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது கைத்தொழில் துறை வளர்ச்சி 2.8 சதவீதமாக உள்ளது. கைத்தொழில் துறையால் ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு உற்பத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இதற்குரிய முதற்கட்ட வேலைத்திட்டம் கடந்த வருடம் ஜூன் மாதம் 27ஆம் திகதி கொழும்பு நாலந்தா பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டத்தில் நாடளாவிய ரீதியிலுள்ள 300 பாடசாலைகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதற்கான பூரண ஆதரவை கல்வி அமைச்சு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாரணர் இலச்சினை அணிவிப்பு



'மாற்றத்துக்கான தலைமைத்துவம்'என்ற தொனிப் பொருளில் இம்மாதம் 20ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பத்தாவது சாரணர் தின நிகழ்வையொட்டி உத்தியோகபூர்வ இலச்சினை பிரதம சாரணர் ஆணையாளரிடமிருந்து நாட்டின் முதலாவது சாரணரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

## இசைத்துறையில் இளம் பெண்களுக்கு வாய்ப்பு

இசைத்துறையில் ஆர்வம் கொண்டு இசைக்கருவிகளை இசைக்கப் பழகியவர்களுக்கும் பழகிக்கொண்டு இருப்பவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் முகமாக புதிய அலை கலை வட்டம் கொழும்பில் முற்று முழுதாகப் பெண்களைக் கொண்ட இசைக்குழு ஒன்றை ஏற்பாடு செய்கிறது. இதில் இணைந்து தத்தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள விரும்புவோர் உடன் 0754880172 என்ற வட்சப் இலக்கத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

குறிப்பாக கீபோர்ட், கிற்றார், புல்லாங்குழல், வயலின் மற்றும் தோல் வாத்திய கருவிகளை இசைக்க கூடியவர்களும் சிறந்த குரல் வளம் கொண்ட பாடகிகள், பாடகர்களும் விண்ணப்பிக்கலாம்.

தென் மாகாண அரச பாடசாலைகளில்

# ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவரிடம் கட்டணம் பெற்று ரியூஷன் நடத்தத் தடை

சுற்றுநிருபம் விரைவில் என்கிறார் மாகாண ஆளுநர்

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாண அரச பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், அதே பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் எதிர்வரும் தினங்களில் வெளியிடப்படும் என தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலிகமகே தெரிவித்தார்.

தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், சுற்று நிருபத்தை கவனிக்காது இவ்வாறு பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிட்டு மேலதிக வகுப்புகள் நடாத்தும் ஆசிரியர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படும். தேசிய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களாயின், அவர்கள் சம்பந்தமாக



கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்படும். இது விடயமாக கவனிக்க தனியான குழுவொன்றும் தயார்படுத்தப்படும்.

இது சம்பந்தமான சுற்று நிருபத்தை வெளியிடுமாறு தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாகவும், வெவ்வேறு இரண்டு மாகாணங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




பேருவளை மகாகொடை ஐ.எல்.எம் சம்சுடீன் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2006ஆம் ஆண்டின் க.பொ.த. (சா.த) பழைய மாணவர் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இவ்வணியின் தலைவர் பைஸால் வெற்றிக்கிண்ணத்தை பாடசாலை அதிபர் எம்.எச்.எப். சிஹானா மற்றும் பழைய மாணவரும் பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவருமான ஹஸன் பாஸி, பி.எப்.எல். தலைவர் ரிஸ்வான், எம்.எச்.எம். ரிஸ்ஹன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் வழங்குவதை படத்தில் காணலாம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2024.02.14 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5390 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,965,528.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 7 7 9 7 9 9

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3632 — சீட்டிழுப்பு திகதி 2024.02.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,455,985.52
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 23 26 43 69 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14732

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1738 — 2024.02.14 — 28727 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 423,948,526.00
ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 04 08 26 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2024.02.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0216
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 2 8 8 1 9 2
L7 எழுத்து C — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.25,261,676.40

**ராசி சுப பலன்** — திகதி 2024.02.14 — சீட்டிழுப்பு இலக்கம் 699 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,215,858.56
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 13 19 25 47 — தனயோக இலக்கம் 23325 — நாளுக்கான விதி எண் 29

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1420 — 2024.02.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 135,813,729.60
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 03 50 57 71 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46622

# கொழும்பில் தோல் பொருள் கண்காட்சி

ருஸைக் பாரூக்

இலங்கை பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர் சங்கம் மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்த 14ஆவது பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி கடந்த 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கண்காட்சியானது இலங்கையில் பாதணிகள் மற்றும் தோல் துறை சம்பந்தமாக ஒவ்வொரு வருடமும் நடைபெறும் நிகழ்வாகும். மேலும் 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தின. இவ் நிகழ்வில் Rite Shu பிரைவேட் லிமிடெட் இலங்கையில் முன்னோடியான ஷு உற்பத்தி நிறுவனமாகும். இந்த கண்காட்சியில் பல ஆண்டுகளாக தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தி வருகிறது.



## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்460) 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

**குறிப்பு இல: MOR/LAN/01/FI/206**

இங்கே பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியினை அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2023 டிசம்பர் மாதம் 08ம் திகதிய 2361/46ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் (III) பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாகாணம் | : மேல் |
| 02. | மாவட்டம் | : கொழும்பு |
| 03. | பிரதேச செயலாளர் பிரிவு | : மொரட்டுவ |
| 04. | கிராமம் | : லக்ஷபதிய வடக்கு |
| 05. | ஆரம்ப வரைபட இல | : கடத்திரல் வரைபட இல. 520210 தொகுதி இல 10 தாள் இல 2இல் |
| 06. | துண்டு இல | : 307,308 |
| 07. | விஸ்தீரணம் | : 3.3897 ஹெக்டேயர் |

**இஷங்க டி.கே. உடவத்த**
**பிரதேச செயலாளர்**
**மொரட்டுவ**

**2024.02.14 ஆம் திகதிய**
**மொரட்டுவ பிரதேச செயலகம்**

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல : அம்பகோ/3/7அ/02/12**
**காணி அமைச்சின் குறிப்பு இல : 4/3/18/2017 PC/577**

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2365/64 மற்றும் 2024.01.04 திகதி வெளியான இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பகுதி III இனை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாவட்டம் | : நுவரெலியா |
| 02. | பிரதேச செயலகப்பிரிவு | : அம்பகமுவகோரளை |
| 03. | கிராமம் | : ஹத்தல |
| 04. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 317 பி - வக்கம |
| 05. | காணியின் பெயர் | : சப்புஅத்தெகஹமுல்ல |
| 06. | வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் | : துண்டிலக்கம் 01,02,03 மற்றும் ஆரம்ப வரைபட இலக்கம் 330220 |
| 07. | பரப்பளவு | : ஹெக்டயார் 0.0422 |

**சிதாரா ருவினி கமகே**
**பிரதேச செயலாளர்**
**அம்பகமுவ கோரளை**

**22.01.2024**
**பிரதேச செயலகம்**
**அம்பகமுவ கோரளை**

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச பெருந்தோட்ட
தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பலகை அறுவைக்கான மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் கெலேபொக்க அரச தோட்டத்தில் முகாமைத்துவ திட்டத்திற்குரித்தான 552 பலகை அறுவை மரங்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை கொழும்பு-10, சிறிதம்ம மாவத்தை, 257ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2024-02-16ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-03-01ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையிலும் மற்றும் கல்பிஹில்லயில் அமைந்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்தில் 2024-02-16ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-02-29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையிலும் 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த கேள்வி ஆவணங்களை 2024-03-01ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் கொழும்பு-10, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2024-03-01ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து அந்த விலைமனுப் படிவங்கள் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். வெற்றிகரமான கேள்விதாரர் கேள்வி கையளிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யாத அனைத்துக் கேள்விகளும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் கேள்வி முற்பணத் தொகை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏதாவதொரு விலைக்கோரலை அல்லது விலைக்கோரலின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10.**
**விசாரணை: 0114-194879**

2024-02-15.

**LE/RE/208**

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

## பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம் : 702725000100**

**கடனாளியின் முழுப் பெயர் : கலப்பத்தி மெரென்சிகே சுனில் விக்ரமசூரிய கலப்பத்தி மெரென்சிகே சசித்ரா லக்மாலி விக்ரமசூரிய**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.03.31 ஆம் திகதி 2326 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.03.31 ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் 2024.03.12 ஆம் திகதி மு.ப 12.00 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தாள் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 3101 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின் படி, **தொண்ணூற்று நான்கு இலட்சத்து பத்தாயிரத்து எழுபது ரூபா ஒரு சதம் (ரூபா 9,410,070.01), 2023.01.31** ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1) **கடன் தொகை 702725000110**
குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்து ஒரு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று நாற்பத்து இரண்டு ரூபா தொண்ணூற்று மூன்று சதத்தினையும், (ரூபா 2,120,642.93) 2023.01.31 ஆம் திகதி வரையிலான நிலுவையாக எழுபத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நானூற்று இருபத்து ஏழு ரூபா எட்டு சதத்தினையும் (ரூபா 7,289,427.08) இதன்படி 2023.01.31 மொத்தமாக தொண்ணூற்று நான்கு இலட்சத்து பத்தாயிரத்து எழுபது ரூபா ஒரு சதத்தினையும் (ரூபா 9,410,070.01)

2) குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத இருபத்து ஒரு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று நாற்பத்து இரண்டு ரூபா தொண்ணூற்று மூன்று சதத்திற்காக (ரூபா 2,120,642.93) அறவீடு செய்ய வேண்டிய 14.50% வீதமான வருடாந்த வட்டியினையும் 2023.01.31 ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்,

3) 2023.02.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான ஐம்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து ஐந்து ரூபா தொண்ணூற்று மூன்று சதத்திற்காக (ரூபா 5,962,555.93) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,

4) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 702725000100**

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமத்திய மாகாணத்தில், பொலன்னறுவை மாவட்டத்தில், சிங்கள பத்துவவில் ஹிங்குரக்கொட பிரதேச சபை எல்லையில் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 80 சாமபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் சாமபுர கிராமத்தில் அமைந்துள்ள ஹிங்குரக்தமன எனப்படும் காணிக்கு 2017.12.24 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஐ.எச்.எம்.எஸ்.ஜே.பி. ஹேரத் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1622 என்ற இலக்க காணிவரைபடத்தின்படி 1 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே:** No. F.C.P.Po.132 ன் 566 ஆம் இலக்க காணித்துண்டும் **கிழக்கே:** No. F.C.P.Po.132 ன் 566 ஆம் இலக்க காணித்துண்டும் **தெற்கே:** F.C.P.Po.132 ன் 566 ஆம் இலக்க காணித்துண்டின் பாதையும் **மேற்கே:** No. F.C.P.Po.132 ன் 566 ஆம் இலக்க தெற்கே: ழே. காணித்துண்டின் பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இருபத்து இரண்டு தசம் மூன்று நான்கு பேர்ச்சஸ்களாகும். (ஏக்.0 ரூட்.0 பே.22.34) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஆறு ஐந்து ஹெக்டயர்களாகும். (ஹெக் 0.0565) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கும்.

**மேலே குறிப்பிட்ட 01 ஆம் இலக்க காணி கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியினை மீள அளந்து தயார் செய்யப்பட்டதாகும்.**

மேற்குறிப்பிட்ட வடமத்திய மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட சாமபுர கிராமத்தில் அமைந்துள்ள F.C.P.Po.132 இலக்க காணி வரைபடத்தின் 565 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கே F.C.P.Po.132 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 566 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஆறு ஐந்து ஹெக்டயர்களாகும். (0.0565 ஹெக்டயர்) இக்காணித்துண்டும் இதில் உள்ள தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் பொலன்னறுவை காணிப் பதிவுக் காரியாலயத்தில் இலக்கம் G 7/80 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் லமாஹேவகே லலித் மர்வின் தி சில்வா என்பவரினால் 2018.03.26 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 3101 ஆம் இலக்கத்தினை கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு உள்ள அட்டவனை பரீட்சிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி 08.02.2024**

**இ.வீ.அ.நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு 02.**

# Impel Awarding Body Empowering Your Achievement to Success

IMPEL AWARDING BODY PV - 00276783

அறிவு, ஆற்றல், திறமை மற்றும் கல்விசார் வெற்றிகளின் உறுதிப் படுத்தப்பட்ட கஷ்டம், தியாகங்களுடனான விடா முயற்சியுடன் கூடிய செயல் திறன்மிக்க வெற்றிகள், மதிப்பு சார்ந்த ஊக்கமளிக்கும் பாராட்டுக்கள் மூலம் கூட்டு அன்பின் வெளிப்பாடு, வாழ்க்கை அனுபவங்களின் தரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடு, ஆளுமைகளின் விரிவாக்கம் , தனி மனித அந்தஸ்தின் மேம்பாடு போன்றவற்றை மேலோங்கச் செய்யும் திட்டங்களை செயல்படுத்தி ஒவ்வொரு தனிமனித சாதனையையும் சமூகத்தின் கூட்டு முன்னேறத்திற்கு பயனளிக்கக் கூடிய மனநிலை மேம்பாட்டினூடாக நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய வளமான ஒன்றுபட்ட தலைமுறை உருவாகுவதற்கு அர்ப்பணிப்புடனான சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் 'Impel Awarding Body (Pvt) Ltd' நிறுவனமானது உங்கள் சாதனைகளை வலுப்படுத்தி வெற்றி காண்போம் எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முயற்சி, செயல்திறன், சாதனைகளை வலுப்படுத்தி வெற்றிப் பயணத்தை உற்சாகத்துடன் தொடர வருடாந்தம் EMPOWERMENT எனும் தலைப்பில் விருதுகளை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- Effort Empowerment Award
- Performance Empowerment Award
- Achievement Empowerment Award

இவ்வடிப்படையில் ஆரம்பத்திட்டமாக விடாமுயற்சியனை வலுப்படுத்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை தோற்றிய மாணவ மாணவிகளுக்கான Effort Empowerment Award2023 எனும் மாபெரும் விருது விழா நிகழ்ச்சியினை நடாத்த தீர்மானித்துள்ளது. இதில் முதல் கட்டமாக எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை BMICH Jesmin Hall இல் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் 260 மாணவ மாணவிகள், 423 பெற்றோர்கள், 4 கௌரவ அதிதிகள் மற்றும் Impel Awarding Body இன் 25 Staff உடன் 15 அவர்களது குடும்பத்தினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். அத்தோடு இந் நிகழ்ச்சி காலையில் ஒரு பகுதியும் பிற்பகல் ஒரு பகுதியுமாக இரண்டு அமர்வுகளாக நடைபெறும்.

மேலும் சான்றிதழ்களுடன் பாராட்டுக்கள் பெறவிருக்கும் மாணவ மாணவிகள் அனைவரினதும் விபரங்கள் 2023ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு விருதுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

## SEVEN STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப் புள்ளியை விட 40க்கு மேல் இருந்தால், அவர்கள் "ஏழு நட்சத்திரங்கள்" வகையைச் சேர்ந்தவர்கள்

1) ASMAL MUHAMMADH ADNI MUHAMMADH

## SIX STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளிக்கு மேல் 30 முதல் 39 வரை புள்ளிகள் இருந்தால், அவர்கள் "ஆறு நட்சத்திரங்கள்" வகையைச் சேர்ந்தவர்கள்.

1) MOHAMED FAHMY FATHIMA ZAINA
2) PASAK HAYA
3) MOHOMED SAPRAN ZAKEER
4) MOHAMED RIMSI HIBA

## FIVE STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளிக்கு மேல் 20 முதல் 29 வரை புள்ளிகள் இருந்தால், அவர்கள் "ஐந்துநட்சத்திரங்கள்" வகையைச் சேர்ந்தவர்கள்.

01) SEYED HASSANUL BISHRY BAAR MOULANA SEYED SAAD
02) MOHAMED FOWMI KAREEM FATHIMA FAHAMA
03) MOHAMAD NAWAS FATHIMA AFKA
04) MUHAMMADHU FAHMI MOHOMED UMAR
05) MOHOMED RASEEN FATHIMA SHASHIYA
06) MUHAMMADU MANASIR AHNA
07) MOHAMED IRSHAD FATHIMA ILMA
08) JOESHOGI EFFENDI SASHIN
09) KRISHNAKUMAR KESHIKA
10) MOHAMED WASEER AKSHA
11) MOHAMED NIJAM ZEENATH HAYAM
12) MOHAMMD RISWAN PATHIMA RAHNA
13) MISHRAF AHAMED MARWA SHIHAM
14) MOHAMED RIFAS ZAINA NABEEHA
15) MUHAMMADHU MUSTHAQIM FATHIMA SUADHA
16) MOHAMAD ASHADH ZAHRA
17) RIYAS MOHAMMED ASMA
18) MOHAMMAD RAFIU SARA
19) MOHAMED THAJHIR THASKI FATHOOHA

## FOUR STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளிக்கு மேல் 10 முதல் 19 வரை புள்ளிகள்இருந்தால், அவர்கள் "நான்கு நட்சத்திரங்கள்" வகையைச் சேர்ந்தவர்கள்.

01) SATHYASEELAN HINETH
02) AHAMED KABEER RAIHA
03) AHAMED RASMI FATHIMA AMRA
04) MOHAMED IKRAM MOHAMED HASNI
05) MUHAMMED NAWAS HUMAID
06) MOHAMMADU RISMI YOONUS
07) MOHAMED AFLAL AHAMED ADHEEB
08) KAPPARKHAN HIBA
09) MOHAMAD RIFASKU FATHIMA RUHA
10) MUHAMMADU RISVI RIJJA
11) MOHAMED RIYAS DAANYA
12) SIRAS MOHAMED MUHAMMADH AMMAR
13) MOHAMED RIMSAN FATHIMA YUMNA
14) MOHAMED FAHURUDEEN FATHIMA SAFA
15) SUHAIB MOHOMAD FATHIMA SAMA
16) MOHAMED MAPAAS AAYSHA
17) MOHAMMED ROOMY AAFIYA
18) MOHAMED FAISAL FATHIMA MAISHA
19) SHANE MYLVENTHEN
20) MOHAMED RIMSAN AATHIKA
21) MUHAMMADU IMTHIYAS ISMA
22) HISBUR RAHMAN MEERWA
23) MUHAMMADH HASRIN SHAHAMA
24) SASIKUMAR HISHANI
25) MOHAMMADU HALEEL FATHIMA HANFA
26) ABDHUL SIHADHU AYESHA AMAANY
27) MOHAMED FARIZ FAHMA
28) MOHAMED RISWAN RIFAT
29) MOHOMED IKRAM BILAL
30) MOHAMED NISHAF AMHAR
31) MOHAMMAD RASEEM FATHIMA RIZA

### காலை நிகழ்ச்சியில் கௌரவ அதிதிகள்



**M.A.M. Rifdhi, SLTES**
LecturerProfessional Development Centre for Teachers (Gampaha)



**Dr Shamila Dawood**
LLB (Hons), LLM (Oslo), PhD (QLD, Aus), Attorney-at-Law Senior Lecturer, Faculty of Law, University of Colombo

32) MUHAMMED SHIYAM SAARA
33) MOHAMED MIFRIJ AHAMED SHAZAD
34) MOHAMED NISMY NIZHA MARIYAM
35) MOHAMMED RIZA MOHAMMED YAHYA
36) MOHAMMADH AKRAM AHLA MANA
37) MOHOMED NISAAM FAATHIMA SHAAZIYA
38) MOHAMAD SHAFRAS MOHAMAD SHAHID
39) MOHAMMADU FAIZAL AHAMAD SAKEEB
40) MOHAMED MINHAJ THANWEER
41) MUHAMMADU RISVI FATHIMA AMNA
42) MOHAMED SIFAN SALIHA
43) MOHAMED FAZAN AYSHA UDAYAR
44) MOHAMED SAMEER YOOSUF
45) VASANTHAKUMAR MITHESH
46) MOHAMMED RIYAS AHMATH
47) BISRUL HAAFI FATHIMA ZAKIYA
48) MOHAMED ASHRAP FARHA
49) FALULUR RAHUMAN RAHMI AHAMED
50) MOHAMADH FASIHAAN MUHAMMEDH FAAHIM

## THREE STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளியாகவோ அல்லது வெட்டுப் புள்ளிக்குமேல் 10 வரை இருந்தால், அவர்கள் "மூன்று நட்சத்திரம்" வகையைச் சேர்ந்தவர்கள்.

01) MOHAMAD ASOOR FATHIMA NUHA ASOOR
02) MOHAMED IFLAR MOHAMED IHSAN
03) MOHAMED MAZEEN ZAINAB
04) ABDHUL WAAHID FATHIMA HAFILA
05) MOHAMED AAKIL HAJARA
06) MOHAMAD RISMY MANHA
07) MOHOMADHU MUMTHAS FATHIMA MAISHA
08) MOHAMMADHU KAMIL FATHIMA RAHMA
09) MOHAMMADHU RASEEN ZAINA
10) RAFFAN AHAMAD ZAINAB
11) BALASHANKAR DILRUKSHANI
12) MOHAMED HAJINAS MOHAMED AABITH
13) THANGAVEL YOGARAJA AKILAN
14) ANSAR AAYSHA
15) AHAMED AARIA FATHIMA SHARFA
16) MOHAMMED RAZEEN MOHAMMEDH THALHA
17) MUHAMMED HAMEEM FATHIMA THOOFA
18) MUHAMMEDHU SAWARHIR FATHIMA SAHLA
19) MOHAMAD SAFA MOHAMMAD SAJIDH
20) MOHAMED ARSHADH AYDHA AYN
21) MOHAMED FASRAN AAYSHA
22) MOHAMMADHU RIYAS FATHIMA RAHMA
23) MUHAMMADU JAMEEN HANFA
24) MUHAMMADHU NIFTHY FATHIMA MISKA
25) MOHAMMAD SHIFAR ABDHUR RAHMAN
26) SEIYAD HAJA MOHIDEEN AHLA
27) DINESH KUMAR PAVIKSHA
28) MOHAMMED SHIYAN MOHAMED SHAZAN
29) MUHAMMADH ARSHAD AMNA
30) MOHOMAD NAJRAN AANISA
31) MOHAMED MISKY AAMINA MARYAM
32) JAGADEESH KUMAR USHANTH AKASH
33) MUHAMMADH FOUSS MUHAMMADH AAQIDH
34) MOHAMED ABDHULLAA LUKMAAN
35) MOHAMMED NADHEER RIDHA
36) MOHAMED IRFAN HUDHA
37) MOHAMED MOHIDEEN UMAR
38) MOHAMMADU NASRI RAIZAN
39) MUHAMMADHU SHIFAN LEESHA
40) PALLE KOTUWE LUQMAN
41) PAKYARAJ PRANIKA
42) MUHAMMADH RIYASI RAAHEESH
43) MUHAMMADHU RASMI SABEER RALI
44) MOHAMMADHU IMRAN ATHUF
45) MOHAMED MUNAWWAR HASSAN ASHHARI
46) MOHAMED ANAS HAFSHA
47) SEHU MUHAMMADHU DHAWUTHSA MUHAMMADHU RIHAN
48) MOHAMED HANIFA FAZLAN AHMED
49) MOHOMED HANEEFA UMAR AJMAL
50) MOHAMED SAWRAJ SHAHIM
51) MOHAMADU NASEER RIHMA
52) MUHAMMADH UBAIDH AFZAL
53) SASIKUMAR SHABAREESHAN
54) RUMEISDEEN RUKAIYYA
55) MOHAMMADHU YASIN MUHAMMADHU YOONUS
56) MUHAMMED ZAHIR ZAINAB
57) MOHAMMED SUPUWAN ABDHULLA
58) MOHOMAD FAHIR LUKMAN
59) VIJITHA KUMARA HARINI VINDHA
60) MOHAMED ALEE AAMINA
61) NAWAS NABEEHA
62) EMOHAMED RIZVI AHAMED REHAN
63) AHAMED FAZLOON NAASIR
64) MOHAMED RASLAN SHAZA
65) MOHAMED MUNTHASIR ZAINAB RUKAIYA
66) MUHAMMADHU SAADIKEEN AAMINA
67) KALAISELVAM NAVISHAN
68) MOHAMED RAMEES FATHIMA HUSNA
69) MOHAMED HALID HIBA
70) MOHAMED MOHIDEEN SHAJAHAN HIKMA
71) MOHAMED RILWAN RUKAYYA
72) RIYAS MOHAMED RUSHDI AHAMED
73) FAWUSUL AMEER RUQAIYA
74) MOHAMED RILWAN REEMA
75) IMRANKHAN MUHAMMADH IMDHADH
76) MOHOMED RIYAS YUSRI AHAMED
77) MOHAMED FARSAN ABDHULLAH
78) MUHAMMADHU NIYAS PATHIMA AHRA
79) MOHAMED IRSHAD ABDUL MALIK
80) MOHAMAD FAWAS IMANI

## TWO STARS

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளிக்குக் கீழே 10 புள்ளிகள்வரை இருந்தால், அவர்கள் "இரண்டு நட்சத்திரங்கள்" வகையைச் சேர்ந்தவர்கள்.

01) MOHAMED RASHMI RAASHIDH
02) MUSAFFER MOHAMED MINHA
03) IMIDHIYAAS FATHIMA ISRA
04) PRADHEEPAN DILUCKSHAYINI
05) OHAMAD ASSAR SHEEMA
06) THAJUL MUNEER MOHAMED MADANI
07) RATHNARAJ MAHEESHAN
08) ABDUL MAJEED FATHIMA MANHA
09) MOHOMED FARIS MOHOMED FAHMI
10) MOHAMED RASAD ARKAM
11) MARSOOK MINHA
12) PAWSUL AMEEN HAFNA
13) RAVICHANDRAN DHUSHYANTHAN
14) MOHAMMADHU WAHIR MOHAMMADH AMMAAR
15) MOHOMMADU HASARAF FATHIMA AFA
16) MOHAMAD AKTHAR RAIHAN
17) SAPRAN SEYNA
18) NITHIYANANTHAN LATHEES
19) KISHANTHAN SURUTHIKA
20) MOHOMED ASLAM FATHIMA
21) MOHAMED RAFEEK ILMA
22) MOHOMED RISWAN RAIHA
23) YOGARAJA DHAKSHAN
24) MOHAMMADHU RASVI MOHAMMADHU RASVI FATHIMA HAPSHA
25) VIJAYA MOHAN ALFA
26) MOHAMED SHAFRAS RUQAIYA
27) MOHAMMEDHU NIFAIS FATHIMA ARAFA
28) MOHAMED PAYAADH MOHAMED
29) RAMACHANDRAN KAAVINI
30) AJMAAL AJMAL AAMINA
31) MOHAMADU THASLEEM MUHAMADU HAAZIQ
32) MOHAMMADU NAASIK HAKAM
33) MOHAMMED FARSAN YUSUF
34) ANWAR ABDUL HALEEM HATHIM AHAMED
35) MUHAMMADHU SEEDHU AADHILA
36) ISSADHEEN AMNATH MANHA
37) MUHAMMADHU RAFAIDHEEN HANA
38) IRFAN MOHOMAD INSHAF
39) MOHAMED ASHAN ABITH
40) SIVASUBRAMANIAM KISHALINI
41) MOHAMED AZHAR JAAHIR AHMAD
42) MOHOMED RIFAAI ZAINAB
43) MOHAMED HANEEN HAMDHI
44) MOHOMED NISHAD FATHIMA ZUHA
45) MOHAMAD SHAFEFR SHA MAHADHY
46) MUHAMMADHU SAWAHIR FATHIMA SALMA
47) MOHAMMAD FIYASDEEN ZULEHA
48) MOHAMED NASAR NASFA
49) MOHAMMED SHIRAS SALLY MOHAMMED AADHAM SALIH
50) KARUPPAIAH DHIVYASHRI
51) MOHAMED MAFAZ FATHIMA MANHA

### பிற்பகல் நிகழ்ச்சியில் கௌரவ அதிதிகள்



**M. H. M. Zameel**
SLAS Special grade.Naleemi, BA, Masters in Human Resource Development and Planning Additional secretary Ministry of Urban Development and Housing



**Dr. Jalal Deen Careemdeen**
PhD (Edu, Malaysia), Senior Lecturer, Faculty of Education, OUSL, Sri Lanka.

52) ASHFAQUE AHAMED RUSHAIDH
53) MOHAMED MUNAWWAR ABDHULLA
54) MUHAMMADU IFAM ZAINAB
55) MUHAMMADU KADAFI FATHA
56) MUFASPIR MOHAMED MAHDHI
57) MOHAMAD SIYAD MOHAMAD ZAID
58) MOHAMED ROSHAN RAHIMA ZAINAB

## ONE STAR

மாணவர் பெற்ற புள்ளி வெட்டுப்புள்ளிக்குக் கீழே20 புள்ளிகள் முதல் வெட்டுப்புள்ளிக்குக் கீழே10புள்ளிகள் வரை இருந்தால், அவர்கள் "நட்சத்திர" வகையைச் சேர்ந்தவர்கள்

01) MOHAMED RAMSAN AMMAR
02) MUHAMMED NAADHEER PATHIMA
03) MOHAMEDH FASLEEN RAHMA
04) ZAHEEM MOHAMED SHAAN
05) MUHAMMADHU KIYAS ALI RAHID SALAH
06) MOHAMMADU ASLAM MUAWIYA
07) MOHAMMADU MUBARAK MAHDHI
08) MOHAMAD ASAN MOHAMED AASIF
09) ABDUL HADHY FATHIMA SHAMA
10) MOHAMED ZULFIKAR SHAHIMA
11) SHAFRAN MOHAMMED SHARAF
12) MOHOMMADHU HAMSA RAIFA
13) RAMAJAYAM JISHNUTHAN
14) MOHAMMADU SIHAD HAMDA
15) MOHAMMADHU NAWUFAR NUHA
16) MUHAMMADU FARIS FATHIMA AMNA
17) FASHRUL HAAFI AASHIF
18) MOHAMED MOHIYADHDHEEN LAREEF AYFA
19) MUHAMMED ISMAIL MOHAMED ISSAD KHAN FATHIMA ASNA
20) SUREEF BACHA MOHAMED LUKMAN BACHA
21) MOHAMAD HAMMADH SEENATH
22) SEYYAD MOHAMED MOHAMED ZAMITH
23) MUHAMMADHU HASAN YOOSUF
24) MOHAMED IMRAN YAHYA
25) RAFIK MOHAMMED NASRI MOHAMMED NASRI HIKMA
26) MUHAMMAD FAWZAN ZAINA
27) MOHAMMADU ASKAR AFA
28) MOHAMAD HAMEEM HUMAIDH AHAMAD
29) MOHAMED SAMROON YOOSUF AHAMED
30) NIHAS MOHAMED NABI
31) MOHAMAD INSAF AYYOOB
32) MUHAMMADH FASLAN MARIYAM
33) MOHAMED ASEER ABDHULLAH MISHARY
34) MOHAMED SHIRAF HAMDHA
35) MOHAMMEDH IBRAHIM FASSY MUHAMMADH ABDULLAH
36) MOHAMAD NUSKI MAAZIN
37) JEYASANGAR KAMSIKA
38) RAHMEN UMAR
39) MOHOMED IRSHADH FATHIMA NUHA
40) MOHOMED IZZATH MANAAS
41) MOHAMED MASOOD FATHIMA NIFLA
42) MOHAMED HALEEMDEEN MOHAMMED HALEEMDEEN FATHIMA ZAHRA
43) MOHAMED ARAFAN MOHAMED AYOOB
44) RISWAN ABDULLAH
45) MOHAMAD NISAM MOHAMAD NISRAN
46) MUHAMMADU RISWAN FATHIMA AFRA
47) MOHAMED SAMSUDEEN SAMRA
48) SAMSEER SAMAAHATH

## Our Directors



Aflardeen Mohamed Anas



Mohamed Ansari Mohamed Rinas



Mohamed Sufiyan Mohamed Rizkan



Junaideen Mohamed Aslam



Najimudeen Mohamed Rishad

# கிழக்கின் குரல்



## அம்பாறையில் அபிவிருத்திகளுக்காக பட்ஜெட்டில் ரூ. 402 மில்லியன் ஒதுக்கீடு

### மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தகவல்

பெரியநீலாவணை விசேட நிருபர்



அம்பாறை மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தினூடாக 402 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ. டி.வீரசிங்க தலைமையில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், மாவட்ட செயலகத்தில நேற்று முன்தினம் புதன்கிழமை (14) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தவிசாளர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம, பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க, பைசால் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், எஸ்.எம்.முஸாரப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டதுடன், பொதுமக்களின் நலன் கருதி எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கல்வி, நீர்ப்பாசனம், வீதி, மின்சாரம், வீடமைப்பு உட்பட அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவர்களிடம் இதன்போது கேட்டறியப்பட்டதுடன், இந்த வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

## திருகோணமலை சிறையில் நூலக நடமாடும் சேவை

தம்பலகாமம் குறூப், கந்தளாய் தினகரன் நிருபர்கள்



திருகோணமலை சிறைச்சாலை கைதிகளின் நலன் கருதி நூலக நடமாடும் சேவை திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலகத்தால் அச்சிறைச்சாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (14) நடத்தப்பட்டதுடன், சிறைச்சாலை நூலகத்துக்கு ஒருதொகுதி நூல்களும் கையளித்து வைக்கப்பட்டன.

இதன்போது நடமாடும் நூலக சேவை மற்றும் நூலகம் தொடர்பாக சிறைக்கைதிகளுடன் கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

சிறைச்சாலைக்கான நூல்களை திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் பிறேமவன்சவிடம் திருகோணமலை நகர சபைச் செயலாளர் வெ.இராஜசேகர் கையளித்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் நா.பரமேஸ்வரன், திருகோணமலை சிறைச்சாலை பிரதான ஜெய்லர் இ.மோகனராசா, திருகோணமலை பொது நூலக பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன், நூலகர் மு.லெ.றிம்சானா, நூலக உதவியாளர்கள் உ.ரஜனிகாந்தன், அ.அச்சுதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் ஆயுர்வேத கிளினிக் திறந்துவைப்பு



அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சகல வசதிகளையும் கொண்ட சித்தர் பாரம்பரிய ஆயுர்வேத கிளினிக் மற்றும் மருந்தகத்தை தேசிய காங்கிரஸ் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவின் போது, ஆயுர்வேத துறைக்கு தொண்டாற்றிய, ஆயுர்வேத வைத்தியர்களுக்கு தேசிய காங்கிரஸ் தேசியத் தலைவர் அதாஉல்லா நினைவுச்சின்னங்களை வழங்கி வைத்தார். இதேவேளை, தேசிய காங்கிரஸ் தேசியத் தலைவர் அதாஉல்லாவுக்கு சித்தர் பாரம்பரிய ஆயுர்வேத நிலையப் பொறுப்பாளர், வைத்தியர் ரிப்னாஸ் நினைவுச் சின்னமொன்றை வழங்கி வைத்தார்.

இவ்விழாவில் உரையாற்றிய தேசிய காங்கிரஸ் தேசியத் தலைவர் அதாஉல்லா,

"பழமை வாய்ந்த எமது பண்டைய வைத்திய முறையான ஆயுர்வேத வைத்தியத் துறையால், எவ்வித பக்க விளைவோ அல்லது பாதிப்போ இல்லை. இந்த வைத்தியத்தில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளமை மிகவும் வரவேற்கக்கூடியதாகும். இது விடயத்தில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

## அம்பாறையில் வெள்ளத்தால் சேதமடைந்த குளங்கள், மதகுகளை புனரமைக்க கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் சேதமடைந்த விவசாயப் பாதைகள், சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், மதகுகள் மற்றும் கால்வாய்களை புனரமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட திட்டமட்ட விவசாய அமைப்பின் செயலாளர் ஏ.எல்.எம்.என்.அகமட் தெரிவித்தார்.

நீர்ப்பாசன மற்றும் வனஜீவராசிகள், வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரின் பங்கேற்பில் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த செவ்வாயன்று (13) விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடும் மழையைத் தொடர்ந்து சேனநாயக்கா நீர்ப்பாசனக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அம்பாறையில் நெற்செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டதுடன், விவசாயப் பாதைகள், கால்வாய்கள், நீர்ப்பாசனக் குளங்கள் ஆகியன சேதமடைந்தன.

சேதமடைந்த விவசாயப் பாதைகள், கால்வாய்கள், நீர்ப்பாசனக் குளங்களை எதிர்வரும் சிறுபோக நெற்செய்கைக்கு முன்னர் புனரமைக்குமாறும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு மற்றும் சிறுபோகச் செய்கைக்கு தேவையான விதைநெல், உரம் ஆகியவற்றை இலவசமாக வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அம்பாறையில் சேதமடைந்த குளங்கள், கால்வாய்கள், வீதிகளை புனரமைப்பதற்கும் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கும் 1,200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன், விவசாய கிருமிநாசினிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறும் இக்கலந்துரையாடலின் போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## விசேட தேவையுடையோர் மட்டக்களப்பில் கௌரவிப்பு

### சுயதொழில் உபகரணங்களை ஆளுநர் செந்தில் வழங்கினார்



கந்தளாய், கிண்ணியா தினகரன் நிருபர்கள்

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அம்மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் உபகரணங்களை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலுக்கமைய சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை, பொழுதுபோக்குக்காக அவர்களுக்கு LED தொலைக் காட்சிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது சாதனைகளை புரிந்துகாட்டிய மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## பாதுகாப்பான புலம்பெயர்வு; கிண்ணியாவில் செயலமர்வு

கிண்ணியா தினகரன், கிண்ணியா மத்திய நிருபர்கள்



பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக தெளிவூட்டும் செயலமர்வு, கிண்ணியா பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (15) நடைபெற்றது.

தொழிலுக்காக புலம்பெயர்ந்து சென்றோர், அவர்களது குடும்ப அங்கத்தவர்களை இலக்கு வைத்து இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு விளக்கமளித்தனர். தொழிலுக்காக சட்டவிரோதமாக புலம்பெயர்ந்து செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அதிகாரிகள், இவ்வாறு சட்டவிரோதமாக புலம்பெயர்ந்து செல்வதால் ஏற்படும் உயிர் மற்றும் சொத்து இழப்புகள் தொடர்பாக செயலமர்வில் கலந்துகொண்டோருக்கு விழிப்புணர்வூட்டினர்.

அத்துடன் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக சட்ட ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

சட்டவிரோதமான புலம்பெயர்வை தடுத்து, பாதுகாப்பான புலம்பெயர்வுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கிண்ணியா பிரதேச செயலகத்தால் இச்செயலமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தெரிவித்தார்.

## தியாவட்டவானில் பயனாளிகளுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் (வாழைச்சேனை) கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தியாவட்டவான் கிராம அலுவலர் பிரிவில் உரிய பயனாளிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அப்பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (14) நடைபெற்றது.

இதன்போது 22 பயனாளிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அரச காணிகளில் குடியிருந்து அவற்றை பராமரிக்கின்ற மக்களுக்கு, காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் அனுமதி பெற்று காணிக் கச்சேரி நடத்தப்பட்டது.

இக்காணிக் கச்சேரியில் கலந்துகொண்ட பயனாளிகளுக்கு மூன்றாம் கட்டமாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா, தியாவட்டவான் கிராம அலுவலர் எம்.எம்.ஏ.சாதாத், காணி வெளிக்கள போதனா ஆசிரியர் சி.எம்.எம்.சமீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மூதூரில் மரமுந்திரிகை கன்றுகள் வழங்கல்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேசத்தில் தோட்டக் காணி கொண்ட உரிமையாளர்களை மரமுந்திரிகைச் செய்கையில் ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருவதாக, மூதூர் முஸ்லிம் வாலிப சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு மரமுந்திரிகைக் கன்றுகளை இலவசமாக வழங்குவதற்கான பணியை முன்னெடுத்துள்ளதாகவும் குறைந்தபட்சம் 40 பேர்ச் காணி கொண்ட உரிமையாளர்களுக்கு மரமுந்திரிகைக் கன்றுகளை வழங்கவுள்ளதாகவும், அச்சங்கத்தினர் தெரிவித்தனர். மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபாடுடையோர் தமது நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு மரமுந்திரிகைக் கன்றுகளை பெற்றுக்கொள்ளுமாறும், மூதூர் முஸ்லிம் வாலிப சங்கத்தினர் தெரிவித்தனர்.

## கிட்டங்கி தாம்போதியில் நன்னீர் மீன்பிடி மீண்டும் ஆரம்பம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

தற்போது மீண்டும் கிட்டங்கி தாம்போதிக் குளத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக, நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து அம்பாறையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை தொடர்ந்து, கிட்டங்கி தாம்போதிக் குளத்தில் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள் தடைப்பட்டன.

இந்நிலையில் தற்போது வெள்ள அபாயம் நீங்கியுள்ளதால் மீண்டும் தாம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவி வருவதுடன், கடும் காற்று வீசுவதாலும் இந்த நன்னீர் குளத்திலிருந்த ஆற்றுவாழைகளை அகற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## மட்டு. சிறைக்கைதிகளால் பனங்கிழங்குச் செய்கை

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான திருப்பெருந்துறை பிரதேசத்தில் மட்டக்களப்பு சிறைக் கைதிகள் பனங்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டதுடன், இதன் அறுவடை அண்மையில் நடைபெற்றது.

திருப்பெருந்துறையில் மேட்டு நிலக் காணியில் பனங்கிழங்குச் செய்கையை மட்டக்களப்பு சிறைக் கைதிகள் மேற்கொண்டனர்.

அறுவடையின் போது சுமார் 1,000 கிலோகிராம் பனங்கிழங்கு அறுவடையை பெற்றதாகவும் இயற்கை முறையில் செய்கை பண்ணப்பட்ட பனங்கிழங்குச் செய்கை சிறந்த விளைச்சலை தந்துள்ளதாகவும், மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தெரிவித்தார்.

இந்த அறுவடை மூலம் கிடைத்த பனங்கிழங்குகள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்று வரும் கைதிகளின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

பனங்கிழங்குச் செய்கை அறுவடையானது சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.



சாரணர் துறையில் கலைக்கூறு முடித்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றது. அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**I. பின்வரும் பந்தியை வாசித்து விடை எழுதுக.**

வானத்தைத் தொடும் அளவுக்கு உயர்ந்து செழித்து வளர்ந்துள்ள மரத்தின் பெரிய கொப்பினை, கீழே தொங்கிக் கொண்டிருக்கும் குரங்கு சந்தோச மிகுதியால் வேகமாக ஆடிக்கொண்டே பற்றிப் பிடிக்கும். இக்கரையில் முதலில் கொப்பைப் பிடித்துத் தொங்கிய குரங்கு ஊஞ்சல் போன்ற ஆட்டம் நிற்கும் வரை பொறுத்திருந்தது. நிதானமாகத் தன் கையை மெதுவாகத் தளர்த்தும். குரங்குகள் தொங்கும் மரத்தின் அருகே ஆற்று நீரானது சலசலவென்ற சத்தத்துடன் பாய்ந்தோடியது.

01. மேற்குறித்த விபரணம் எப் பிராணியின் செயற்பாடு பற்றிக் குறிப்பிடுகின்றது?

...................................................................................................

02. மரங்கள் எவ்வாறு வளர்ந்துள்ளன? ..........................................................

03. 'மரங்கள்' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ..........................................

04. 'வேகமாக' என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக. ..........................................

05. பந்தியிலுள்ள சினைப் பெயர் ஒன்றை எழுதுக. ..........................................

06. அ.்.றிணை பலவின்பால் பெயர்ச்சொல் யாது? ..........................................

07. எழுத்துப் பிழைகள் அற்ற சொல்லின் கீழ் கீறிடுங்கள்
i. வெள்ளம் / வெள்லம் ii. தீவாளி / தீபாவளி
iii. பாவற்காய் / பாகற்காய் iv. இங்கனம் / இங்ஙனம் v. தேனீர் / தேநீர்

08. ஒத்தகருத்து, எதிர்கருத்துச் சொற்களை எழுதுங்கள்

| சொல் | ஒத்தகருத்து | எதிர்கருத்து |
|---|---|---|
| i. இன்பம் | ......................... | ......................... |
| ii. காடு | ......................... | ......................... |
| iii. பெரிய | ......................... | ......................... |
| iv. அழகான | ......................... | ......................... |
| v. சென்றனர் | ......................... | ......................... |

09. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களை மீண்டும் சரியாக எழுதுங்கள்

i. போல / பரவுகின்றன / மீன்களைப் / கடலிலுள்ள / வானத்திலுள்ள / நட்சத்திரங்கள்

...................................................................................................

ii. இயற்கை / அற்புதமே / அனைத்தும் / அன்னையின் / படைப்பில்

...................................................................................................

iii. அரசன் / செய்தான் / ஆட்சி / நாட்டை / தவறாது / நீதி

...................................................................................................

10. தரப்பட்ட கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.

i. ஒற்றுமையே பலம் - ..........................................................

ii. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல் - ..........................................................

- **பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை எழுதுங்கள்.**

11. புண்படுத்தல் - ..........................................................

12. பூசி மெழுகுதல் - ..........................................................

13. நட்டாற்றில் கைவிடல் - ..........................................................

- **தரப்பட்ட வாக்கியங்களை பன்மை வாக்கியமாக எழுதுக.**

14. அந்தப் பாலம் மிகவும் நீளம் கூடியதாகும்.

...................................................................................................

15. காட்டில் மான் கூட்டம் அலைந்து திரிந்தது.

...................................................................................................

16. கடற்கரையில் மீனவன் மீன் பிடித்தான்.

...................................................................................................

- **வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச்சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

17. காகங்கள் காலையில் .................................... (கரைந்தன / கரைந்தது)

18. சூரியன் காலையில் .................................... (உதித்தது / உதித்தன)

19. பின்வரும் ஒவ்வொரு உருவினதும் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.





i. .............................. ii. ..............................

20. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தை தமிழில் எழுதுக.

i. கிரவா அம்ப கனவா :- ..........................................................

ii. அபி பாசலட யனவா :- ..........................................................

**II.**

21. அக்காவிடமுள்ள நெல்லிக்கனிகளில் ½ பங்கை தங்கையிடம் கொடுத்தாள். தங்கையிடம் உள்ள நெல்லிக்கனிகள் 9 எனின் அக்காவிடமிருந்த கனிகளை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

...................................................................................................

22. மு.ப. 8.55 மணிக்கு புறப்பட இருந்த புகைவண்டி 15 நிமிடம் தாமதமாகி புறப்பட்டது. அது வந்தடைந்த நேரம் பி.ப. 2.40 எனின், பிரயாணத்திற்கு செலவழித்த காலம் எவ்வளவு?

.................. மணி .................. நிமிடம்

23. எண் கோலத்திற்கிணங்க அடுத்து வரும் எண்ணை எழுதுக. 4, 12, 20, 28, ........

பின்வரும் எண்களை ஒழுங்குபடுத்தினால் நீங்க வேண்டிய எண் எது?
4, 7, 13, 19, 25, 49, ..................

24. ஒரு பெட்டியில் 6 விசுக்கோத்து பக்கற்றுக்கள் அடுக்கலாம். 708 விசுக்கோத்துப் பக்கற்றுக்களை அடுக்க எத்தனை பெட்டிகள் தேவை?

...................................................................................................

25.




வட்டத்தினுள் தரப்பட்டுள்ள எண்களின் 7 இன் பெருக்கங்களைத் தெரிந்து எழுதுக.

...................................................................................................

26. தரப்பட்டுள்ள உருவில் ½ பகுதியை நிறந்தீட்டுக.



27. பின்வரும் தகவல்களுக்கிணங்க இடைவெளி நிரப்புக.
1kg ரூபா 98.00 வீதம் 500g சீனி
1kg ரூபா 280.00 வீதம் 250g பாசிப்பயறு
1*l* ரூபா 280.00 வீதம் 750ml தேங்காய் எண்ணெய்
1kg ரூபா 90.00 வீதம் 2kg வெங்காயம்

i.

| பொருட்கள் | ரூபா. | சதம் |
|---|---|---|
| சீனி | 49 | 00 |
| பாசிப்பயறு | ........... | ........ |
| தேங்காய் எண்ணெய் | 210 | 00 |
| வெங்காயம் | ........... | ........ |

ii. ஒருவரிடம் ரூபா. 500.00 பணம் இருப்பின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வாங்குவதற்கு மேலதிகமாக எவ்வளவு பணம் தேவை?

...................................................................................................

28. தரம் 5 வகுப்புகள் இரண்டில் உள்ள மாணவர்கள் 65 பேரில் இறுதித் தவணைப் பரீட்சையில் கணித பாடத்திற்கு பெற்றுள்ள புள்ளிகள் கீழ்க் காணப்படும் வரைபில் காட்டப்பட்டுள்ளது அதற்கிணங்க வினாக்களுக்கு விடை எழுதுக.




i. 25 புள்ளிக்குக் குறைவான புள்ளி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..................................................

ii. 76 -100 இற்கும் இடையில் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களது எண்ணிக்கை யாது?

..................................................

iii. 51 -75 இடையிலான புள்ளிகள் பெற்ற மாணவர்களது எண்ணிக்கையை வரைபில் குறித்து நிழற்றுக.

29. ஆறு சம பக்கங்களைக் கொண்ட திண்ம உருவின் பெயர் குறிப்பிடுக. ............

**III. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. விரைவாக வாடும் பூ
i. கடதாசிப் பூ ii. பவள மல்லிகை iii. அந்தூரியம்

31. கிளைகளின் ஓரங்களில் மட்டும் காய்க்கும் தாவரம்
i. விளிம்பிக்காய் ii. காமரங்காய் iii. பலா

32. பழ வகைகளை பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறந்த முறை
i. புகையூட்டல் ii. முற்றிப் பழுக்கவிடல் iii. மருந்தடித்தல்

33. பாரம்பரிய முறையில் கிருமிநாசினியைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வித்து
i. வேப்பம் வித்து ii. பூசணி வித்து iii. ஆமணக்கு வித்து

34. தாவரமொன்றின் வேரையும் தண்டினையும் சேதப்படுத்தும் பிராணி
i. பன்றி ii. மண்புழு iii. கறையான்

35. சர்வதேச தரச்சான்றிதழைக் குறிப்பது
i. CFL ii. ISO iii. EXP

36. இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் இரட்டை இதழ்கொண்ட பூ
i. அலரிப் பூ ii. ஓகிட் பூ iii. பொப்பி மலர்

37.



படத்தில் காட்டப்பட்டுள்ள தச்சு உபகரணம்
i. கல் சுத்தியல்
ii. கவர்ச் சுத்தியல்
iii. குறடு

38. தேசிய இலட்சிணையில் சூரிய சந்திரனுக்கு இடையில் இருப்பது
i. நிறைக்கலசம் ii. தர்ம சக்கரம் iii. பலாப்பொத்தி

39. பின்வருவனவற்றுள் தனிப்பட்ட பாவனைக்குள் அடங்காதது
i. சீப்பு ii. கைக்குட்டை iii. நாற்காலி

40. வேப்பம் பூ பூக்கும் மாதம் எது?
i. ஆடி ii. ஐப்பசி iii. சித்திரை

41. பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மையாக அமைவது எது?
i. நிழல் கிடைத்தல் ii. வித்துக்களைப் பரப்ப உதவுதல்
iii. பாதுகாப்பு கிடைத்தல்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

42. ஔடதத்திற்குப் பயன்படுத்தாத இலை பின்வருவனவற்றுள் எது?
i. வெண்டியிலை ii. கறிவேப்பிலை iii. சாத்தாவாரி

43. பின்வருவனவற்றுள் அதிக கால்கள் உள்ள உயிரினம்
i. சிலந்தி ii. மரவட்டை iii. நண்டு

44. வண்ணத்துப்பூச்சியின் முட்டைகளைக் காணக்கூடிய தாவரத்தின் பகுதி
i. இலையின் மேற்புறம் ii. இலையின் கீழ்ப்புறம் iii. பூவின் மேற்புறம்

45. மணலினுள் புதைப்பதன் மூலம் பேணிப் பாதுகாக்கப்படும் உணவு
i. அப்பிள் ii. பாகற்காய் iii. எலுமிச்சம்பழம்

46. தலைக்கவசம், கையுறை, காற்காப்பு என்பன அணிந்து விளையாடும் விளையாட்டு எது?
i. காற்பந்தாட்டம் ii. கரப்பந்தாட்டம் iii. கிரிக்கெற்

47. நீராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவு அல்லாதது
i. பிட்டு ii. தோசை iii. இடியப்பம்

48. அசுத்தமான உணவு, நீர் உட்கொள்வதால் பரவும் நோய்கள்
i. கொலரா, சீதபேதி ii. வாந்திபேதி, சின்னமுத்து
iii. கழிச்சல், கொப்பளிப்பான்

49. பேருந்தில் ஆசனம் ஒதுக்கப்படாதோர்
i. அங்கவீனர்கள் ii. சிறுவர்கள் iii. கர்ப்பிணித் தாய்மார்கள்

50. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும்போது நிகழாதது எது?
i. ஒலி எழும் ii. நீர் ஆவியாகும் iii. நீர் குளிர்ச்சியடையும்

51. இலங்கையில் உள்ள பின்வரும் மாகாணங்களில் கரையோர மாகாணம் எது?
i. மத்திய மாகாணம் ii. ஊவா மாகாணம் iii. கிழக்கு மாகாணம்

52. இலங்கையிலே 'தாமரைக் கோபுரம்' அமைந்துள்ள நகரம்
i. கொழும்பு ii. அம்பாந்தோட்டை iii. கண்டி

53. பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் அல்லாதது
i. பட்டாசு கொளுத்துதல்
ii. பாதையில் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்
iii. புகையிரதத் தண்டவாளத்தின் வழியே நடந்து செல்லல்

54. தேய்வுற்றிருந்த நிலையில் எண்ணெய் இட்டு பயன்படுத்தக் கூடியது
i. மேசை ii. திரைச்சீலை iii. கப்பி

55. பாதுகாப்பிற்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் திறன் கொண்ட பிராணி
i. நத்தை ii. எலி iii. அணில்

56. பின்வரும் இலைகளுள் ஒத்த வடிவ இலை அல்லாதது
i. அகத்தி ii. தொட்டாற்சுருங்கி iii. வெண்டி

57. பச்ச வளையல் தொட்டு ஏலேலோ... என்பது எவ்வகைப் பாடலாகும்?
i. சேனைப்பாடல் ii. அரிவு வெட்டுப் பாடல் iii. மீனவர் பாடல்

58. ஆதிகாலத்தில் நீரைச் சுத்தஞ் செய்த முறை
i. குளோரீன் இடுதல் ii. வடிகட்டியைப் பயன்படுத்துதல்
iii. கரியை நீரில் இடுதல்

59. 
படத்தில் காட்டப்பட்டுள்ள வடிவமுடைய திருகாணியைக் கழற்றுவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்
i. சுத்தியல்
ii. பூமுனைத் திருப்புளி
iii. பொதுவான திருப்புளி

60. "வீட்டுத்தோட்டம் செய்வதால் கிடைக்கும் நன்மைகள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

## கடந்த வார (09.02.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 2 | 21. 2 | 31. 1 |
| 02. 1 | 12. 2 | 22. 2 | 32. 2 |
| 03. 2 | 13. 1 | 23. 3 | 33. 2 |
| 04. 1 | 14. 2 | 24. 3 | 34. 2 |
| 05. 3 | 15. 1 | 25. 1 | 35. 2 |
| 06. 2 | 16. 2 | 26. 2 | 36. 2 |
| 07. 2 | 17. 2 | 27. 2 | 37. 2 |
| 08. 1 | 18. 2 | 28. 1 | 38. 1 |
| 09. 3 | 19. 1 | 29. 2 | 39. 3 |
| 10. 3 | 20. 2 | 30. 1 | 40. 1 |

# பூவரசங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை

### மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றையதினம் (15) மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

மாந்தை கிழக்கின் பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

விவசாயம், காணி, வனவளத் திணைக்களம், நன்னீர் மீன்பிடி, தொடர்பான பிரச்சினைகள் முதன்மையாக கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பாண்டியன்குளம் பாடசாலையில் உயர்தர சகல பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு பிரதேச அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.



மேலும் மூடப்பட்டுள்ள மாந்தை கிழக்கின் பூவரசங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வீதி அபிவிருத்திகள், பயிர் அழிவுகள் தொடர்பாகவும் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.

# வடக்கின் உதயம்

## யாழ்.பொலிஸ் நிலைய வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு



(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய வருடாந்த பொலிஸ் அணிவகுப்பும், பொலிஸ் பரிசோதனையும் நேற்றைய தினம் நடைபெற்றது. யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த பரிசோதனைகளை முன்னெடுத்தார். அதனை தொடர்ந்து பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது.

அத்துடன் பரிசோதனையின் போது, யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் சீருடைகள், ஆயுதங்கள் வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டதுடன் பொலிஸாருக்கு விசேட அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விக்கிபீடியா பற்றிய கருத்தரங்கு



தமிழ் விக்கிபீடியா பற்றிய கருத்தரங்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் ச. லலீசன் தலைமையில் கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது தமிழ் விக்கிப்பீடியாவை முதன் முதலில் உருவாக்கிய இணுவிலூர் இ. மயூரநாதன் மற்றும் பொறியியலாளர் மு.சிவகோசரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். ஆசிரிய மாணவர்களுக்கு விக்கிப்பீடியாவில் தரவேற்றம் செய்வது தொடர்பான செயல்முறை சார்ந்த பயிற்சியை வழங்கினர்.

300 இற்கும் மேற்பட்ட மொழிகளில் விக்கிபீடியா காணப்பட்டாலும் தமிழில் அதன் பயன்பாடு 60ஆவது இடத்தில் இருப்பதாக மயூரநாதன் தெரிவித்தார்.

இலங்கை தமிழியல் சார்ந்த பதிவுகளை விக்கிபீடியாவில் எழுதுவதற்கு ஆர்வம் உள்ளோர் முன் வர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

## சீ தமிழ் வெற்றியாளர் கில்மிசாவுக்கு மாபெரும் கௌரவிப்பு விழா



தமிழகத்தின் சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப போட்டி வெற்றியாளர் இசைக் குயில் கில்மிசாவுக்கு மாபெரும் கௌரவிப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 03 மணிக்கு வட/ அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அனாதரட்சகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை எழுத்தாளர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்தவுள்ளார். முதன்மை விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பங்கேற்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறை விரிவுரையாளர் கலாநிதி சியாமளாங்கி கருணாகரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் வேல்நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்த்துரைகளை கரவெட்டி பிரதேச வைத்திய அதிகாரி வே.கமலநாதன், ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற பணிப்பாளர் சி.வன்னியகுலம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஆசிரியை திருமதி.கீதாமணி கிரிதரன், அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின் செயலாளர் நா.குமணதாசன், ஓய்வுநிலை விமானப் பொறியியலாளர் ஆ.சிவலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

## யாழில் ஐஸ் கிறீமுக்குள் தவளை; சுகாதார பரிசோதகர்கள் தீவிர விசாரணை

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றில் விற்கப்பட்ட ஐஸ்கிறீமில் தவளையொன்று இருந்தமை தொடர்பில் சுகாதார பரிசோதகர்களினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செல்லவச்சந்நிதி முருகன் கோவில் , சூழலிலுள்ள ஐஸ் கிறீம் விற்பனை நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் ஒருவர் ஐஸ்கிறீமை வாங்கிய போது அதனுள் தவளையொன்று இருந்துள்ளது.

இதனையடுத்து இதுதொடர்பில் சுகாதார பிரிவினருக்கு அறிவித்துள்ளனர். அதற்கமைய உத்தியோகத்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழில் தற்போது அதிகளவான வெப்பமான காலநிலை நிலவுவதனால் சந்நிதி ஆலயத்திற்கு செல்வோர் குளிர்பானங்களை அருகிலுள்ள உணவகங்கள் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து பருகி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களின் சுகாதாரம் மற்றும் நீரின் தூய்மை என்பவை தொடர்பில் சுகாதார பரிசோதகர்கள் கவனம் செலுத்தி, சோதனை நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரிய தமிழ் கலாசார பயிற்சிப் பட்டறை

(யாழ்.விசேட நிருபர்)



தொல்லியல் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் பாரம்பரிய தமிழ் கலாசாரம் தொடர்பான விரிவுரை மற்றும் பயிற்சி பட்டறை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கோட்டையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் பா.கபிலன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன் வளவாளராக கலாசார திணைக்கள உத்தியோகத்தர் மார்க்கண்டு அருட்செல்வன் பங்குபற்றினார். யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## மோட்டார் சைக்கிள்– இ.போ.ச பஸ் மோதி விபத்து

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் ஏ 9 வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மோட்டார் சைக்கிளுடன் மோதி இலங்கை போக்குவரத்து சபை பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சங்கவி சினிமா மற்றும் தியெட்டர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மற்றும் தினகரன் வாரமஞ்சரி, தினகரன் பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன் கலை இலக்கியம் சமூகவியல் சார்ந்த ஆளுமை விருது வழங்கும் வைபவம் கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் தினகரன் வாரமஞ்சரி மற்றும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண சபையின் முதல்வர் சரத் ஏக்கநாயக்க கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக பேராதனை துரை மனோகரன், தேசமானிய பெ. பழனியப்பன், கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர் மக்கள் மாமணி ஏ. சிவசுப்பிரமணியம், மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் நாடகக் கலைஞர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், சமூகப் பணியாளர்கள் எனப் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கண்டியைச் சேர்ந்த சமூகத்திற்காகப் பங்காற்றி வருகின்ற திருமதி சந்தர வதனா ரட்ணராஜ குருக்கள் மற்றும் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் விசேட அம்சமாக குருத்துவப் பணியாளர், சமூகச் செயற்பாட்டாளர், நல்ல சமயக் கிரியைகளை நேர்த்தியுடனும் கடவுள் இறைபக்தியோடும் திறன்படச் செய்யக் கூடியவர். இவர் இத்தகைய பணிகளை நீண்ட காலமாக அயராமல் செய்து வருவதன் காரணமாக கொழும்பிலுள்ள சங்கவி சினிமா மற்றும் தியெட்டர் நிறுவனத்தினர் கண்டியில் நடத்திய ஆளுமை விருது வழங்கும் விழாவில் குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வரக் குருக்களுக்கு இந்நிகழ்வில் ஆளுமை விருது வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சமூக மேம்பாட்டுக்காக எப்போதும் உழைக்கும் குருத்துவப் பணியாளர்**

கலாநிதி வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்கள், இந்தியாவிலுள்ள உலக பல்கலைக் கழகத்தினால் ஏப்ரல் 1 2023 கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற அஹச ஊடக குழுமத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை டொப் 100 விருது, அப்துல் கலாம் ஞாபகார்த்த அறக்கட்டளை விருது,

சமய குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்களின் சமயப் பணியின் பெறுமதியினை மதித்து அவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவருக்கு வழங்கப்பட்ட ஆளுமை விருது எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

சமய கிரியையின் மேம்பாட்டுக்கும், பொதுவாக சமூகப் பணிகளுக்கும் இவர் ஆற்றும் பங்களிப்பு அளப்பரியவை. இத்தகைய சிறப்புமிக்க சமய குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் கண்டியில் சங்கவி சினிமா மற்றும் தியெட்டர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மற்றும் தினகரன் வாரமஞ்சரி, தினகரன் பத்திரிகையின் ஊடக அனுசரணையுடன ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

நாடறிந்த நல்ல குருத்துவப் பணியாளர், சமூகப் பணியாளர் என இன்னும் பலதரப்பட்டவர் என விரியும் பெரும் ஆளுமைகளை பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்கள் கொண்டுள்ளார் என்று கூறலாம். இதனால் அவர் சமய பணிகள் மட்டுமல்லாது சமூகச் செயற்பாட்டுத் திறனிலும் மேன்மையடைந்தவராகக் காணப்படுகின்றார். இவர் குறித்து தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்களுடைய ஆரம்ப குடும்ப வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

ஒருவர் மரணம் எய்தவுடன் 31 அந்தியேட்டி கிரிகைகளைச் செய்வது வழக்கம். அத்துடன் 2020 களில் இருந்து மரண கிரியைகளும் , செய்து வருகின்றேன். இவை கீரிமலையில் மட்டுமல்ல இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களுக்குச் சென்று மரணச் சடங்குகளைச் செய்து வருகின்றேன்.

**உங்கள் திருமணம் பற்றிக் கூற முடியுமா?**

2005 இல் நான் திருமணம் செய்தது சொந்த மாமாவின் மகள் ஆவார். சொந்த மச்சாள். அவர் நடன ஆசிரியை. அவர் பெயர் சாந்திமதி. வடமராட்சி புலோலி புத்தளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கின்றார். மூன்று பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகன் விதுரன். இவர் இம்முறை க. பொ. த. சாதாரணக்கு பரீட்சைக்குத் தோற்ற



வரும் மிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**நீங்கள் சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

மரணக் கிரியைகளின் போது சைவ சமயத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றி பல பேர் தெரியாமல் உள்ளனர். மரண சடங்கில் செய்ய வேண்டிய முறைகள் பற்றி வெளிப்படையான சில கருத்துக்களைச் சொல்லி வருகின்றேன். அதாவது இன்னது செய்யலாம். இன்னது செய்யக் கூடாது என்று சொல்லி வருகின்றேன். மரண வீட்டுக்குச் சென்றால் பயத்தினால் கோயிலுக்குச் செல்ல மாட்டார்கள். ஆனால் தகனம் செய்த பின்பு தாராளமாகக் கோயிலுக்குச் செல்லலாம். அதாவது அங்கு சென்ற பின் நாங்கள் குளித்து முழுகிய பின் அன்றைய தினமே கோயிலுக்குச் செல்ல இயலும். இது சில பேருக்குத் தெரியாது. இப்படியான சில தெளிவுகளை ஏற்படுத்தி வருகின்றேன். தகனம் செய்தால் அன்றைக்கே கோயிலுக்கு போகலாம்.

மரணக்கடைசிக் கிரியைகளை சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். அதைச் செய்யக் கூடாது. இதைச் செய்யக் கூடாது என்ற வாதப் பிரதிவாதங்களை தவிர்த்து விட்டு சரியான முறையிலுள்ள விடயங்களை ஆராய்ந்து மரண சமயக் கிரியைகளைச் செய்வதே மிகவும் பொருத்தமானதாக அமையும்.

எங்கள் சமூகத்தில் குருத்துவத்தை இரு வேறு பிரிவுகளாகப் பார்க்கின்றனர். குறிப்பாக இரண்டு சமயக் கிரியைகளையும் ஒரே குருக்கள் செய்யலாம். இது ஒரு முக்கியமான விடயம். திருமணச் சடங்குகள், ஆலயம் கும்பாபிஷேகங்கள் மகோற்சவம் போன்ற கிரியைகளைச் செய்கின்ற குருவே , அமரக்கிரியையான மரணச் சடங்குகளையும் அந்தியேட்டி கிரியைகளையும் செய்யலாம். இது சில மக்களுக்குத் தெரியாது. இன்பத்திலும் துன்பத்திலும் மத குருக்கள் கலந்து கொள்ளலாம். இதை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றனர். இது பற்றிய விழிப்புணர்வை எங்கள் சமூகத்தினர் அறிந்து கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது.



# கண்டியில் இலக்கியம், சமூகவியல் சார்ந்த ஆளுமை விருது வழங்கும் நிகழ்வு

யூ.என்.எச்.ஆர்.ஓ வின் வட மாகாண இந்து கலாசாரப் பணிப்பாளர் விருது பல தரப்பட்ட விருதுகள் பட்டங்கள், சான்றுகள், உயர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறார் என்றால் அவரது சேவையின் அடையாளம் ஆகும்.

தனது சமயச் சடங்கை மிக நேர்த்தியாகச் செய்து வருபவர். தம் குருத்துவ சேவையை தம் பிரதேசத்தில் மட்டுமல்ல நாடு பூராகவும் செய்து வருகின்றார். அதற்காக பல நிறுவனங்கள் அவருடைய உன்னதமான சேவைகளைக் கருத்திற் கொண்டு விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி அவரை கௌரவப்படுத்தி அவருடைய ஆளுமையின் சிறப்புக்களை பெருமைப்படுத்தி

**குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வர குருக்களுக்கு ஆளுமை விருது**

அப்பா வைத்தியலிங்கம் ஐயர். அம்மா காமாட்சியம்மா. பருத்தித்துறை, நெல்லந்தை தும்பளை என்ற இடத்தில் பிறந்தேன். வடமாராட்சி கிழக்கு குடத்தனை நாலாம் தரப் பிள்ளையார் கோயிலை ஐந்து தலைமுறையாக நாங்கள் நடத்தி வந்தோம்.

நான் சிவப்பிகாரசம் மகா வித்தியாலத்தில் ஆரம்பக் கல்வியினையும் ஆறாம் ஆண்டு முதல் க. பொ. த சாதாரணம் வரையிலும் வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றேன்.

நான் முதன் முதலில் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கோயிலில் 11 வயதில்

வுள்ளார். அடுத்தது மதுரன். அவருக்கு 13 வயது. அடுத்தது முகிலன். அவருக்கு 9 வயது. மூவரும் கல்வி பயிலுகின்றார்கள்.

**இதன் போது நீங்கள் எதிர் நோக்கிய சவால்கள்?**

கொரோனா தொற்றுக் காலத்தில் மரண கிரியைகளைச் செய்யும் போது பல்வேறு வகையிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மரணம் எய்திய ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் என்று கூறி சமயக் கிரியைகளில் ஈடுபட்ட என்னையும் எனது குடும்பத்தவர்கள் அனைவரும் சேர்த்து கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் சுய தனிமைப்படுத்தல் முகாமில் கொண்டு சென்று வைத்து விட்டார்கள். 15 நாள் வரையிலும் அங்கும் இருந்தோம். இதுதான் நான் எதிர்நோக்கிய பிரச்சினை எனக் குறிப்பிடலாம்.

**உங்கள் சமூகப் பணிகள் குறித்து கூறுவீர்களா?**

குருத்துவம் என்பது கூட ஒரு சமூக வேவையாகும்.











வருகின்றனர்.

சமய சமூகப் பணிகளில் ஈடுபடுவோர் அன்பும் பண்பும், நல்ல உள்ளமும், கருணையும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நல்ல உயர்ந்த மனமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதை குருத்துவப் பணியாளர் வைத்தியலிங்கம் ஐயர் ராஜேஸ்வரக் குருக்களிடம் காணலாம்.

ஒரு சமயப் பணியாளன் வரலாறு சாதனைகள், அவன் மனித சமூகத்திற்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற பங்களிப்புக்கள் என்பன மறக்கப்படவோ, மறைக்கப்படவோ கூடாத தடங்களாகும். அந்த வகையிலேயே எமது

1. பிரசித்த நொத்தாரிசு திரு.எச்.எம்.என்.எஸ்.உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.02.27 திகதியிட்ட ஈட்டுமுறி இல.301 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. எச்.எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2018.12.28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 336 ஆகியவற்றின் பேரில் கண்டி, பேராதனை வீதி, இல.267இல் அமைந்த ஆலோகா ரியல் எஸ்டேற் பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து ஐம்பத்து ஐந்து மில்லியன் ரூபாய் கடன் மீது ரூ.76,329,904.84 (எழுபத்தாறு மில்லியன் முந்நூற்று இருபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு ரூபாய் எண்பத்து நான்கு சதமும்) அத்துடன் ரூ.44,995,000.00 (நாற்பத்து நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு 15.96% வீதத்தில் 2022.10.05. தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் முப்பது மில்லியன் ரூபாய் கடன் மீது 2023.10.04 வரை முதலும் வட்டியும் ரூ.51,338,187.73 (ஐம்பத்தொரு மில்லியன் முந்நூற்று முப்பத்தெட்டாயிரத்து நூற்று எண்பத்தேழு ரூபாய் எழுபத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ.29,403,175.04 (இருபத்தொன்பது மில்லியன் நானூற்று மூன்றாயிரத்து நூற்றெழுபத்தைந்து ரூபாய் நான்கு சதம்) மீது ஆண்டுக்கு 25.25% வீதத்தில் 2022.10.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திரு. எச்.எம்.என்.எஸ். உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.02.27 திகதியிட்ட ஈட்டுமுறி இல.301, பிரசித்த நொத்தாரிசு திரு. எச். எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2018.12.28 திகதியிட்ட ஈட்டு முறி இல.336, ஆகியவற்றின் பேரில் ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாய் கடன் மீது ரூ.76,329,904.84 (எழுபத்தாறு மில்லியன் முந்நூற்றிருபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு ரூபாய் எண்பத்து நான்கு சதமும்) முப்பது மில்லியன் ரூபாய் கடன் மீது ரூ.51,338,187.73 (ஐம்பத்தொரு மில்லியன் முந்நூற்று முப்பத்தெட்டு ஆயிரத்து நூற்று எண்பத்தேழு ரூபாய் எழுபத்து மூன்று சதமும்) அத்துடன் 2023.10.05. தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும், இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பேராதனை மேற்தரக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை மஹநுவர கடவத் சதர பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைகளுள் கண்டி 257 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் டீ. எஸ். சேனாநாயக்க வீதியில் அமைந்ததும் வரிமதிப்பு இலக்கம் 206 தற்போதைய வரிமதிப்பு இலக்கம் 353ஐக் கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.எம். எச். நவரத்ன தயாரித்த 1976 செப்டெம்பர் 25 திகதியிட்ட வரைபடம் இல. 3159இல் எல்லை நிர்ணயித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் ஹரங்கொட விதானலேகெதர புஞ்சிமெனிகாவுக்கு சொந்தமான வரிமதிப்பு இல. 355, முன்னர் இல.205 ஐக் கொண்ட நிலமனையும் கிழக்கில் டீ எஸ் சேனாநாயக்க வீதி நடைபாதையும் தெற்கில் வரிமதிப்பு இல.351ஐக் கொண்ட நிலமனையும், மேற்கில் புகையிரதப் பாதை ஒதுக்கத்தைப் பிரிக்கும் கால்வாயும் எல்லைகளாகக் கொண்டு ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.9.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக் காணி கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் A 595/135ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   மேற்கூறிய காணி அண்மைய மீளளவையின் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

2. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைகளுள் கண்டி 257ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் டீ எஸ் சேனாநாயக்க வீதியில் அமைந்ததும் தற்போதைய வரிமதிப்பு இலக்கம் 353 ஐக் கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜீ.ஆர். டபிள்யு.எம்.வீரக்கோன் தயாரித்த 2007 மார்ச் 24 திகதியிட்ட வரைபடம் இல. 15686 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய வரைபடம் இல.15686 இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் வரிமதிப்பிலக்கம் 355 ஐக் கொண்ட நிலமனையும் கிழக்கில் திருகோணமலை வீதி நடைபாதையும் தெற்கில் வரிமதிப்பு இல.351ஐக் கொண்ட நிலமனையும், மேற்கில் புகையிரதப் பாதை ஒதுக்கத்தைப் பிரிக்கும் கால்வாயும் எல்லைகளாகக் கொண்டு ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.9.25) அல்லது ஹெக்டெயர் பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு மூன்று நான்கு (ஹெக்.0.0234) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

**இலங்கை வங்கி,**
**பேராதனை**

**திரு.யு.ஆர். ஜயதிலக்க**
**பிரதான முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பனாகொடை மேற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520021 கண்ட இல. 49 துண்ட இல. 0178ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த 628/5, சித்து மின மாவத்த, மெதமண்டிய, பனாகொட ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட அமரதுங்க ஆரச்சிகே சோமலதா (2020.06.24) எனும் நபர் மரணமடைந்துள்ளார். அவரது உரிமையாளர்கள் 2024.03.16 ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாம் லேன் ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

Repeat Your ad For Better Offers

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - களுத்துறை

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 15.03.2024 வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை நிகழும் திகதிகள் - 16.03.2024 & 17.03.2024**

| ஏலவிற்பனை நிகழும் இடங்கள் | ஹொறணை - 041 | மதுகம - 070 | களுத்துறை - 039 |
|---|---|---|---|
| கிளைகள் | ஹொறணை, இங்கிரிய, பண்டாரகம, புலத்சிங்கல, பாணந்துறை | மதுகம, பெலவத்தை, பதுரலிய, நாபொட அளுத்கம | பேருவளை, மக்கோனா, களுத்துறை, வாத்துவ, பாணந்துறை நகரம் |
| சேவை மையங்கள் | மில்லனிய, மொறகஹஹேன, கோணபொல, பொக்குனுவிட்ட, ஹந்தபங்கொட, அளுபோமுல்ல. கெசல்வத்த, எழுவில | அஹலவத்தை, தொடங்கொட, மீகஹதென்ன, தர்கா நகரம், இத்தேபன | களுத்துறை வடக்கு, மத்திய சந்தி (Central Junction), போம்புவல, கட்டுக்குருந்த, நாகொட ஆஸ்பத்திரி சந்தி, மொரந்துடுவ, மோதரவில |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் - களுத்துறை**
**341, காலி வீதி, பாணந்துறை**
**தொலைபேசி இல. 038-2232438/2241596/4283182**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் – மாத்தறை

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி மாத்தறை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 15.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை செய்யப்படும் திகதி 16.03.2024**

| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | மாத்தறை உயன்வத்தை கிளை |
|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | மாத்தறை உயன்வத்தை, மொறவக்க, வலிகம, அக்குரஸ்ஸ, ஹக்மன, தெனியாய, கம்புருபிட்டிய, டிக்வெல்ல, மாத்தறை தர்மபால மாவத்தை, தெவிநுவர, ஊருபொக்க, வலஸ்கல, கந்தர |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | றுகுனு பல்கலைக்கழகம், யட்டியான, கொட்டுவேகொட, பிடபத்தர, ஓபாத, மிரிஸ்ஸ, தெலிஜ்ஜவில, தெய்யந்தர, கிரிந்த பல்லேகம, மாகந்துர, வல்கம, மாவரல, கோட்டகொட, ககனதுர |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.215 அநகாரிக தர்மபால மாவத்தை**
**மாத்தறை**
**தொலைபேசி இல. 041-2222822, 041-2222781, 041-2226481**

PEOPLE'S BANK
Pride of the Nation

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**BID No.: 108/T/2023**

### மட்டக்களப்பு, மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையத்திற்காக மேற்பார்வையாளர், எழுதுவினைஞர் அலுவலர், தொழில்நுட்பஆதரவு வழங்கும் அலுவலர், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர்கள் ஆகியோரை வழங்கல் – 2024/2025

2024/2025 ஆம் ஆண்டிற்காக மட்டக்களப்பு, மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையத்திற்காக மேற்பார்வையாளர், எழுதுவினைஞர் அலுவலர், தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் அலுவலர், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர்கள் ஆகியோரை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மேற்பார்வையாளர், எழுதுவினைஞர் அலுவலர், தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் அலுவலர், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர்கள் ஆகியோரின் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| தொ. இல. | வகுதி | பணிக்கு அமர்த்த வேண்டிய நபர்களின் எண்ணிக்கை | கடமைகளின் தன்மை | பணி நேரங்கள் | ஒப்பந்தக் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் அலுவலர் | 01 | Ensure service ability and first-level corrective/preventive maintenance of the Systems under the purview of Electronics/ Information Technology/Electrical/ Mechanical/Civil Engineering disciplines and compliance of safety requirements through remote assistance and site intervention of the relevant engineering officers. | 7 நாட்களிலுள்ள வாரத்தில் ஒரு நாளைக்கு 09 மணித்தியாலங்கள் (பணிமாற்று அடிப்படையில் - ஒரு பட்டியல் மாற்றிற்கு 1 எண்ணிக்கையான தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் அலுவலர்) | 02 வருடங்கள் |
| 2. | ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 08 | பொதிகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல்/ பொதுவான தொழிலாளர் வேலை /பெயிண்ட் பூசுதல்/மேசன் வேலை/குழாய் வேலை/ மின்னியல் வேலை/இலகு உபகரணங்களை செயற்படுத்தல் மற்றும் இரு சக்கர ட்ரக்டர்கள்/காணிச்சீராக்கல் வேலை | தினசரி 12 மணித்தியாலங்கள்/ வாரமொன்றிற்கு 5 நாட்கள் | 02 வருடங்கள் |
| 3. | சாரதிகள் | 01 | போக்குவரத்து | தினசரி 12 மணித்தியாலங்கள்/ வாரமொன்றிற்கு 7 நாட்கள் | 02 வருடங்கள் |
| 4 | சுகாதார சுத்திகரிப்பாளர்கள் (1 ஆண் மற்றும் 1 பெண்) | 02 | சுத்திகரித்தல் | தினசரி 12 மணித்தியாலங்கள்/ வாரமொன்றிற்கு 7 நாட்கள் | 02 வருடங்கள் |
| 5. | எழுதுவினைஞர் அலுவலர் | 01 | அனைத்து உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் கடிதத் தொடர்புகளை கையாளுவதற்கு எழுதுவினைஞர் அலுவலர் பொறுப்பாகவிருப்பர். நிதியிடல் தொடர்பான உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் ஆவணங்களை பராமரித்தல், முக்கிய முகாமைத்துவம், பரீட்சித்தல் ஆவணத்தை பராமரித்தல், களஞ்சியசாலை கையிருப்பை சமன்படுத்தல், மேலதிக உட்செல்லல் விண்ணப்பங்களை கையாளுதல், எரிபொருள் முகாமைத்துவம், பொருட்பதிவேடு முகாமைத்துவம் அத்துடன் மட்டக்களப்பு சர்வதேச விமானநிலைய உதவி செயற்பாட்டு முகாமையாளரினால் வழங்கப்படும் ஏனைய பணிப்புரைகள் | நாளொன்றிற்கு 8 மணித்தியாலங்கள்/ வாரமொன்றிற்கு 5 நாட்கள் | 02 வருடங்கள் |
| 6. | மேற்பார்வையாளர் | 01 | கம்பனியின் தேவைப்பாட்டிற்கமைவாக தொழில்நுட்ப ஆதரவு அலுவலர், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர்கள் ஆகியோரை கையாளுதலுக்கு பொறுப்பாகவும் தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் அலுவலர், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர் ஆகியோரின் வருகையை பராமரித்தல் ஆகியன மேற்பார்வையாளரின் பொறுப்பாகும். மேற்பார்வையாளர்கள் ஒப்பந்தக்காரர் பதவிநிலை, அலுவலர்களின் வருகையின்மை மட்டக்களப்பு சர்வதேச விமானநிலைய சீரான செயற்பாட்டை பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். | நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்கள்/ வாரமொன்றிற்கு 7 நாட்கள் | 02 வருடங்கள் |

மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமான மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3500 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதத்துடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.02.19 ஆம் திகதியிலிருந்து 2024.03.11 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் மிக ஆர்வமாகவிருப்பின் அவர்கள் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 மார்ச் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானசேவைகள் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் வங்கி உத்தரவாதப் பாங்கில் அமையப்பட்டதும் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் இலங்கை ரூபாவிற்கு சமமான (350,000 இ.ரூபா) கோரும் போது மாற்றக்கூடிய விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.02.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மட்டக்களப்பு, மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையத்தில் விலைமனு முன்னோடி விளக்கவுரை நடைபெறும்.

011-2623030 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் விமானநிலைய பிரதான முகாமையாளரிடமிருந்து எந்தவொரு மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் amrma@airport.lk என்ற மின்னஞ்சல் வழியாகவும் அல்லது எமது இணையதளமாகிய www.airport.lk ஐ பார்வையிடுவதன் மூலமாகவும் மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - கொழும்பு கிழக்கு மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி கொழும்பு கிழக்கு பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருட காலத்திற்கு அடகு வைக்கப்பட்ட 15.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை செய்யப்படும் திகதிகள் 16.03.2024 மற்றும் 17.03.2024

| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | பத்தரமுல்ல | கங்கொடவில |
|---|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | அத்துருகிரிய, பத்தரமுல்ல, கொலொன்னாவ கொட்டிகாவத்த. கடுவெல | மஹரகம, கொட்டாவ. நுகேகொட நகரம் கங்கொடவில் நுகேகொட பிடகோட்டே |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | தலவத்துகொட, மாலபே, ஹோகந்தர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெல்லம்பிட்டிய கொதட்டுவ, முல்லேரியா புதிய நகரம், நவகமுவ, பண்டாரவத்த | பன்னிப்பிட்டிய, பமுனுவ ஹபரக்கட, மத்தேகொட, கொஹுவல தெல்கந்த, ஜயவர்தனபுர அம்புல்தெனிய நாவல, ராஜகிரிய, அதுல்கோட்டே, தலபத்பிடிய |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்
பிராந்திய தலைமைக் காரியாலயம்
இல.177A, உயர் மட்ட வீதி (High Level Road), நுகேகொட
தொலைபேசி இல. 0112812260/0112854189

PEOPLE'S BANK
Pride of the Nation

## விலைமனுக்களுக்கானஅழைத்தல்

### வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**BID No.: 058/T/2023**

**SUPPLY, INSTALLATION, TESTING & COMMISSIONING OF 60 KVA 3 PHASE UPS with 15 MINUTE BATTERY BACKUP AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் **60 KVA 3 Phase UPS with 15 minute Backup** ஒன்றை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமான ஏழாயிரம் ரூபாவை (7,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதத்துடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.02.19 ஆம் திகதியிலிருந்து 2024.03.11 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவலும் www.airport.lk என்ற இணையதளத்திலும் இலவசமாக பரீட்சிப்பதற்கும் வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் மிக ஆர்வமாகவிருப்பின் அவர்கள் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 மார்ச் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரியமுறையில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் வங்கி உத்தரவாதப் பாங்கில் அமையப்பட்டதும் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கு சமமான (350,000 இ.ரூபா) கோரும் போது மாற்றக்கூடிய விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் சமாப்பிக்கப்படல் வேண்டும்.

2024.02.27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் புதிய பராமரிப்பு கட்டிட மாநாட்டு அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமும் நடைபெறும்.

011-2264103/ 011-2264106 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.stm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து எந்தவொரு மேலதிக தகவலையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

www.adz.lk it's what you want




ஸ்ரீலங்கா இன்ஷுரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் மற்றும் மேர்கன்டைல் கிரிக்கெட் சங்கம் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பில் விளக்கும் ஊடக சந்திப்பில் பங்கேற்ற இரு தரப்பு பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# தம்புள்ளையில் முதலாவது டி20 டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன



ரங்கிரி தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நாளை (17) நடைபெறவுள்ள இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 சர்வதேச போட்டிக்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துள்ளன.

முதல் டி20 போட்டிக்கான டிக்கெட்டுகளை பெறுவதற்கு டிக்கெட் கவுண்டர்களுக்கு செல்ல வேண்டாம் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவுறுத்தி இருந்தது. இதேநேரம் முதல் போட்டிக்கான டிக்கெட்டை வாங்குவதற்கு நேற்று பெரும் திரளான ரசிகர்கள் கூடினர்.

கடந்த ஐந்து ஆண்டுகளிலேயே தம்புள்ளையில் போட்டி ஒன்றை பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருப்பதாக ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு இடையிலான டி20 போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 17, 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் தப்புள்ளையில் நடைபெறவுள்ளது.

# ஒருநாளில் சாதனை படைத்த பத்தும் டெஸ்டில் ஆட ஆர்வம்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் சதம் பெற்று ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 2000 ஓட்டங்களை பெற்ற இலங்கை வீரராக பதிவான பத்தும் நிசங்க, டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதற்கு ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி தொடரை 3–0 என முழுமையாக வென்றது. இதில் முதல் போட்டியில் இரட்டைச் சதம் அடித்த பத்தும் நிசங்க நேற்று முன்தினம் 118 ஓட்டங்களை குவித்தார்.

எனினும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பத்தும் நிசங்க கூறியதாவது, "நான் டெஸ்ட் கிரிக்கெட்டையே அதிகம் விரும்புகிறேன். எனக்கு மற்றொரு வாய்ப்புக் கிடைத்தால் இரண்டு கைகளாலும் அதனை ஏந்திக் கொள்வேன்" என்றார்.

இதன்போது அவர் 52 இன்னிங்ஸ்களிலேயே 2,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார். முன்னதான 63 இன்னிங்ஸ்களில் 2,000 ஒருநாள் ஓட்டங்களை எட்டிய உபுல் தரங்கவே முதலிடத்தில் இருந்தார்.

எனினும் தான் சாதனை ஒன்றை முறியடிப்பது தெரியாமல் இருந்ததாக அவர் குறிப்பிட்டார். தனது முதலாவது பயிற்சியாளர் மற்றும் தந்தைக்கு நன்றி கூறுவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக இரட்டைச் சதம் பெற்ற முதல் வீரராக பத்தும் நிசங்க சாதனை படைத்தார். "இரட்டைச் சதம் பெறுவது எனது கனவாக இருந்தது. இவ்வளவு விரைவாக இதனை எட்டுவேன் என்று நான் நினைக்கவில்லை" என்றார்.







## சர்வதேச செய்திகள்

# சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் ரபாவை தாக்குவதில் இஸ்ரேல் உறுதி

## கெய்ரோ பேச்சுவார்த்தையிலும் முன்னேற்றமில்லை

சர்வதேச அளவில் கண்டனங்கள் அதிகரித்தபோதும் தெற்கு காசாவில் ரபா மீதான "வலுவான" இராணுவ நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பதில் இஸ்ரேல் உறுதி பூண்டுள்ளது. எனினும் 1.5 மில்லியன் பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இந்த நகர் மீதான தாக்குதல் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்று சர்வதேச அளவில் எச்சரிக்கைகள் வலுத்து வருகின்றன.

அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து வெளியிட்டிருக்கும் கூட்டு அறிக்கையில், "இந்தப் பாதையில் செல்ல வேண்டாம்" என்று இஸ்ரேலை வலியுறுத்தி இருப்பதோடு, பாரிய மனித உயிரிழப்புகளை தவிர்க்கும்படி கேட்டுள்ளன.

"இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்துவது அழிவுகரமாக இருக்கும்" என்று குறிப்பிட்டிருக்கும் அந்த நாடுகள், "பொது மக்கள் செல்வதற்கு வேறு இடம் இல்லை" என்றும் குறிப்பிட்டுள்ளன.

வடக்கு மற்றும் தெற்கு காசாவில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் முன்னெடுத்து வரும் இடைவிடாத தாக்குதல்களால் துரத்தப்பட்ட மக்களே தற்போது எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் சிக்கியுள்ளனர்.

வெளிநாடுகள் மற்றும் உதவி நிறுவனங்களின் அழுத்தங்கள் அதிகரித்தபோதும் ரபாவை நோக்கி முன்னேறி ஹமாஸ் படைப் பிரிவை ஒழிப்பதாக இஸ்ரேல் உறுதியாகக் கூறி வருகிறது.

"நாம் முழுமையான வெற்றி வரை போராடுவோம் என்பதோடு போர் வலயங்களில் இருந்து பொதுமக்களை வெளியேறுவதற்கு நாம் அனுமதித்த பின் ரபாவிலும் வலுவான படை நடவடிக்கை முன்னெடுக்கப்படும்" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த புதனன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு மத்தியஸ்தர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிலையிலேயே நெதன்யாகுவின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

**பேச்சில் இழுபறி**

எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் காசாவில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் அங்கு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் உடன்படிக்கை ஒன்றுக்காக தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

"கெய்ரோவில் எமது பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஹமாஸின் எந்த புதிய முன்மொழிவையும் இஸ்ரேல் பெறவில்லை" என்று நெதன்யாகு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. ஹமாஸ் தனது நிலைப்பாட்டை தளர்த்தும் வரை இஸ்ரேல் இந்தப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் இணையப் போவதில்லை என்று இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த செய்தி தொடர்பில் நேரடியாக பதில் அளிக்காத நெதன்யாகு, "ஹமாஸ் தனது மாயையான கோரிக்கைகளை கைவிட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். அதனை அவர்கள் கைவிட்டால் எம்மால் முன்னோக்கி நகர முடியும்" என்று கூறினார்.

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் பணிப்பாளர் வில்லியம் பர்ன்ஸ் கடந்த செவ்வாயன்று கெய்ரோ சென்று இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றதோடு அவருடன் இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட்டின் தலைவர் டேவிட் பர்னியும் இணைந்தார். ஹமாஸ் தூதுக்குழு ஒன்று கடந்த புதனன்று கெய்ரோ சென்றடைந்தது.

மேற்குக் கரையில் ஆட்சியில் உள்ள பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், விரைவான போர் நிறுத்தம் ஒன்றுக்கு இணங்குமாறு ஹமாஸ் அமைப்புக்கு அழைப்பு விடுத்திருப்பதோடு பலஸ்தீனர்கள் மேலும் அவலத்தை சந்திப்பதை தடுக்கும்படியும் கேட்டுள்ளார்.



**முற்றுகையில் மருத்துவமனை**

போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் நேற்று மூன்றாவது நாளை எட்டிய நிலையில் இஸ்ரேல் காசா மீதான தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்தது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 107 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கான் யூனிஸ் நகரில் இருக்கும் நாசர் மருத்துவமனையின் எலும்பியல் பிரிவு மீது நடத்தப்பட்ட செல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு பலரும் காயமடைந்ததாக அது குறிப்பிட்டது.

தெற்கு காசாவின் மிகப்பெரிய மருத்துவ வசதியாக உள்ள இந்த மருத்துவமனையை சுற்றி கடந்த பல வாரங்களால் உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இங்குள்ள மருத்துவ பணியாளர்கள், நோயாளர்கள் மற்றும் அடைக்கலம் பெற்றிருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை வெளியேறும்படி இஸ்ரேல் பிறப்பித்திருக்கும் உத்தரவுக்கு எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

கடினமான சூழலிலும் மருத்துவ பணியாளர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த மருத்துவமனை உணவு மற்றும் நீர் இன்றி ஒரு மாதமாக முற்றுகையில் இருப்பதாக நுர்ஸ் முஹமது அல் அஸ்டால் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

"இரவு நேரத்தில் டாங்கிகள் மருத்துவமனை மீது கடுமையாக தாக்குவதோடு நாசர் மருத்துவமனையை சூழவிருக்கும் கட்டடங்களின் கூரை மீது இருக்கும் ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகள் சூடு நடத்தும் நிலையில் இடம்பெயர்ந்த மூவர் கொல்லப்பட்டனர்" என்று அவர் கூறினார்.

இந்த மருத்துவமனையை அணுகுவது மறுக்கப்படுவதாகவும் அங்கிருக்கும் மருத்துவ பணியாளர்களுடனான தொடர்பை இழந்திருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

காசாவில் உள்ள மருத்துவமனைகள் "முழுமையாக நிரம்பி வழிகின்றன" என்று ரபாவில் இருந்து உலக சுகாதார அமைப்பின் பலஸ்தீன பிரதிநிதியான ரிக் பீபர்கோன் தெரிவித்துள்ளார்.

காசாவில் முழுமையாக இயங்கும் மருத்துவமனைகள் இல்லாதிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை ஒரு வாரத்திற்கு முன்னர் கூறியிருந்தது. எனினும் இஸ்ரேலிய தாக்குதல்களில் அங்கு 68,300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 28,663 ஆக அதிகரித்துள்ளது.

# இஸ்ரேலின் வான் தாக்குதலில் லெபனானில் பதினொருவர் பலி



தெற்கு லெபனானில் உள்ள கிராமங்கள் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதல்களில் ஆறு சிறுவர்கள் உட்பட பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு இஸ்ரேலிய வீரர் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பின் ரொக்கெட் தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் இராணுவம் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் அல் சவானா கிராமத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரு பெண் மற்றும் அவரது இரண்டு வயது குழந்தை கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நபாத்தி நகரில் கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் நான்கு சிறுவர்கள், மூன்று பெண்கள் மற்றும் ஒரு ஆடவர் கொல்லப்பட்டதாக அந்த நகர மருத்துவமனையை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. இதன்போது ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

பிறிதொரு தாக்குதலில் நான்கு ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்டதாக அந்தக் குழுவினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த புதன்கிழமை காலை லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது வீசப்பட்ட ரொக்கெட் குண்டுகளில் ஒரு இஸ்ரேலிய வீரர் கொல்லப்பட்டு மேலும் எட்டுப் பேர் காயமடைந்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இந்த பரஸ்பர தாக்குதல்களில் ஏற்கனவே 170க்கும் அதிகமான ஹிஸ்புல்லா போராளிகள் உட்பட 200 க்கும் அதிகமான லெபனானியர் கொல்லப்பட்டு சுமார் ஒரு டஜன் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் ஐந்து இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் பேரணி மீது துப்பாக்கிச் சூடு: ஒருவர் பலி



அமெரிக்காவின் மிசோரி மாநிலத்தில் சுப்பர் போல் விளையாட்டு நிகழ்ச்சிக்கு பின்னர் இடம்பெற்ற மக்கள் பேரணி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஒன்றுதிரண்டிருந்த பேரணி முடிவில் கென்சாஸ் நகரின் ரயில் நிலையத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

தமது தொகுப்பாளர் ஒருவரான லீசா லோபஸ் என்பவர் இந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாக உள்ளூர் வானொலி நிலையம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. இதில் ஆறு தொடக்கம் 15 வயது கொண்ட ஒன்பது சிறுவர்கள் துப்பாக்கி காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# இந்தோனேசிய ஜனாதிபதியாக பிரபோவோ சுபியான்டோ வெற்றி




இந்தோனேசிய ஜனாதிபதி தேர்தலில் பாதுகாப்பு அமைச்சர் பிரபோவோ சுபியான்டோ வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை (14) நடைபெற்ற தேர்தலில் 72 வயதான முன்னாள் சிறப்புப் படை தளபதி சுபியான்டோ சுமார் 58 வீதமான வாக்குகளை வென்றிருப்பதாக ஆரம்பக்கட்ட தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அவரின் போட்டியாளர்களான அனீஸ் பெஸ்வடன் மற்றும் கன்ஜர் பிரனோவோ ஆகியோர் முறையே 25 மற்றும் 17 வீத வாக்குகளையே வென்றுள்ளனர்.

இதற்கு முன் இரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை சந்தித்த சுபியான்டோ, சுஹார்டோ ஆட்சிக்காலத்தில் உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டவராவார்.

"இந்த வெற்றி அனைத்து இந்தோனேசியர்களின் வெற்றி" என்று தலைநகர் ஜகர்தாவில் ஆதரவாளர்கள் முன் சுபியான்டோ குறிப்பிட்டார்.

# அமெரிக்காவின் பொருளாதார துறையில் ஹேக்கர் ஊடுருவல்



அமெரிக்கப் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் கணினி வலையமைப்புக்களில் ஹேக்கர்ஸ் ஊடுருவியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமான எப்.பி.ஐயும் இணையப் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு பாதுகாப்பு முகவரகமும் இது தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன. இந்த ஹேர்க்கஸ் அமெரிக்காவின் முக்கிய பொருளாதாரத் துறைகளின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புக்களில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஊடுருவி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேர்ல்ட் டைபூன் என்ற ஹேக்கர்ஸ், முக்கியமான பல துறைகளின் உட்கட்டமைப்பில் ஊடுருவியுள்ளமையை சி.ஐ.எஸ்.ஏ கண்டறிந்துள்ளது.

தேசிய பாதுகாப்பு, பொருளாதார பாதுகாப்பு, பொது சுகாதாரம் மற்றும் பராமரிப்பு ஆகிய துறைகளில் மிக மோசமான சைபர் தாக்குதல்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு

### சமைக்கப்படாத உணவுப் பொருட்கள் வழங்குதல்

Q 61/24

- வதிவிட நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் நுகர்வுக்காக 2024/2025ஆம் வருடத்திற்கு நுகேகொடை, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக உணவுப் பொருட்களை வழங்குவதை உறுதி செய்ய முடியுமான இலங்கைப் பிரஜைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்களிடமிருந்து) பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-03-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. அதன் பிரகாரம், குறித்த வழங்குநர் புதிய மீன்கள், புதிய பழ வகைகள், இறைச்சி மற்றும் முட்டை, உலர் உணவுப் பொருட்கள், பேக்கரி உற்பத்திகள், சமைக்கப்பட்ட உணவு மற்றும் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் (பெக்கட், டின் மற்றும் போத்தல்) போன்றவற்றில் ஒன்றை அல்லது பலவற்றை வழங்கும் இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறைக்கமைவாக மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக ஆர்வங்காட்டும் வழங்குநர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு மற்றும் பணிப்பாளருக்கு நிறுவன கடிதத் தலைப்பிலான எழுத்துமூல வேண்டுதலொன்றை வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்ததன் பின்னர், 2024.02.16ஆம் திகதி முதல் 2024.03.06ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் விலைமனுப் பத்திரங்களை வழங்கல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- 2024/2025ஆம் வருடத்தில் உணவுப் பொருட்களின் அண்ணளவான தேவைப்பாட்டுத் தொகை மற்றும் தகவல்கள் விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.
- அரசாங்க வைத்தியசாலைகள், முப்படைகள் அல்லது சிறைச்சாலைகள் அல்லது தினசரி 500 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட மக்கள் உணவு உட்கொள்ளும் எந்த வளாகத்திற்கும் உணவு வழங்குவதில் மூன்று வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான செயல்திறன் அறிக்கைகள் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் கவனத்திற் கொள்ளப்படுவர்.
- பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08வது அத்தியாயத்தின் பிரகாரம் சமாகம் மெதுரயில் (PCA 03 Form) பெற்றுக்கொண்ட பதிவுச் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உரிய முறையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தபாலுறையொன்றினுள் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், "2024/2025ஆம் வருடத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு உணவு வகைகளை வழங்கும் ஒப்பந்தம்" எனக் குறிப்பிட்டு 2024.03.07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இங்கு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும் விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
- உத்தேச விலைமனுதாரர்கள் விலைமனுப் பத்திரங்களை எவ்வித கட்டணமுமின்றி வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- மேலதிக விபரங்களை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



# இலங்கை துறைமுக அதிகாரசபை

## அறிவித்தல்

## அகற்றப்பட்ட சிரட்டைகளை விற்பனை செய்தல்

கொழும்பு – 13, கொச்சிக்கடையில் அமைந்த இலங்கை துறைமுக அதிகாரசபையின் மத்திய சமையலறையிலிருந்து அகற்றப்படும் சிரட்டைகள் (ஒரு வாரத்துக்கு சுமார் 500 கிலோ கிராம்) 2024.03.01 ஆம் திகதி முதல் ஒரு வருட கால எல்லையினுள் விற்பனை செய்வதற்கு விலைகள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான நிபந்தனைகள் உள்ளடங்கிய குறித்த விண்ணப்பங்களை மீண்டும் செலுத்தப்படாத ரூபா 1000/= தொகையை அதிகாரசபைக்கு செலுத்தி, கொழும்பு – 13, கொச்சிக்கடை, மத்திய சமையலறை பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரின் (உணவு பானங்கள்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலைகள் சமர்பிக்கப்படுகின்ற அனைத்து விலைதாரர்களும் மீண்டும் செலுத்தப்படுகின்ற ரூபா ஐம்பதாயிரம் (ரூபா 50,000/-) வைப்புத் தொகையொன்றை செலுத்தி அதன் ரசீத்தின் பிரதியொன்றை டென்டர் விண்ணப்பத்துடன் இணைத்து 2024.02.28 ஆம் திகதிக்கு முன் சமையலறை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். டென்டர் பத்திரங்களை பொறுப்பேற்றல் அத்தினத்தில் 10.00 மணிக்கு நிறைவு செய்யப்படுவதோடு, அதன் பின் உடனடியாக டென்டர் பெட்டி திறக்கப்படும். டென்டர் திறக்கும் சந்தர்ப்பத்திற்கு குறித்த டென்டர் விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு பங்குகொள்ள முடியும்.

தெரிவு செய்யப்படும் டென்டர்தாரருக்கு அது தொடர்பாக பின்னர் பதிவுத் தபாலில் அறிவிக்கப்படுவதோடு, அவரின் வைப்புப்பணம் அன்றி ஏனைய விண்ணப்பதாரிகளின் வைப்பு பணம் விடுவிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் 2434557, 2482831, 2482797, 2483283, 2483409 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**
**நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி**

இணைப்பு 01

## 1998 பிரிவு 55 இன் 21 ஆம் எண் உரிமைப் பதிவுச் சட்டம் கடைசி உயில் இல்லாமல் சொத்துக்கான உரிமை கோரல்களை முன்வைப்பதற்கான அறிவிப்பு.

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நவகமுவ கிராமத்தின் 510605 வலய இலக்கம் 01 லொட் இல 217 இல் காணியின் உரிமையாளரான, 141 நவகமுவ, நிட்டம்புவ என்ற முகவரியில் வசித்த வருசப்பெருமகே டொன் விஜேசிறி என்பவர் 16.10.2018 அன்று மரணமடைந்தார். அவரது வாரிசுகள் 2024.03.16 திகதிக்கு முன்னர் இலக்கம் 49/1/B படடோல் வீதி, நிட்டம்புவவில் உள்ள பிராந்திய காணி உரித்துகள் நிருணயத் திணைக்களத்தில் சமுகமளிக்க வேண்டும்.

**பொது ஆணையாளர்**
**காணி உரித்துகள் நிருணயத் திணைக்களம்**

## இறுதி விருப்பாவணமின்றிய ஆதனம் தொடர்பில் உரிமை கோருபவர்கள் சமர்பிக்குமாறு கோரும் அறிவிப்பு

## 1998 இல.21 உரித்து பதிவுச் சட்டம் 55 பிரிவு

கம்பஹா மாவட்டம் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் நம்பதலுவ கிராம சேவகர் பிரிவில் கடஸ்ரல் வரைபட இல. 510619 பிராந்தியம் இல. 02 தொகுதி இல. 146 உடைய ஆதன உரித்துடைய இல.582/ஏ, நம்தலுவ, நிட்டம்பு இல் வசித்த மொரடுவகே விஜேசிரி என்பவர் 2020.06.18 தினம் மரணித்துள்ளார். அவருடைய வாரிசுகளுக்கு 2024.03.16 திகதிக்கு முன் 49/1/B, படதொலே வீதி, நிட்டம்புவ எனும் இடத்தில் இருக்கும் காணி உரித்து நிர்ணயக் காரியாலயத்தில் முன்வைப்பதற்கானது.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

# தென் மாகாண சபை – முதலமைச்சு

## பெறுகை அறிவித்தல்

தென் மாகாணசபையின் முதலமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே குறிப்பிடப்படுள்ள நிர்மாண வேலை விடயங்களுக்காக திறன் உடைய மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | வேலைகள் | மானிய தன்மை | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா (வெட் இன்றி) | தேவைப்படும் பதிவு | கேள்விப் பிணை ரூபா | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| மாத்தறை மாவட்டம் | | | | | | |
| 1 | மிதிகம ஆரம்ப மருத்துவ கண்காணிப்பு பிரிவின் வெளி நோயாளர் பிரிவு கட்டிடப் புதுப்பித்தல் | | 17,543,435.80 | C6 - C5 | 175,000.00 | 5,000.00 |
| 2 | எரங்கல ஆரம்ப மருத்துவ கண்காணிப்பு பிரிவின் வெளி நோயாளர் பிரிவு கட்டிடத்தின் கூரையை பழுதுபார்த்தல் மற்றும் காத்திருப்பு பிரதேசத்தின் நிர்மாணம் | ஆரம்ப சுகாதார சிகிச்சை சேவையை கட்டியெழுப்பும் திட்டம் (உலக வங்கி நிதியுதவி) | 12,804,413.22 | C6 - C5 | 128,000.00 | 3,500.00 |
| 3 | ஹக்மன ஆரம்ப மருத்துவ கண்காணிப்பு பிரிவின் வெளிநோயாளர் பிரிவு கட்டிடப் புதுப்பித்தல் | | 9,781,286.86 | C7 - C6 | 98,000.00 | 3,500.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் பிரகாரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்கள் வழங்கும் போது தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்படி வகுதியின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதிய, 03/2020 (i) மற்றும் 2021.01.11ம் திகதிய மற்றும் ரூபா 50 மில்லியனுக்கு குறைந்த செயற்றிட்டங்களுக்கான அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016(iii) மற்றும் 2021.02.18ம் திகதிய சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA GRADE) முன்னுரிமை மற்றும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றியும் கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.02.16 முதல் 2024.03.05 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக கேள்விப் பத்திரங்கள் மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் இவ் இலக்களுக்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

    091 - 4946020, 091 - 4946844

05. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கயை 2024.03.06 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண முதலமைச்சு 5ம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.03.06 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண முதலமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வியும் சமர்ப்பிக்கப்படும் பிணைளை இலங்கையின் வர்த்தக வங்கியிலிருந்து தென் மாகாண முதலமைச்சு செயலாளரின் பெயரில் பெற்றுக் கொண்ட 2024.03.06 முதல் 2024.06.18 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை அல்லது முதலமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் வழங்கப்படும் காசுப் பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை சமர்ப்பிக்கப்படும் கேள்வி பிணைகள் நிராகரிக்கப்படும்.

08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 77 நாட்களாகும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள், இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் உள்ளடக்கப்படுமாறு செலோடேப் ஒட்டியிருத்தல் வேண்டும். அதன் மூலப் பிரதியில் "மூலப்பிரதி" என்று குறிப்பிட வேண்டியதுடன் நகல்பிரதியில் "நகல்பிரதி" என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையையும் பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. குறைபாடுகளுடனான கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் கேள்விப் பிணைத் தொகை அரசுடமையாக்கப்படும். குறித்த கேள்விப் பத்திரங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. இப் பெறுகை சம்பந்தமாக பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் என்பதைக் கவனித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண முதலமைச்சு,**
**5ம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி**
**2024.02.15**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மாகாண சுகாதார சேவைகள் பணியகம் – சபரகமுவ

## Supply & Delivery of Intraocular Lenses/Consumables & Ophthalmic Solutions

கீழே குறிப்பிட்டுள்ள உருப்படிகளின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பாக சபரகமுவ மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணியக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| Item No. | Item Name | Quantity | Bid Bond Value (Rs) |
|---|---|---|---|
| 1 | Foldable Hydrophobic Intraocular lenses | 2000 | |
| 2 | Slit Knife – 2.2 mm single use | 2000 | |
| 3 | Methyl Cellulose for ophthalmic use 2.0 ml – 2.5 ml vials | 1500 | |
| 4 | Eye Drape with pouch | 2000 | |
| 5 | Balance Soult Solution (BSS) bottles – 500 ml | 1000 | |
| 6 | Methylene Blue/Trypan Blue | 2000 | |
| 7 | G. Tropicamide with Phenylephrine – Opththalmic Solution 1% | 1000 | |
| 8 | Proparacaine Hydrochloride 0.5% | 2000 | |
| 9 | G.Moxiflozacine 0.5% | 2000 | |
| 10 | G. Prednisolone Acetate | 2000 | |
| 11 | G. Ketorolac Tromethamine 0.5% | 2000 | **1% of the bid value** |
| 12 | 10 Nylon Sutures | 10 | |
| 13 | Black Silk Sutures | 10 | |
| 14 | Tegaderm Plasters | 20 | |
| 15 | Iris Hooks | 30 | |
| 16 | Leuco Plasters | 500 | |
| 17 | Cassettes for Alcon Centurion Silver Phaeco Machine | 100 | |
| 18 | Sodium Hyaluronate – 3% | 1000 | |
| 19 | Vitrectomy Cutters | 06 | |
| 20 | Capsular Tension Ring | 05 | |
| 21 | Carbachol Intraocular Solution vials | 05 | |

விலைமனுதாரர் Intraocular Lenses மற்றும் அல்லது Consumables ஆகியவற்றிற்காக இலங்கைக்கான சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட வழங்குநராகவிருத்தல் வேண்டும்.

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலமாக நடத்தப்படும்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்தகவலை இரத்தினபுரி, தர்மபால மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணியகம், மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரிடமிருந்து 2024 மார்ச் 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 045-2222322/045-2223270).

    **மாகாண பணிப்பாளர்,**
    **மாகாண சுகாதார சேவைகள் பணியகம்,**
    **இல. 75, தர்மபால மாவத்தை,**
    **இரத்தினபுரி.**

3. தகைமைகள் மற்றும் தேவைப்படுத்தல்கள்:
    - அ. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றவொரு கம்பனியாகவிருத்தல்.
    - ஆ. 2024 மார்ச் 07 ஆம் திகதிக்கு முன்னராக Intraocular Lenses/Consumables & Ophthalmic Solutions ஆகியவற்றின் விற்பனைகளில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம். கடந்த மூன்று வருடங்களில் ஆகக் குறைந்தது 1 (ஒன்று) ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரராக, உபஒப்பந்தக்காரராக அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக இருந்திருத்தல்.

    விலைமனுக்கோரல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. 2024 பெப்ரவரி 16 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 5 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அத்துடன் 2024 மார்ச் 06 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் இரத்தினபுரி, தர்மபால மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள சபரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். ஒரு விலைமனு ஆவணத்தின் வழங்கலுக்காக 5,000 ரூபா மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக அறவிடப்படும். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் மாகாண பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணியகம், சபரகமுவ என்ற பெயரில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
5. மேலேயுள்ள 02 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஆவணத்தை கையேற்றுக் கொண்ட சாரார்களுடன் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
6. கீழேயுள்ள 8 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறித்துரைக்கப்பட்டு 2024 மார்ச் 07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான தொகைக்கான விலைமனுப் பிணையொன்றுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுவை சமர்ப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலையங்கமானது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு: தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாணஸ சுகாதார சேவைகள் பணிப்பாளர், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

கவனமாக குறித்துக் கொள்ளவும்: மேற்கூறப்பட்டுள்ள உருப்படிகள் வழங்கப்படாத வேளைகளில் அல்லது மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து ஏற்பாடுகள் தாமதிக்கும் வேளைகளில் மேலேயுள்ள உருப்படிகள் கொள்வனவு செய்யப்படுமென உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணியகம்,**
**இல. 75, தர்மபால மாவத்தை,**
**இரத்தினபுரி.**
**16.02.2024.**
